தமிழ் நாகரிகத்திற்கு என்ன எதிர்காலம்?

தொகுப்பு 2



தமிழ் நேயம் 27

தமிழ் நாகரிகத்திற்கு என்ன எதிர்காலம்?

தொகுப்பு: 2 - தமிழ்நேயம்: 27

முன்னுரை

தமிழ் நேயம் - 26 இதழில் 'தமிழ் நாகரிகத்திற்கு என்ன எதிர்காலம்? என்ற என் கட்டுரையும் என் கட்டுரைக்கு எதிர்வினை என்ற முறையில் 13 நண்பர்கள் மற்றும் பெரியவர்களின் கருத்துரைகளும் இடம்பெற்றன. தமிழ் நாகரிகத்திற்கு இன்று நேர்ந்துள்ள நெருக்கடிகள் குறித்து தமிழ் உணர்வாளர்கள், தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் இயக்கத்தினர் கருத்துக்களை மேலும் பதிவு செய்யும் முறையில் பலருக்கும் மடல் எழுதினேன். 24 நண்பர்கள், தமிழறிஞர்கள் தந்த கருத்துரைகள் இந்த இதழில் இடம்பெறுகின்றன. இக்கருத்துரைகள் குறித்து என் எதிர்வினை என்ன என்பதை இங்கு சுருக்கமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1. உலகமயமாதல் தரும் சில வாய்ப்புக்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருத்துரைக்கும் நண்பர்கள், உலகமயமாதல் நம் நாகரிகத்திற்கு, வாழ்முறைக்கு எத்தகைய பேராபத்துக்களைச் செய்யும் என்பது குறித்துக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.
2. திராவிடஇயக்கக்கருத்தியலோடு இன்றும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிற நண்பர்கள் இன்றைய அரசியல் பொருளியல் சூழலில் மார்க்சியத்தின் இன்றியமையாத தேவைகுறித்து எத்தகைய மரியாதையும் கொள்வதாகத் தெரியவில்லை.
3. பழந்தமிழ் இலக்கியம், பண்பாடு, வரலாறு முதலியவை குறித்தும் கடந்த ஒரு நூற்றாண்டுக்கால அளவில் நவீனத் தமிழ் இலக்கியம் பெற்று வரும் வளர்ச்சிகள் குறித்தும் புதிய திறனாய்வு அணுகுமுறைகளைக் கொண்டு ஆய்வு செய்வதன் மூலம் தமிழ் மக்களின் வாழ்வியல் மேன்மை குறித்துத் திட்டமிடுவது பற்றிய அக்கறை தமிழ் உணர்வாளர்கள் என்று தம்மை மதிப்பவர்களிடம் சிறிதளவும் இடம் பெறவில்லை.
4. தமிழ்மக்களின் வாழ்வை அகத்திலும் புறத்திலும் சுரண்டுவதன் மூலம் தங்கள் ஆதிக்கத்தை மேலும் மேலும் கட்டமைத்துக் கொள்கிற அரசியல்வாதிகள், முதலாளிகள், மேட்டுக்குடிகள் ஆகியவர்களைப் பொருத்தவரை தமிழின் ஆக்கம் தேவையில்லை. இவர்களுக்கு ஆங்கிலம் இல்லாமல் முடியாது.
5. மாணவர் நெஞ்சிலும் மக்கள் வாழ்விலும் தமிழை, தமிழ் உணர்வைப் பதிவு செய்தாலொழிய தமிழுக்கு எதிர்காலம் இல்லை என்ற உணர்வு தமிழாசிரியர்கள், தமிழறிஞர்கள் நெஞ்சில் நிலைபெறவில்லை. வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவதே போதுமென்ற மிதப்பு அல்லது வெறுமை உணர்வில் பலர் தமிழை வைத்துத் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தகையவர்கள்தான் தமிழ்ச் சூழலை அடைத்துக்

கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இத்தகையவர்களின் தொகை சில இலட்சங்களில் முடிவடைந்து விடும். தமிழ் இல்லாமலும் இவர்கள் வாழ்ந்து விடலாம் என்று கருதுபவர்கள்.

6. அடித்தள மக்களுக்குத்தான் நீர் வேண்டும், நிலம் வேண்டும், காடுகள் வேண்டும், வாழும் உரிமை வேண்டும், இவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் முறையில் அரசியல், பொருளியல் வேண்டும். இவர்களுக்குத்தான் தமிழும் வேண்டும். இவர்கள் வாழ்ந்தால்தான் தமிழும் வாழும். இவர்களின் வாழ்வின் மேன்மையும் விடுதலையும் பற்றிச் சிந்திக்கிற தமிழன்தான் அசலான தமிழன். அந்நியர் ஆதிக்கத்தை இவனால் ஏற்கமுடியாது. அரசியல் வெறித்தனத்தை இவன் ஏற்கமாட்டான். வள்ளுவரும் இளங்கோவும் பாரதியும் பாரதிதாசனும் இவர்கள் நெஞ்சில்தான் வாழ்வார்கள். இத்தகைய உணர்வோடு கருத்துரைத்த நண்பர்களுக்கு என் நன்றி. கருத்து மாறுபாடு கொள்பவரோடு இன்னும் வெளிப்படையாக, விரிவாகப் பேசியாக வேண்டும்.

நன்றி!

15-10-2006

ஞானி

உள்ளே ...

கட்டுரையாளர்கள்

1. உழவர்கள் – தமிழ்த் தேசியத்தின் ஆணிவேர்

மு. குமரவேல் நடையணேரி

1. உலகின் முதல் தாய்மொழி என்னும் தகுதி பெற்றுள்ள சில மொழிகளில் தமிழும் ஒன்று என்கிற தொன்மைப் பெருமித உணர்விலிருந்து மட்டும் தமிழர்களாக நாம் நம்மை உணரவில்லை. *உலகில் உயிர்ம நேயம் நிலைத்திருப்பதற்குத் தமிழ் வாழ்ந்தாக வேண்டும்.* தனிநாடாக வாழ வேண்டுமென்கிற விருப்பத்திற்காக நாம் தன்னாட்சியை விரும்பவில்லை. *மெய்யான கூட்டாட்சிக்கும் தனிநாட்டுக்கும் பெரிய அளவுக்கு வேறுபாடுகள் இல்லை என்கிற புரிந்துணர்விலிருந்துதான் நாம் தமிழ்த் தேசியத்தை அணுகுகின்றோம்.*

தமிழ்த் தேசியம் என்பதை வெறும் ஒற்றைப் பரிமாணத்திலிருந்து அணுகுவதென்பது பன்முகத்தை மறுப்பதாகும். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தமிழோடு இணைந்து நிற்பதுதான் தமிழ்த் தேசியம். இத்தகைய தமிழ்த் தேசியம் என்பது சர்வதேசியத்திற்கு எந்த வகையிலும் எதிரானதோ முரண்பட்டதோ இல்லை. *சர்வதேசியம் முழுமை பெறுவதற்கே முன்நிபந்தனையாக இருக்கும் தகுதியுடையது தமிழ்த்தேசியம்.* இத்தகைய தேசியம் என்பது தொன்மை வாய்ந்த தேசியங்களுக்கு மட்டுமே உள்ள தனியுரிமை அல்ல. இளமையான தேசியங்களுக்கும் இதே உரிமை உள்ளது. பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து, வாழ்ந்து வாழ்வின் உச்சங்களையும், பாதாளங்களையும் கண்டு,

“பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

என்கிற முதிர்ச்சியான நிலையினை எட்டியுள்ளது தமிழ் நாகரிகம். எனவே சமத்துவம் என்பது தமிழ் நாகரிகத்திற்கு மிகவும் நெருக்கமானது. *உலகில் சமத்துவம் என்கிற கருத்தியல் பரவியதில் தமிழின் பங்கும் முதன்மையானது.* இந்தப் பெருமித உணர்வென்பது பலர் நினைப்பது போல் பழம் பெருமை பேசுவது அல்ல. இத்தகைய மேன்மை மிக்க தமிழ் நாகரிகம் இன்று சந்தித்து வரும் நெருக்கடிகள் ஏராளம்.

இன்று தமிழகத்தின் கிராமப்புறங்களில் பயணம் செய்தோமானால் நிலங்களை பல்வேறு தனியாட்களும், நிறுவனங்களும் வாங்கிக் குவிப்பதைப் பார்க்க முடியும். பல ஊர்களில் பெரும்பாலான நிலங்கள் விற்கப்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். *தமிழக மக்கள் நிலங்களில் இருந்து அன்னியமாவதென்பது, வாழ்க்கையிலும் அன்னியமாவதன் முதல்படி.*

“எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே – அதன்

முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே”

என்கிற பாரதியின் வரிகள் இன்று பழங்கனவாகி வருகின்றன. எல்லோரும் விற்ற பின்னர் நீ மட்டும் வைத்து என்ன செய்யப்போகிறாய் என்று எல்லோரிடமும் தனித்தனியே கூறி நிலம் வாங்கப்படுகின்றது. வாழ்விற்கு ஆதாரமான தமிழ் நிலம் விற்பனைப் பொருளாகி வருகின்றது. இப்படி நிலத்தை வாங்கிக் குவிப்போர் வேற்று மாநிலத்தவர்களாக இருந்தாலும் பச்சைத் தமிழராக இருந்தாலும் அதை எதிர்த்தாக வேண்டும்.

2. கல்விக் கொள்ளை

அண்மையில் கிராமத்தில் ஒரு பெரியவர் தனது குடும்பநிலை குறித்துக் கூறிய செய்தி பொருளாதாரம் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றது. அந்தப் பெரியவர் ஆடு மேய்க்கும் தொழில் செய்கின்றவர். தனது மகன் கோபித்துக் கொண்டு கோவை சென்று விட்டதாகவும் தொலைபேசியில்கூட பேசமறுக்கிறான் என்றும் வருத்தப்பட்டார். என்ன காரணம்? என்று கேட்டேன். தனது மகன் 12ஆம் வகுப்பு படித்து முடித்தவுடன் கணினிப் படிப்பு - இரண்டாண்டுக்கு சுமார் இரண்டு இலட்சம் செலவு செய்ததாகக் கூறினார். தற்போது மேற்படிப்புக்கென கல்லூரியில் விசாரித்து வந்த மகன் நான்காண்டு படிப்பு படித்தால்தான் முன்னர் படித்த இரண்டாண்டு படிப்புக்கு மரியாதையுண்டு என்கிறான். ஆனால், நான்கு இலட்சம் வரை செலவாகும் என்று மகன் சொல்லி இருக்கிறான். என்னிடம் அந்த அளவு வசதி இல்லை. ஆடுகள் முழுவதையும் விற்று, இருக்கிற கொஞ்ச நிலத்தையும் விற்றாலும் கூட அவ்வளவு பணம் வராது. போன வருடம் 50 ஆயிரம் செலவழித்து மகளுக்குத் திருமணம் செய்து வைத்ததாகக் கூறினார் பெரியவர். மகளின் திருமணச் செலவே ஐம்பதாயிரம்தான். மகனின் படிப்புக்கு மட்டும் 2 இலட்சம் ஏற்கெனவே செலவாகிவிட்டது. ஒரு குடும்பத்திலிருந்து கல்விக்கு இவ்வளவு பெரும் தொகை பிடுங்கப்படுமானால் ஊரகப் பகுதிகளின் பொருளாதாரம் வீழ்ந்து விடாமல் என்ன செய்யும்?

படித்து முடிக்கும் மாணவர்களில் உறுதியாக 60 சதம் மாணவர்களுக்கு வேலை இல்லை என்பதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். கல்வியின் பெயரால் நடக்கும் இந்தக் கொள்ளை குறித்த விழிப்புணர்வே நம்மிடம் இல்லை என்பது வேதனையளிக்கிறது. *நாடு அடிமை நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.* 300 வீடுகள் கொண்ட ஒரு கிராமத்தில், ஆண்டுக்கு கல்வி என்கிற பெயரில் மட்டும் குறைந்தது 1 கோடி பறிமுதல் செய்யப்படுகின்றது. இனி நுகர்பொருட்கள், வேதியுரங்கள், உயிர்க்கொல்லி நஞ்சுகள் என கிராமங்களிலிருந்து வெளியேறும் பொருளியலை நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது. ஒவ்வொரு நாளும் கிராமங்கள் சூறையாடப்படுகின்றன. நகரங்களிலும் இதுதான் நடைபெறுகின்றது.

இன்று தொடக்கப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் என்பது மாணவர்களின் கல்வித் தரத்தோடு எதிர்விகிதப் பொருத்தம் கொண்டதாகத்தான் இருக்கின்றது. ஆசிரியர் பணி என்பது பணம் சம்பாதிப்பதற்கான தொழிலாக மாறியுள்ள நிலையைக் காண்கின்றோம். 300 மாணவர்கள் படிக்கும் ஒரு பள்ளியில் ஆசிரியர்களுக்கான சம்பள வகையில் மட்டும் மாதந்தோறும் ஒரு இலட்சம் வரை செலவாகின்றது. இதே தொகையைக்கொண்டு கிராமப்புற மாணவர்களுக்குத் தரமான மேன்மையான ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற கல்வியை நாம் தரமுடியும். *இன்று கல்வி என்பது வேளாண்மையையும், உடல் உழைப்பையும் கேவலமாக எண்ணக்கூடிய ஒரு பண்பாட்டை மாணவர்கள் மத்தியில் விதைக்கின்றது.* படித்த மாணவர் மண்ணையும், சாணத்தையும் தொடக் கூச்சப்படுகிறார். இத்தகைய மதிப்பீட்டைத்தான் கல்வி உருவாக்குகின்றது. இது நாட்டை அழிப்பதன்றி வேறில்லை. உள்ளூர் ஆதாரங்களைக் கொண்டே தரமான மாற்றுக் கல்வியை நாம் உருவாக்க வேண்டும்.

3. தேவை – மக்கள் கல்விக் கழகம்

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மருத்துவம், நெசவு, வீடு கட்டுதல் போன்ற

வாழ்வின் ஆதாரமான தொழில்களை அடிப்படையாகக் கொண்டதாக கல்விமுறையை மாற்றியமைக்க வேண்டும். எனது தாத்தாவுக்கு மாட்டுக் கொட்டத்தில் கல் பதிக்கவும் தெரியும். வீட்டுக்கு மண் சுவர் வைக்கவும் தெரியும். எந்தப் பயிரை எப்போது விதைப்பது என்றும் தெரியும். கால், அரைக்கால் போன்ற பின்ன வாய்ப்பாடுகளை மனக்கணக்காகவே போடவும் தெரியும். இன்றைய நமது பார்வையில் எனது தாத்தா படிப்பறிவில்லாதவர். எனது தாத்தா படிக்காதவர் என்று சொல்வதை இன்றைய கல்விச்சூழலில் வைத்து வன்மையாக நான் மறுக்கிறேன். எனது தாத்தா தான் உண்மையான படிப்பாளி என்றும் நான் கூறுவேன். இந்தப் பட்டறிவிலிருந்து கல்வி குறித்த புதிய உரையாடலை நாம் தொடங்கலாம். *மக்கள் மயப்பட்ட கல்வி, மக்கள் மயப்பட்ட அறிவியல், தொழில்நுட்பம், போன்றவற்றை வளர்த்தெடுப்பதன் மூலம் சந்தைச்சுரண்டலை, அடிப்படையாகக் கொண்டு கட்டமைப்புக் கொண்டிருக்கும் ஆதிக்கத்துக்கு எதிரான வலுவான எதிர்ப்பை நாம் உருவாக்க முடியும்.*

பொறியியல் கல்வி என்பதற்கு ஏராளமான கல்விக்கட்டணம் விதிப்பதைப் பார்க்கின்றோம். ஒவ்வொரு 5 அல்லது 10 கிராமங்களுக்கு ஒரு மக்கள் தொழில்கல்விக் கழகம் அமைப்பதன் மூலம் கிராமங்களிலிருந்து வெளியேறும் கோடிக்கணக்கான பணத்தை நாம் நிறுத்தமுடியும். அதேநேரத்தில் இவர்களது கல்வி கொடுக்கின்ற தரத்தை விட உயர்ந்த தரத்திலான தொழில்நுட்பத் தேர்ச்சியை சர்வதேசத் தரத்திற்கு நாம் தரமுடியும். நமது மக்கள் தொழில்கழகத்திலிருந்து தேர்ச்சியடைந்து வெளியேறும் மாணவர்களுக்கு சர்வதேச அளவில் வேலைவாய்ப்பு காத்திருக்கும். ஆனால் அந்த மாணவர்களின் சேவை, சொந்த ஊருக்கே தேவையான ஒன்றாக இருக்கும். எனவே, கிராமத் தொழிற்கழகத்தில் அளிக்கப்படும் பயிற்சியில் சேருவதற்காக நகரத்திலிருந்தும் மாணவர்கள் வரும் நிலையை உருவாக்க முடியும். *தற்சார்பு என்கிற அடிப்படையில்தான் கல்விமுறை உருவாக்கப்படல் வேண்டும்.* கல்விக்காலத்தில் மாணவர்கள் தமக்கான உணவை தாமே உற்பத்தி செய்து கொள்கின்ற நிலையை ஏற்படுத்தவும் முடியும். உள்ளூரிலுள்ள உழவர்கள் மாணவர்களுக்கு வேளாண்மையைக்கற்றுத்தருவார்கள். கல்விக்கழகமென்பது உள்ளூர் உழவர்களோடும் கைவினைஞர்களோடும் இடையறாத தொடர்பு கொண்டதாக இருக்கும். அதேநேரத்தில் கணினி போன்ற கல்வியும் கற்றுத்தரப்படும். மாணவர்கள் பெறும் கணினிப் படிப்பு, உள்ளூர் மக்களோடு அன்னியப்பட்ட உணர்வை அல்லது அகந்தை உணர்வை ஏற்படுத்தாத வகையில் இருக்கும்.

சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள கைவினைத் தொழிலகங்களைப் பார்வையிடுவதற்காகச் செல்லும் மாணவர்கள், தாமே தயாரித்த மேம்படுத்தப்பட்ட மாட்டுவண்டிகளையே பயன்படுத்துவர். இந்த அடிப்படையில் தமிழகத்தின் மரபுசார்ந்த தொழில்கள் அனைத்தும் மாணவர்களுக்குக் கற்றுத்தரப்படும். தமிழின் தொன்மையான மரபுகளையும் பண்பாட்டையும் கற்றுக்கொள்ளும் அதேநேரத்தில் தொழில் வல்லுநராகவும் மாணவர்கள் திகழ்வர். ஓரிடத்தில் திட்டமிட்டு வரையறை செய்து உருவாக்கப்படுகின்ற இத்தகைய மக்கள் கல்விக் கழகங்கள் தமிழகம் முழுமைக்கும் பரவலாக்கப்படல் வேண்டும். பின்னாளில் ஆயிரக்கணக்கில் நாடுமுழுவதும் இன்று கட்டப்பட்டுள்ள கல்லூரிகள், மாணவர்களின்றி இழுத்து மூடப்படும் நிலையில், வாய்ப்புள்ள கல்லூரிகளை மக்கள் கல்விக்கழகங்கள் கைப்பற்றி அவற்றை ஏற்று நடத்தும் நாள் வெகு தொலைவில் இல்லை. மருத்துவமனை என்பது பள்ளியோடு இணைந்ததாக இருக்கும். மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் மக்களுக்கு மருத்துவம் பார்க்கும் பணியையும் செய்வர். தொழிற்கூடம் என்றும்

இணைந்திருக்கும். பொறியியல் வேலைகள் போன்றவை தேவைக்கேற்றபடி செய்து கொடுக்கப்படும். உள்ளூரிலுள்ள நீர் ஆதாரங்களான கண்மாய்கள், ஓடைகள், ஆறுகள் போன்றவற்றின் நிர்வாகத்திலும் பராமரிப்பிலும் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவர். மரக்கன்றுகள் நடுதல், பராமரித்தல், உள்ளூரின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுதல் போன்றவை கல்வியோடு இணைந்த ஒன்றாக மாறியிருக்கும். ஆசிரியர்கள் மாணவ நிலையையும் இடையறாது மாறிமாறி வகிப்பர். சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளைகளாக ஆசிரியர் இருக்கமாட்டார். அவரது படைப்புத்திறன் புதிது புதிதாய் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

4. தமிழ்த் தேசியம் - நிர்மாணத் திட்டம்

மேற்கண்ட அடிப்படையிலான மாதிரிக் கல்விக்கூடங்களைச் சில இடங்களில் நிறுவவேண்டும். *தமிழ்த் தேசியத்தை எங்கிருந்து தொடங்குவது என்று சிந்தித்தால் உழவர்களிடமிருந்து தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும்.* உற்பத்தியின் ஆதாரமாக இருக்கின்ற நிலத்தில் உறுதியாக நாம் நிற்கவேண்டும். இன்று உழவர்கள் சந்தித்து வரும் சிக்கல்களைக் கண்டறிய வேண்டும். தமிழ் நிலம், மாசுபடாமல் காக்கப்படல் வேண்டும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தனது சொந்த ஆதாரங்களைக் கொண்டு தற்சார்புடன் பயிரிட்டு வந்த உழவர்களின் இன்றைய நிலையை எண்ணிப் பார்த்தால் வேதனைதான் மிஞ்சும்.

நாம் உருவாக்குகின்ற கல்விக்கழகங்கள், மருத்துவக்கழகங்கள், இயற்கைக் கழகங்கள் போன்றவை அரசினின்று முற்றிலும் வேறுபட்டது என்பதை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் இருந்தே அறிந்து கொள்ள முடியும். விடுதலைப் போராட்டக் காலத்தில் காந்தியடிகள் உருவாக்கிய நிர்மாணத்திட்டங்கள் இன்றுவரை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசியத்திற்கான பல்வேறு நிர்மாணத் திட்டங்களை நாம் உருவாக்குதல் வேண்டும். தேசம் நம்முடையது, நமது தேசத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஆதிக்கவகுப்பினர் மக்கள் தேசம் என்கிற மாயையினை உலவ விட்டுள்ளனர். அந்த மாயைகளை ஆதாரப்பூர்வமாக நாம் அம்பலப்படுத்தியாக வேண்டும். தமிழ்த் தேசியத்தின் அடிப்படை அலகுகளாக முதன்மையாக உழவர்கள் இருப்பர். மாணவர்கள், பெண்கள், கைவினைஞர்கள், தாழ்த்தப்பட்டோர் போன்றோர் தமிழ்த் தேசியத்தின் உறுப்புக்களாவர். தாய்த் தமிழ்ப் பள்ளிகளை மையப்படுதி மாணவர்கள் வாயிலாக இயற்கை வேளாண்மை, சூழல் காப்பு போன்றவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்லமுடியும்.

5. இயற்கை வேளாண்மை

எதிர்வினை என்ற முறையில் ம. இலெ. தங்கப்பா தமிழ்ச் சமூகத்தின் இன்றைய நிலையைத் தெளிவாகப் படம்பிடிக்கிறார். *அரசுடன் ஒத்துழைத்து அல்லது விண்ணப்பம் கொடுத்து எத்தகைய மாற்றத்தையும் நாம் பெறமுடியாது.* பெரியார் வழியில் மக்களிடம் செல்லல் என்பது தேவையான ஒன்று. ஒரு நூற்றாண்டுப் போராட்டத்திற்கான விதையை நாம் இப்போது ஊன்ற வேண்டும் என்கிறார். சரியான கருத்து.

பசுமைப்புரட்சி என்ற பெயரில் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இறக்குமதித் தொழில்நுட்பம் நமது நிலங்களை மலடாக்கியுள்ளது. இயற்கைச் சமநிலையையும் உயிரிப் பன்மயத்தையும் பெருமளவில் அழித்துள்ளது. இன்று உயிரித் தொழில் நுட்பம் என்கிற பெயரில் அறிமுகப்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் மீண்டும் சீர்செய்ய முடியாத அழிவுகளை நமது இயற்கைச் சூழலில் ஏற்படுத்தும். இதற்கான மாற்றாக நம் முன்

இருப்பது இயற்கை வேளாண்மை, தமிழ்த் தேசியத்தின் வலுவான ஆயுதமாக இயற்கை வேளாண்மை திகழும். வேளாண்மையின் வழியே உழவர்களையும், உணவு நுகர்வோர் அனைவரையும் சென்றடைய முடியும்.

எனது ஊரில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு முதன்மையான விளைச்சலைத் தந்தது வரகு என்கிற புஞ்சைத்தானியம் தான். வரகு, கம்பு, தினை, சாமை, கேழ்வரகு, சோளம், மொச்சை, அவரை, துவரை, உளுந்து, கொள்ளு, எள்ளு, போன்றவையும் மானாவாரியாக விளைந்தன. இன்று இவ்வளவு வகை உணவுப் பயிர்கள் விளைந்த இடத்தில் மக்காச்சோளம் என்கிற ஒரே வகைப் பயிர் செய்யப்படுகின்றது. பல்வகைப் பயிர்கள் விளைந்த காலத்தில் விதைகள் அவரவர் வீட்டிலேயே இருந்தன. இன்று விதைகளுக்காக விதை நிறுவனங்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. விதைகளில் பல்வேறு தொழில்நுட்ப மாற்றங்களைச் செய்து அவை மீண்டும் முளைக்காமல் மறு உற்பத்தி செய்ய இயலாத மலட்டு விதைகளாக மாற்றப்படுகின்றன. வேளாண் சமூகம் நல்ல நாள் பார்த்து விதை விதைக்கும் போது, கடவுளே! விளைச்சல் நன்கு இருக்க வேண்டும் எல்லோரும் நலமுடன் வாழவேண்டும் என்று வேண்டுகின்றார். இதே வேண்டுதலை விதை நிறுவனங்கள் தலைகீழாகச் செய்கின்றன. "ஏ நவீன அறிவியலே, உயர் தொழில்நுட்பமே நான் விற்கும் இந்த விதை, இந்தமுறை மட்டுமே முளைக்கவேண்டும். மறுபடியும் விதைத்தால் முளைக்கக் கூடாது. ஒவ்வொரு முறையும் உழவர்கள் விதைகளுக்காக எங்களிடம் தான் வரவேண்டும். உலகில் கொஞ்ச நஞ்சம் தற்போது இருக்கின்ற மரபு சார்ந்த விதைகளும் அழிந்து விடவேண்டும். விதைகளுக்காகவும் இடுபொருட்களுக்காகவும் உழவர்கள் எங்களிடமே வரவேண்டும். இந்த ஆண்டு 500 ரூபாயக்கு விற்கின்ற விதையை அடுத்த ஆண்டு 1000 ரூபாய்க்கு விற்கவேண்டும்". இதுதான் ஒரு விதை வணிகரின் கனவாக வேண்டுதலாக இருக்கின்றது. இந்தக் கனவிற்குப் பெயர்தான் உலகமயம், தனியார்மயம், தாராளமயம், மக்கட்பண்பில்லாத இத்தகைய போக்குகளுக்கான எதிர்வினையை உள்ளடக்கமாக கொண்டிருப்பது இயற்கை வேளாண்மை.

2. தமிழ் நாகரிகம் நிலை பெற...

சாத்தூர்சேகரன் எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (ஆங்.), எம். ஏ. (வர), எம். ஏ. (அரசியல்), எம். ஏ. (வர), எம்ஃபில் (வர), எம். ஏ. (சமூக), எம். ஏ. (பொருளா), எம். ஏ. (மொழியியல்)

1. கன்னித்தமிழ்

தமிழைக் கன்னித் தமிழ் என்கிறோம். ஏன்? உலகின் முதன் மொழி தோன்றி இரண்டு இலட்சம் ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும் என்கிறார் அமெரிக்க மொழி அறிஞர் சுவாடேசு. உலகின் தாய்மொழிக்கான வாய்ப்பு தமிழுக்கு உள்ளது என்றும் உறுதி கூறுகிறார். பாவாணர் போன்றோரும் இதனை அறுதியிடுகின்றனர். எனது களஆய்வும் இதனையே உறுதி செய்கிறது. இதனால்தான் எனது நூல்களில் தமிழ்ச் சொற்களின் வழித்தோன்றலாக உலகின் பெரிய 400 மொழிகளில் ஒப்புமையைக் காட்டமுடிகிறது. தமிழின் இத்தகைய வீச்சிற்கும், வீழாத தன்மைக்கும் காரணங்கள் யாவை?

"இன்னஎழுத்தில் தான் சொற்கள் தொடங்கவேண்டும், இன்ன எழுத்தில்தான் சொற்கள்

முடிவடைய வேண்டும். உச்சரிக்கக் கடினமான சொற்கள் இருத்தல்கூடாது" என்றெல்லாம் நமது முன்னோர்கள் வரையறை செய்து வைத்திருந்தனர். மேலும் மொழி என்பது பாமரர் சொத்து என்பதை ஒரு சட்டமாகவே வைத்திருந்தனர். சிறுவர் எளிதில் கற்றுணர மொழிச்சட்டம் அல்லது இலக்கணம் ஒரு தடையாக இருத்தல் ஆகாது என்று திட்டமிட்டிருந்தனர். எனவே மரபு மீறலை ஒரு மரபாகவும் வைத்திருந்தனர்.

2. கன்னித்தமிழும் .. தமிழ் நாகரிகமும் ...

தமிழ் நாகரிகம் என்ற வரையறை ஒரு பரந்து பட்ட பொருளில்தான் இயங்குமே தவிர, ஒரு சிறு எல்லைக்குள் நிலைபெறவில்லை.

கன்னித்தமிழ் எங்ஙனம் அவ்வப்போது தோன்றிய இறுக்கமான சூழ்நிலைகளையும் எதிர்ப்பான சூழ்நிலைகளையும் தகர்த்தெறிந்து மீண்டும் மீண்டும் தன்னை இளமைப்படுத்திக் கொண்டு வருகிறதோ அவ்வாறே *தமிழ் நாகரிகம் என்பதுவும் அழிக்கப்பட முடியாத ஒன்று என்று தன்னை அடிக்கடி நிலைநாட்டி வந்திருக்கிறது.*

3. தமிழ் நாகரிகத்தின் சில உச்சங்கள்

1. உலகின் முதன்முதலில் சித்திர எழுத்தைக் கண்டவன் தமிழன். அதிலிருந்து வட்ட எழுத்து, கோட்டு எழுத்து நகர்ப்புற நகரி எழுத்து என்று பல்வேறு காலச்சூழலில் பல்வேறு எழுத்துக்களைப் படைத்தவனும் தமிழன். படைத்ததோடு மட்டுமின்றி உலகெங்கும் அவற்றைப் பரப்பியவனும் தமிழன்.
2. சங்கங்கள் அமைத்து, மொழியை வளர்த்தவனும் தமிழன்தான். ஏறத்தாழ 10000 ஆண்டுகளாய் இந்நிலை இருந்து வந்தது.
3. சாதி, சமயம் சிற்சில விதிவிலக்குகளைத் தவிர சங்கஇலக்கியங்களில் இல்லை. இல்லவே இல்லை. ஆனால் உரோமபுரி, கிரேக்கம், சீனம், எபிரேயம் (ஹீப்ரு) போன்ற எந்த மொழியின் தொடக்க கால இலக்கியங்கள் யாவும் சமயச் சார்பாகவும் மந்திர தந்திர வித்தைகளைக் கொண்டுள்ளதாகவும் இருக்கக் காண்கிறோம்.
4. தத்துவங்கள், வேதாந்தங்கள் யாவுமே தமிழனுக்கு மட்டுமே சொந்தமாய் இருந்தன. தமிழன் இவற்றைக் காப்பாற்றாததால், பிறர் பிற எழுத்துக்களில் பொதிந்து வைத்திருக்கின்றனர்.
5. அறநூல்களிலும் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கோட்பாட்டிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவன் தமிழன். திருக்குறளைக் காட்டிலும் வேறு என்ன வாழ்வியல் நூல் வேண்டும்?
6. 10000 ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளி - ஹரப்பா நாகரிகங்களை உருவாக்கியவன் தமிழன். அதன் தொடர்ச்சியாக லோத்தல் முதல் ஆந்திர பொட்டி புரலுவரை கொண்டு சென்றவன் தமிழன். இம்மட்டோ? பத்தாயிரம் கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள ஈஸ்டர் தீவில் குடியேறி அங்கும் அவ்வெழுத்துக்களைப் பொறித்தவன் தமிழன்.
7. பிறநாடுகளில் கற்கால நாகரிகமும் செம்பு நாகரிகமும் நிறைவேறாத காலத்திலேயே இரும்பை வடிக்கவும் வார்க்கவும், உருக்கு செய்யவும் கற்றுக் கொண்டவன் தமிழன். ரோமாபுரி வீதிகளிலும் கிரேக்க நாட்டு சிற்றூர்களிலும் தமிழன் வடித்த வேலும் வாளும் ஈட்டியுமே நிறைந்திருந்தன.
8. மருத்துவத்துறையிலும், அறுவை மருத்துவத்திலும் தமிழர்கள் தன்னிகரற்று விளங்கினர். மருத்துவ சேவைக்குச் சென்றனர். முன்னாளில் உலகப் பெரும் விஞ்ஞானியராகத் தமிழரே திகழ்ந்தனர். இயற்கைவளமும் மூலிகைத்தளமும் இதற்கு உதவின.

9. கல்வி கற்பதிலும், தமிழர்கள் திகழ்ந்தனர். சீனமொழி எழுத்தைத் திருத்தியவர்கள் தமிழர்கள். கொரிய மொழிக்கு தமிழை ஒட்டிய எழுத்து முறையைத் தந்தவர் தமிழர்கள். சப்பான் மொழியையும் எழுத்தையும் செப்பம் செய்தவர்கள் தமிழர்கள்.

10. உலகில் அதிகளவில் பருத்தி விளைவித்து ஆடையாக ஆக்கியவர்கள் தமிழர்கள். சாயமிடக் கற்றுக் கொண்டவர்களும் தமிழர்களே!

11. கடல் கடந்து பெரும்படையுடன் உலகை வலம் வந்தவர் தமிழரே. 1000, 1500 ஆண்டுகளுக்குப் பின்னரே பிறநாட்டினர் கடலை எட்டிப் பார்த்தனர். 2000, 3000 கிலோ மீட்டர் தொலைவுக்கப்பால் ஆட்சியை அமைத்தவர்களுள் தமிழரே முதல்வர்.

12. பழந்தமிழர் குடியேறாத நாடில்லை; தீவில்லை. இட்சிங் என்ற சீனத்துறவி கி.பி. 2ம் நூற்றாண்டினர். இவரது கூற்றுப்படி, சீனாவில் 50000 தமிழ்க் குடியிருப்புக்கள் (50000 காலனிகளா?) இருந்தன.

13. தமிழரின் வணிகக் கப்பல்கள் செல்லாத நாடு இல்லை. தீவுகள் இல்லை. பழந்தமிழருக்குக் கடல் ஒரு விளையாட்டுத் திடல். உலக நதிகள், மலைகள், கடல்கள், ஊர்கள் யாவற்றிற்கும் தமிழனே பெயரிட்டான். மக்கட் பெயர்களும் தமிழாகவே உள்ளன.

14. ஆழ்கடலில் அச்சமின்றி முத்தெடுத்தான். அவற்றை இலங்கையில் இரத்தினத்திற்கு மாற்றினான்; சாவகம் சென்று பவளத்திற்கும் வாசனைப் பொருளுக்கும் மாற்றினான். இவற்றைச் சீனாவில் விற்று பட்டு வாங்கினான். ரோமாபுரி வரை சென்று பட்டிற்குத் தங்கம் பெற்றான். தமிழ் வணிகனின் கதை அஞ்சா நெஞ்சுரத்தின் விதை. அவனியில் அவன், கல்வியையும், சமயத்தையும் தத்துவத்தையும் பரப்பியவன். வாளெடுக்காமலும் வேல் எறியாமலும் தமிழ் நாகரிகத்தை உலகெங்கும் விதைத்தவன். இன்றும் உலகில் நிலைத்துள்ள நாகரிகம் தமிழன் நாகரிகமே. அற்பத் தமிழன் இந்த அரிய உண்மையை உணராமல் இருப்பதுவும் பிறர்க்கு உணர்த்தாமல் இருப்பதுவுமே இன்றைய சாபக்கேடு.

15. அறநூலகத்திற்குப் பின், சமயத்தை ஒரு நிறுவனமாக ஏற்றுச் செயல்பட்டதில் தமிழனே முன்னோடியாக நிலைபெற்றான். புத்த சமயத்தைப் பரப்பியதிலும் சமண சமயத்தைப் பரப்பியதிலும் தமிழனே முன்நிற்கிறான். இன்று உலகெங்கும் இருப்பது தமிழன் பரப்பிய புத்த மகாயானமே (பெருவழி) சீனாவில், சப்பானில், கொரியாவில் இந்தோச் சீனநாடுகளில், பர்மாவில், இருப்பன மகாயானமே. புத்தர் பரப்பிய சிறு வழி (ஹீனயானம்) அழிந்துவிட்டது.

16. பக்தி இயக்கம் தமிழகத்தில் உருவாகி ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னரே வட இந்தியாவில் (கி.பி. 1200 – 1500இல்) பரவியது. இதன் எதிரொலி கிறித்துவத்தில் கி.பி. 1700க்குப் பின்னரே வெளிப்பட்டது. இசுலாமில் கி.பி. 1200க்குப் பின் (சரியாகச் சொல்வதானால் கி.பி. 1400க்குப் பின்னரே) மதநெறியாகியது. சோமபானத்தையும், சுராபானத்தையும் மாந்தி மாந்தி, "ஐயோ, எங்களைக் காப்பாற்று, சோமா, தமிழரிடமிருந்து எங்களைக் காப்பாற்று" என்ற அறியாமையின் உச்சத்தை, பேதமையின் பிதற்றலை, தமிழ் நாகரிகம் எஞ்ஞான்றும் அரங்கேற்றியதில்லை. இசுலாம், கிறித்தவம் படைத்த தீவிரவாதங்களையும் உலகப் போர்களையும் தமிழ் நாகரிகம் ஏற்கவே இல்லை.

17. குதிரைக்கறி முதல் எல்லாக் கறி வகைகளையும் தின்று வந்த ஆரிய அநாகரிகரை சைவநெறியில் ஈடுபடுத்தி நாகரிகப்படுத்தியது தமிழ் நாகரிகம். தோலாடை கட்டியும் மரவுரி தரித்தும் அரை நிர்வாணமாகத் திரிந்த ஆரியருக்கு ஆடை கொடுத்து

நாகரிகப்படுத்தியது தமிழர் நாகரிகம். இல்லாத கடவுளான சோமன், சுரா, உசா, இந்திரன் போன்ற கற்பனைக் கடவுளை ஆரியர் கைவிட்டனர். தமிழரின் சமயங்களை சிவன், சக்தி, மயிலவன் ஆகியோரை வழிபட வைத்தது தமிழ் நாகரிகமே. வடஇந்தியாவில் அம்மணமாகத் திரிந்து பனியிலும், குளிரிலும் வாடி வதங்கிய ஆரியருக்கு இருப்பிடம் தந்து வாழவைத்தது தமிழ் நாகரிகமே.

18. இந்தியாவில் உள்ள கல்வெட்டுகளில் 75% தென்னிந்தியாவில் உள்ளன. இதில் பாதிக்கு மேல் (40%) தமிழகத்தில் உள்ளன. இதில் பாதி (20%) ஆரியருக்குத் தானமளித்த ஈனச் செய்திகள் தான் உள்ளன. நன்றி என்பதற்கு அர்த்தம் தெரியாத ஆரிய அறிவிலிகள், தமிழரது படைப்புகளைத் தமது என்று உரிமை கொண்டாடும் அற்பத்தனத்தை இனியும் சகிக்கத்தான் வேண்டுமா? சிதம்பரம் கோவில் கட்டியவன் சோழ அரசன். கட்டியோர் தமிழகக் குடிபடைகள். இன்று, உள்ளிருந்து கொட்டம் அடிப்பது மட்டுமின்றி தமிழ்ப் பாடல்களைப் பாடக்கூடாது என்று சொல்வது, தமிழ் நாகரிகத்தையே அவமதிப்பது அல்லவா? கைநீட்டிப் பிச்சை எடுத்த பரம்பரை, "கொடையாளித் தமிழனுக்கு நாகரிகம் கற்றுக் கொடுத்தேன்" என்று கூறுவது எத்தனை பெரிய பொய்!.

19. ஆரியக் கூட்டத்தினரை நாம் தாம் நாகரிகப்படுத்தினோம். ஆனால் இந்த நெறியற்ற கூட்டம், வெள்ளைத் துரைமாரை ஏமாற்றி வரலாற்றுப் புரட்டாக, "தமிழரை - இந்தியரை சமஸ்கிருதமயமாக்கியுள்ளோம்" என்று கூறுவது பொய்மையிலும் கடைந்தெடுத்த பொய்மையாகும். இக்கயவரை இன்னும் அனுமதிப்பது தமிழ் நாகரிகம் அன்றோ?

20. தமிழகம் தென்கோடியில் உள்ளது. ஆனால் வடகோடி இமயத்தை வென்று 10க்கும் மேற்பட்ட முறை இமயத்தில் கொடியேற்றியவர் தமிழரே. நேபால் - நிருபத் வழியே ஒரு பல்லவ அரசன் சீனா மீது படையெடுத்த செய்தி, மறைக்கப்பட்ட பலநூறு தமிழ்ச் சாதனைகளில் ஒன்றாகும். சோழர் கணவாய், சேரர் கணவாய் என்று இன்னும் நேபாளத்தில் உள்ளன. மலேசியாவில் கடாரம் கொண்டான் பகுதியில் மலேசிய அரசு ஒரு அருங்காட்சியகம் நிறுவியுள்ளது. எத்தனை வையாபுரியர்களும், அறவாணர்களும், எஸ்.ஆர். ராவ்களும் மாக்சுமுல்லர்களும் தமிழ் நாகரிகச் சிறப்பை ஒழிக்க முற்பட்டாலும் இயற்கை நமக்கு என்றென்றும் கைகொடுக்கிறதே?

4. எழுச்சிக்குச் சில காரணங்கள்

ஒரு நாடு எழுச்சியுற்று, தனி நாகரிகம் பெற்ற நாடாகத் திகழ வேண்டுமானால்

1. கல்வியில் சிறந்தோங்கியிருக்க வேண்டும்.
2. பெண்கல்வி, பெண்ணுரிமை பேணப்பட வேண்டும்.
3. சிறந்த அரசர்கள் அல்லது அமைச்சர்கள், தானைத் தலைவர்கள் மிகுந்திருக்க வேண்டும்.
4. ஏற்றுமதிப் பொருட்கள் இருத்தல் வேண்டும்
5. உலகநாடுகளின் நடுநாயகமாக இருத்தல் வேண்டும்.
6. திரைகடல் ஓடி ஓடிச் சம்பாதிக்கும் வணிகர் குழு இருத்தல் வேண்டும்.
7. அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்கள் பல்கிப் பெருகி இருக்க வேண்டும்.

முற்காலத்தில் மிளகாய் கிடையாது. மிளகுதான் உறைப்புச் சுவையைத் தரக்கூடியது. ஒரு மூடை மிளகு ஒரு சில நேரங்களில் ஒரு சிறு மூடை தங்கத்திற்கு ஈடாக விளங்கியது. மிளகின் மருத்துவக் குணங்கள் மிளகின் விலையை எப்போதுமே

உச்சத்திலேயே இருக்க வைத்தன. அன்று ரோமாபுரி அவையின் பிளினி அலறிய அலறல் இன்றும் நம் செவியில் விழுகின்றதே!. "ஐயோ எங்கள் நாட்டுப் பொன்னும் பொருளும் தமிழகத்திற்குப் பெருவாரியாகச்செல்கின்றதே!" தமிழகத்திலிருந்து அறுசுவைப் பொருள்கள் பலநாடுகளுக்குச் சென்றன. மருந்து, மருந்துப் பொருட்கள், ஆடைகள், சாயமிடப்பட்ட ஆடைகள், உருக்காலான வாளும் வேலும், மிளகும் பிற வாசனைப் பொருட்கள், யானைத்தந்தம் இன்னபிற பொருட்கள் உலகெங்கும் சென்றன. இதனால் தமிழன் வளம் பெற்றான். தமிழ் நாகரிகம் வளம் பெற்றது. நிலைபெற்றது. உலக நாகரிகங்களின் தாய் நாகரிகம் தமிழ் நாகரிகம் அல்லவா? மற்ற நாகரிகங்கள் கட்டுச்சோற்று நாகரிகங்கள். எனவே 300 – 400 ஆண்டுகளில் நிலைகுலைந்தன. தமிழ் நாகரிகம் மட்டுமே 5000 ஆண்டுகள் நின்று நிலைத்தது.

5. வீழ்ச்சிக்குச் சில காரணங்கள்

1. தமிழ் உணர்வு அற்றுப்போனது
2. கலப்பு மன்னர்கள் ஆட்சியும் (குலோத்துங்கன்) வேற்று மன்னர்கள் ஆட்சியும் (விசயநகர மன்னர்கள்) தோன்றின.
3. வேற்றுமத மன்னர்கள் ஆட்சி (மதுரை சுல்தான்கள், ஆற்காட்டு நவாப்புகள், ஆங்கிலேயர் ஆட்சி) தோன்றியதால் 'தமிழன் உணர்வற்றுப் போனான்.
4. ஆரியக்கூத்தாடிகளையும் அவர்களது அபத்தக் கருத்துக்களையும் ஏற்றமை
5. தமிழ்மன்னர்களைத் தமிழ்மன்னர்களே காட்டிக் கொடுத்தல் (மாலிக்கபூரை வரவேற்றல். மதுரை வீரபாண்டியன் - சுந்தர பாண்டியன் போராட்டம்)
6. குறிப்பிட்ட சிலரை வீர வழிபாடு செய்தல், அடிமைப்புத்தி ஏற்பட்டதன் விளைவு இது. திரைப்பட நடிகனையும் நடிகையையும் வழிபட நேர்ந்தது.
7. சாதி சமயப் பிணக்குகள், வலங்கை - இடங்கைப் போராட்டம் இன்னபிற, தமிழனைத் தமிழனாகக் காட்டாமல் - சாதி சமயப் பிரிவினை உடையவனாகக் காட்டுதல்
8. அரபியக் கொள்ளைக்காரர்களால் தமிழரது கடல் வணிகமும் கடல் ஆதிக்கமும் குன்றத்தொடங்கல்
9. இடைத்தரகராக மாறிய அரேபியரும் ஐரோப்பியரும் தமிழர் வணிகத்தைச் சீரழித்தல்
10. கல்விக்கூடங்கள் பாமரருக்கு இல்லை
11. மேற்கல்வி பூணூல் பார்ப்பனனுக்கு ராமப்பையனின் குளறுபடிகள்) மட்டுமே.
12. போர்முறையில் துப்பாக்கியும் பீரங்கியும் ஆங்கிலேயரின் திறமையை உயர்த்தியது; தமிழர் வீரத்தின் தரத்தைத் தாழ்த்தியது.
13. மிளகாய் மலிவாக வந்தது. மிளகின் ஆதிக்கம் குன்றியது.
14. ஐரோப்பியர் இயந்திரங்கள் மூலம் துணிகளை நெய்து இந்தியத் துணிவணிகத்தை வீழ்த்தினர்.
15. இரும்பு உற்பத்தி, கப்பல் கட்டுதல் போன்ற பல முயற்சிகளுக்கு ஆங்கிய கும்பினியரும் அதன்பின் வந்த ஆங்கிலேயரும் பல்வேறு தடைகளை விதித்தனர்.

எந்தெந்தக் காரணங்களால் தமிழ் நாகரிகம் உச்சம் பெற்றதோ, அதற்கு மாறான காரணங்களால் தமிழ் நாகரிகம் வீழ்ச்சியுற்றது.

6. சுழலும் இயற்கையின் நியதி

இயற்கை எப்பொழுதும் முடங்கிக் கிடப்பதில்லை. அஃது ஒரு சுழற்சியின் பாற்பட்டது.

சுழல்விதிப்படி கீழிருப்பது மேலே வரும்; மேலே இருப்பது கீழே செல்லும். தற்காலிகமாகத் தாழ்ந்திருக்கும். தமிழ் நாகரிகம் மேலே வரவேண்டிய காலம் வந்து கொண்டிருக்கிறது.

அன்று மிளகும் பிற வாசனைப் பொருட்களும் தமிழனின் வணிகக் களத்தைப் பெருக்கியது. இன்று...? கணினியும் மென்பொருள் ஏற்றுமதியும் தமிழகத்திற்கு பல்லாயிரம் கோடி ரூபாயை அள்ளித்தருகிறது. 20 ஆண்டுகளுக்குமுன் நான் ஒரு மாநாட்டில் பேசியதை இங்கு குறிப்பிட்டாகவேண்டும். "கணினி, இயற்கைதந்த ஒரு வரம். இன்னும் 50 ஆண்டுகளில் தமிழனின் வறுமை முற்றிலும் ஒழிந்துவிடும். மீண்டும் தமிழ் நாகரிகம் உலகில் அரங்கேறும். தமிழ் உணர்வு இப்போது 2% மட்டுமே உள்ளது. இதனை 5% ஆக்கிவிட்டால், தமிழ் நாகரிகம் மீண்டும் உச்சம்பெறும்". கணினி தமிழகத்திலும் இந்தியாவிலும் பொற்காலத்தை உருவாக்கியுள்ளது. இதை மறுக்க முடியுமா? ஏன் மாற்றி விடத்தான் முடியுமா? இன்னும் 50 ஆண்டுகள் கணினி கை கொடுக்கும். அதன்பின் உயிரியல், உயிரி வேதியல் போன்றன மேலும் ஒரு 50 ஆண்டுகளுக்கு தமிழனுக்கு வரமளிக்கும். இலங்கைப் பிரச்சினையால் தமிழ் உணர்வு இன்னும் பல்கிப்பெருகும். மனநெருக்கம் மிகுதியாகும். கல்வி, மேலாண்மை, தத்துவம், மருத்துவம், மொழியியல் போன்ற சில துறைகள் தமிழ் நாகரிகத்திற்கு மேலும் சில ஐம்பது ஆண்டுகளுக்கு உதவிபுரியும்.

7. சில சுருக்கு வழிகள்

கலப்புமணம் பெருகினால் சாதி சமயப்பிணக்குகள் வீழ்ச்சிறும். தமிழ் உணர்வு மேலோங்கும். தமிழின உணர்வு மேலோங்கிட கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஆவன செய்யவேண்டும். அரசியலில் கன்னடப் பார்ப்பனப் பெண்களும், மலையாள தெலுங்கு திரைப்பட நடிகர்களும் வருவதை முற்றிலும் புறக்கணிக்க வேண்டும். பரம்பரைத் தமிழனே தமிழகத்தை ஆளவேண்டும். இதனை கட்டாயமாக்க வேண்டும். மாநில சுயாட்சியைக் காட்டிலும் அதிகப்படியான சுயாட்சியைக் கோரிப் பெறவேண்டும். மைய அளவில் கூட்டாட்சி, இராணுவம், அயல்நாட்டுத்துறை, நிதி நிர்வாகம், போன்ற ஒரு சிலதுறைகளே மைய அரசிடம் இருத்தல் வேண்டும். மாநில தமிழ் அரசு, பிற நாடுகளில் வாழும் தமிழருக்கு தமிழ்க்கல்வி, பொறியியல் மருத்துவ மேற்கல்வி போன்ற துறைகளில் பயிற்சியை மலிவாகக் கொடுக்கவேண்டும். அவர் தம் ஆற்றலையும் அறிவையும் பயன்படுத்தல் வேண்டும். தமிழக அரசு, தமிழ் நாகரிகத்தை உலகெங்கும் பரப்பிட தனிப்பட்ட அறிஞர் குழுக்களை உருவாக்கவேண்டும். இவர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் தமிழ் நாகரிகத்தைப் பரப்பிட வேண்டும்.

8. தன்னம்பிக்கையே நன்னம்பிக்கை முனை

சோர்ந்து கிடக்கும் தமிழனுக்கு இன்று தேவை பணமல்ல. வீரவுரைகள், எழுச்சியுரைகள் இவையே போதும். தன்னம்பிக்கையை ஊட்டி விட்டால், எளிதில் கிடைப்பது வெற்றியாகும். பெரு வெற்றியாகும்.

3. தமிழ் நாகரிகத்திற்கு – யார் தடை – என்ன விடை ?

ஜனகப்பிரியா

1. தமிழே உலகிற்கு அனைத்தையும் கற்றுத் தந்ததென்று சுயஇன்பம் துய்த்தலை விட்டொழிப்போம்; ஏனெனில் மிகுதியும் இழந்துவிட்டோம். கேளாண் செவியாய்க் கேட்டு

சலித்தவை நம் பழம் பெருமைகள். வீறு கொள்வதற்கு ஏதுமில்லை இன்று; தமிழனின் வீரம்பற்றிப் பேசுதல் பொழுது போக்காகவே அமையும்; ஏனெனில் வரலாற்றில் தமிழன் பெற்ற வீரம், தன்னை நிலைநாட்டிக் கொள்வதாக எண்ணித் தன்னையும் தன் இனத்தையும் அழித்துக் கொள்வதாகவும் இருந்திருக்கிறது. துவண்டு கீழிறங்கிச் சரியும் இன்றைய தினசரி வாழ்வில் தமிழ்ச் சொற்களும் கூடப் பலரில் உலர்ந்து விட்டதைப் பார்க்கிறோம். நமக்கு நாமே பகையாய் நின்றோம், நிற்கிறோம், பகையழிக்க முழங்குகிறோம்.

தமிழனின் அரசியல் பற்றிப் பேசவும் மனம் சலிக்கிறது. அதிகாரக் கோபுரத்தின் அடியன்றி அன்பின் ஆல் நிழலை அறியவும் பொழுதுகளற்ற சிறுமை மண்டியது அது. வரலாற்றின் வளமையில் அதிகாரமும் அன்பினை அடியாகக்கொண்ட அறிவுச்செயலும் முரண்பட்ட நிகழ்வுகள், அவை தமிழரின் இருப்பிலும் காணக்கிடைப்பதே. நம்மால் விளக்க முடிகிறவற்றை நம்மால் படைத்து விடமுடியும் என்கிற நம்பிக்கையின் மீது நோய் படர்கிறது. இலக்கியங்களின் வழி நாம் அறிகிற அறவியல் கருத்தாக்கம் என்பது அச்சமுதாயத்திற்குத்தேவையானதென்று கருதமுடிகிறதேயன்றி அச்சமுதாயத்தில் நிலை பெற்றிருந்தது என்று கருத இயலவில்லை.

அதிகாரம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் பொருட்டு தன் சொந்தநாகரிகம், அறவியல் போன்றவை அழிந்து போவதைப்பற்றிக் கவலை கொள்வதில்லை; அம்முறையிலேயே தமிழ்ப்பேரரசர்கள் பார்ப்பனிய மேலாதிக்கம் தம் சூழலில் படர்ந்ததைக் கண்டு கொள்ளவில்லை. இன்றும் தொடர்வது அதுதானே! அன்பற்றது அதிகாரம் என்பதற்கு சமணர்களைக் கழுவேற்றிய செயல் ஒன்று போதுமே விளக்கமாக. இன்று மிகுதியாக கூற இயலும் இன்றைய 'தமிழ் அதிகாரம்' குறைந்ததா என்ன!.

தன்காலத்திய அழிமதிகளைக் களைந்துவிடும் முயற்சியில் புத்தமும், சமணமும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதைச் சகித்துக் கொள்ள முடியாமற்போனவர்கள் தாமே நாம்! ஆனால் நமது தமிழ் இலக்கியங்கள் அன்பினை அறித்தினை சகிப்புத் தன்மையைப் போதிக்கின்றன: ஏற்பும் மறுப்பும் எந்த அளவுக்கு இருந்தன என்பதை அறிவோம்.

'இந்தியநாகரிகத்திற்கு அடிப்படையே தமிழ்நாகரிகம் தானே' எனும்போது நாம் விரும்புகிற அளவிற்கு ஆரியநாகரிகத்தின் எதிர்மறைகளை அதிலிருந்து வடிகட்டிவிடவேண்டுமா....? *திராவிட மெய்யியலின் ஆற்றல் மிக்க போக்குகளென புத்தம் சமணம் ஆகியவற்றிற்கு நாம் உரிமை கொண்டாடும் பொழுது அவற்றின் கீழிறக்கத்திற்கும் நம்மவர்கள் கருவிகளாக இயங்கியதை இத்தலைமுறை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்தான்; அவ்வாறெனில் தமிழர் மதமும் தன் அதிகாரத்தின் வெப்பத்தில் பிற அறப்பயிர்களை அழித்துவிடத் தயங்கவில்லை என்பதனையும் விளக்கித்தான் ஆகவேண்டும்.*

2. ஆரியரின் வருணமுறையைத் தொல்காப்பியர் ஏற்றுக்கொண்டதைச் சூழலின் வலிமை என்பதா? அவருடைய அகச்சார்பும் ஆரியத்தின் பாற்பட்ட தென்றுகூறுவதா? 'தமிழ்ச் சமூகத்தின் உயர்மட்டங்களில் (உடமைவர்க்கத்தினிடையே என்று தானே கொள்தல் வேண்டும்) பார்ப்பனியம் நுழைந்து தங்கியது என்ற போதிலும் காடுகளிலும் வயல் நிலங்களிலும் உழைக்கிற மக்கள் மத்தியில் இன்னும் நிலம்சார்ந்த தெய்வங்கள் நிலவின' (பக்.8) அவ்வாறெனில் பொருளியல் நிலைக்கேற்பத் தமிழரின் பண்பாட்டு முகம் மாறியிருந்தது என்றுதானே பொருள். 'இனம் சார்ந்த' என்ற சொற்றொடரின் பயன்பாடு போதாமையுடன் கூடியதுதானே. இவ்வாறு இருக்க 2000 ஆண்டுகளில்

தமிழரின் பண்பாடு சீரழிந்து வருவதை இயல்பென்று கருதும் போக்கினைக் குற்றமாகக் கொள்ள இயலுமா? தமிழரின் வாழ்க்கை இன்று எத்தனையோ (அந்நிய மோகம், நாகரிகம் என்பதன் பொருள் உணராமை, பேராசை, வாழ்வியல் நெருக்கடிகள் போன்றவை) சூத்திரக்கயிறுகளில் பிணைக்கப்பட்ட பொம்மையாக மாறியிருப்பதை மறுக்கமுடியவில்லை. தமிழ் அரசியலின் பிணைப்போ உலக அதிகாரத்துடனுறைந்துள்ளது.

தொல்காப்பியரை அறிவுப்புலத்தின் குறியீடாகவும் சைவத்தை வைணவத்தினை சனாதனத்தின் குறியீடாகவும் கொண்டால் அறிவுப் புலமும் வெகுமக்களின் வாழ்க்கையும் தமிழ்ப்பண்பாட்டில் விலகுகிற அல்லது முரணுகிற புள்ளி எது?

3. 'சமஸ்கிருத ஆதிக்கத்தை முதன் முதல் கேள்விக்குட்படுத்திய ஒரே இனம் தமிழ் இனம் தான், ஆரியத்தை முற்றாக மறுக்கிறவர்களும் தமிழர்கள்தான்' (பக்.11) இந்த வரிகள் வரலாற்றின் பழைய நிகழ்வொன்றினையும் அது தொடர்பான இன்றைய நிகழ்வொன்றினையும்' நினைவுக்குக் கொண்டுவருகிறது. ஆங்கிலேயே அரசாங்கம் கல்விக்கென்று இந்தியாவிற்கு வழங்கிய தொகையை முறைகேடாகப் பயன்படுத்தியது தொடர்பாக பிரம்மசமாஜம் நிறுவிய இராஜாராம் மோகன்ராய் 1813 வாக்கில் பிரிட்டிஷ் ராணிக்கு எழுதிய கடிதம்: தங்களுடைய அரசாங்கம் இந்தியக் கல்விக்கென ஆண்டு தோறும் வழங்கும் தொகை முழுவதனையும் இங்கு ஒரு குறிப்பிட்டஇனம் தங்களுடைய (மிகமிகக்குறைவான அளவில் பயன்பாட்டிலுள்ள) சமஸ்கிருத மொழிக்காகப் பயன்படுத்திக்கொள்கிறது: இந்த அநீதியைத் தடுத்து எல்லா மக்களும் பயனடையத்தக்க வகையில் அத்தொகையை முறையாகச் செலவு செய்ய ஆவன செய்யவேண்டும் (பேரா. நெடுஞ்செழியன்: 'சமூகநீதி')

இதன் பின்னர் இங்கு நுழைந்த ஐரோப்பியக் கல்விமுறை 'உடலால் இந்தியராகவும் உள்ளத்தால் ஐரோப்பியராகவும்'. என்ற மெக்காலே பிரபுவின் கூற்றுப்படி செழித்ததைக் காண்கிற நமக்குத் தமிழ் ஆளுமை சிதைந்ததின் காரணங்கள் உணரத்தக்கனவே. தப்பி முளைத்த மருந்துச் செடிகளைப் போலத் தமிழ் மெய் ஆர்வலர், தம் வாழ்வினைப் பணயம் வைத்துச் சாதித்த செயல்களால் விளைந்த நற்பயனைப் பாதுகாத்து வைப்பதே பெருந்துன்பமாயிற்று நம்மவர்க்கு. "ஒரு நாட்டார் உண்பது, உடுத்துவது, ஆடுவது, பாடுவது, பேசுவது, எழுதுவது எல்லாம் அவர்கள் எந்த அரசியலின் கீழ் வாழ்கிறார்களோ, அந்த அரசியலைப் பொறுத்தே இருக்கிறது.... எனவே நம்மை ஆளும் அரசு எந்தத் தரத்தில் இருக்கிறதோ அந்தத் தரத்தில்தான் நமது அன்றாட வாழ்க்கையும் இருக்கும். நமது அன்றாட வாழ்வின் தரம் உயர வேண்டுமானால் நம்மை ஆளும் அரசின் தரம் உயர வேண்டும். அது உயர வேண்டுமென்பதற்காக நாம் பாடுபடவேண்டும்" (வெ. சாமிநாதசர்மா). ஆங்கிலேயர்களின் ஆட்சியில் அடிமைகளாக இருந்தோம். ஆங்கிலேயர்கள் வெளியேறிய பிறகு சுதந்திரம் பெற்றவர்களாக இருப்போம் என்று தலைவர்கள் கூறியதை மக்களும் நம்பினர். வடவர் ஆதிக்கம் பேராயக்கட்சியில் கோலோச்சுவதால் தமிழர் நலனில் அக்கறைகாட்ட வில்லையென்றும் திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தால்தான் தமிழர் வாழ்வு மேன்மையுறும் என்றும் கூறப்பட்டது. நாற்பது ஆண்டுகளாக சுத்தத் தமிழர்களின் ஆட்சி தொடர்கிறது. *நன்றாகத்தான் பேணப்படுகிறது தமிழர்நலம். தங்களின் அதிகார விளைச்சலுக்கு வடவரின் நல்லுறவை வளர்த்துக் கொண்டனர். வல்லரசுகளின அனைத்துச் சுரண்டல் முறைகளுக்கும் அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். தங்களின் பங்கிற்கும் குறைவு வராமல்*

உடன்பாடுகளைச் செய்துகொண்டனர். இனமானம், மொழி, பண்பாடு, சுயமரியாதை என்றெல்லாம் வாரி இறைக்கப்பட்ட சொற்களால் வசமிழந்தனர் தமிழர். மொழி பெரும் ஆற்றலுள்ளது என்று அமைப்பியல்வாதிகள் கூறியபொழுது சற்றே திகைத்தனர் தமிழ் அறிஞர்கள். ஆனாலுமென்ன! *அயலக வாழ்க்கை, அளவிலாப் பொருள் வேட்கை, ஆடம்பரப்பொருட்கள் பற்றிய கனவுகளால் தமிழர் உளவியலும் கட்டமைக்கப்பட்டது.* ஊடகங்களும் தமிழர்தம் சொந்தப்பண்பாடு, நாகரிகம் என்பதை இத்தலைமுறையினர் உணராவண்ணம் ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்துத் தம் எஜமானர்களின் செல்வநிலையைப் பெரிதும் உயர்த்தின.

தலைமுறைகளின் தொடர்ச்சியாகத் தமிழர் மலம் அள்ளிச் சுமப்பதை, பலர் வீடற்று வீதிகளில் வாழ்வதைப் பெருந்தன்மையோடு பார்த்துக்கொண்டிருந்தனர் ஆட்சியாளர்கள். *தமிழ் கற்றால் அமெரிக்காவுக்குப் போக முடியாதென்று ஆங்கிலத்தை அரிச்சுவடியாகக் கற்பிக்க வகைசெய்தது புறநானூற்றுப் பெருமைபேசிக் கழித்த தமிழ் அதிகாரம்.* அமெரிக்க முதலாளி தயாரித்த இங்கே விற்கும் குளிர்பானத்தில் நச்சுதன்மை உள்ளதென்று மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் கூறினால், அதெல்லாம் பொய், தாராளமாகக் குழந்தைகளும் குடிக்கலாம் என்று தமிழர் நலம் பறை சாற்றுகிறது. இது தான் நிலை. *ஆண்டுக்கு நாற்பதாயிரம் கோடி ரூபாய்க்குச் சீமைச்சாராயம் விற்று தமிழர் நலம் சிறப்பாகவே பேணுகிறது தமிழர் அரசாங்கம்.*

4. 'தனிநாடு, தனிஆட்சி என்றெல்லாம் நாம் பேச இயலாது. இருந்து கொண்டிருக்கும் ஆட்சிமுறையில் நாம் இழந்து விட்ட உரிமைகளைப் பெறுதற்கான விழிப்புணர்ச்சியும் தேவையான செயல்முறைகளும் அவசியம். அரசியல் என்ற வகையில் தமிழ் தேசியம் என்பது தான் நமக்கு ஏற்புடையது'; *ஆனால் இனத்தின் பெயரால் எத்தகைய கீழ்மைகளையும் (சாதியக்கொடுமைகள், இழிதொழில்கள் செய்யவேண்டிய கட்டாயம், ஆலய நுழைவுக்கு மறுப்பு போன்றவை) சகித்துக் கொண்டிருக்க முடியாது.* அந்த வகையிலான (கட்டுரையின் இறுதியிலுள்ள) கடமைத்தொகுப்பு முற்றிலும் ஏற்க வேண்டியதே. குறிப்பாக தொழில்கள். சிறிய அளவிலான பரந்துபட்ட மக்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கக்கூடிய வகையிலானதும் இங்குள்ள மக்களின் இன்றியமையாத் தேவைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டதாக இருக்கவேண்டும். வழிவழியாக நாம் மேற்கொண்டுவந்த வேளாண்மைச் செயல்முறைகளை முன்னிலைப்படுத்தி, கால்நடைகளின் பெருக்கம், மரங்கள் வளர்ப்பதை உயர்ந்த பணியாகக் கருதி உள்ளாட்சி நிர்வாகங்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவை இணைந்து அதற்கான உண்மையான முயற்சிகளைத் தொடங்க வைத்தல், இயற்கை உரங்கள், பூச்சிவிரட்டிகள், நுண்ணூட்டச் சத்துக்கள் போன்றவற்றைத் தயாரிப்பதில் இளைஞர்களுக்கு உற்சாகம் ஏற்படத்தக்க வகையில் செயல்முறைகளை வகுத்தல் தேவை. நுகர்வுப் பண்பாட்டை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் சமூகப் பயன்பாடுகளை மாற்றியமைக்க முயலுதல். உயர்நிலைக் கல்விவரை தமிழைப் பாடமொழியாகப் பயன்படச் செய்தல் விருப்பத்துடன் பிறமொழி கற்க வாய்ப்பளித்தல் வேண்டும். தனிமனித உயர்வு என்பதான உணர்வினைக் குறைத்து சமூகஅக்கறைகளில் ஈடுபடும் உளவியல் இளைஞர்களிடம் உருவாகத்தக்கவாறு கல்வியின் உள்ளீடு அமைதல் தேவை. அயல்நாட்டுக் கல்வி, அயல்பண்பாடு, அயல்நாட்டுப் பொருள்கள் மீதான தமிழரின் வேட்கை தணிப்பிக்க சமூக ஆர்வலர்கள் முயலவேண்டும்; கல்விக் கொள்கையும் தொழிற் கொள்கையும் அரசின் வேளாண் கொள்கையும் இத்தகையதாக அமையுமாறு வெகுமக்கள்

மத்தியிலிருந்தும் அறிவுப்- புலத்திலிருந்தும் நெருக்குதல்கள் தொடரவேண்டும். நமக்கு முன் இரண்டே வழிகள் தாம் உள்ளன.

(அ) நவீனக்கல்வி, நவீன அறிவியல் தொழில் நுட்பம், இவற்றின் மேலெழும் நவீனத் தொழில்கள் அவற்றால் விளையும் அந்நியச் சார்பு, அதற்கேற்ற அடிமை அரசியல் நெறி, ஆடம்பரக்கனவுகளுடன் சுயமரியாதை தொலைத்து வாழும் தமிழ்ச் சமுதாயம். *(ஆ) அன்பு, அறம், சமத்துவம் போன்றவற்றை வாழ்க்கை நெறியாகக் கொண்டு பிறரை மதித்து வாழும் கூட்டுறவு வாழ்க்கை அது அமையத் தேவையான உழைப்பில் ஈடுபடுவது: உறுதுணையாக தமிழர்கலைகள் இலக்கியம் போன்றவற்றைப் பேணி மெய்யான மனிதம் உள்ளுறைந்த தமிழ்ச் சமுதாயம்.* இரண்டாவது வழியில் தொடரும் பயணத்தின் வழியாக தமிழ் நாகரிகம் தன்னை உயிர்ப்பித்துக் கொள்ளமுடியும்.

4. பொது வேலைத் திட்டத்தால் இனத்தை ஒன்றுபடத் திரட்டல்

பாவலர். முவ. பரணன்

1. தமிழில் நாகரிகம் என்ற சொல் பண்பாட்டையும் குறிக்கும். ஆயின் பண்பாடும் நாகரிகமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஆனால் வெவ்வேறானவை. திருவள்ளுவர் சான்றோரின் சிறந்த பண்பாகிய கண்ணோட்டத்தை நயத்தக்க நாகரிகம் என்பார். (குறள் 580) பாவாணர் பண்டைத் தமிழ்நாகரிகமும், பண்பாடும் என்று நூல் எழுதினார். நாகரிகம் என்பது மக்களின் புற வாழ்க்கையோடு தொடர்புடைய, அவர்களின் தொழில், தொழில் திறன், செய்நேர்த்தி. அதன் பயன்பாடு என அடைவதாகும். சிந்துவெளி நாகரிகம், சுமேரிய நாகரிகம் என்பவை அக்காலகட்டத்தில் அவ்வப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வேளாண்மை, கட்டடக்கலை, எழுத்துமுறை என அவர்களின் தொழில் சார்ந்த நடவடிக்கைகளின் வெளிப்பாட்டை, பயனைக்குறிப்பதாகும். ஆயின் பண்பாடு என்பது பழிக்கஞ்சும் நாணம், அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, கற்பு என அவர்களின் வாழ்வியல் ஒழுகலாறுகளைக் குறிப்பதாகும்.

தமிழர்களின் நாகரிகக் கூறுகளாகிய, வேளாண்மை, அவை சார்ந்த துணைத் தொழில்கள், கட்டடக்கலை, சிற்பம், ஓவியம், வானியல், கணிதம், கப்பல் கட்டுதல், அணிகலன் செய்தல், இசை, நாட்டியம் என அவை போன்றவற்றில் சிலவற்றில் தேய்வும், சிலவற்றில் வளர்ச்சியின்றி உள்ளபடியும் இருப்பதாகத்தான் தென்படுகின்றன. கடந்த மூவாயிரம் ஆண்டிற்கும் முற்பட்ட மேற்குறித்த நாகரிகக் கூறுகளின் மேன்மையைக் கணித்துப் பார்ப்பின் இன்று அவர்கள் அதனினும் பல நூறு மடங்கு சிறந்தவையான அறிவியல் தொழில் நுட்பக் கூறுகளைக் கொண்டு இயங்கி இருக்க வேண்டும். ஆயின் தேய்ந்த நிலை அல்லது தேக்க நிலை. கடந்த ஒரு நூற்றாண்டிற்கு மேலாக இவைபற்றி விரிவாக அலசி ஆராயப்பட்டு, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகமும் வலைவிரிப்புமே கரணியங்களென முடிவு சொல்லப்பட்டுள்ளன. கடந்த மூவாயிரம் ஆண்டில் மிகச் சிறந்த தமிழர்களின் நாகரிகம் பண்பாட்டுக் குணங்களும், படிப்படியாகச் சிதைந்து, ஆரியப் பார்ப்பனிய வண்ணமாக மாறி இழிந்து போயின. தொல்காப்பியர், திருவள்ளுவர், தொடங்கி நேற்று பாவேந்தர், பாவாணர், பெரியாரென இவர்களுக்கு விழிப்பூட்டவும்,

இயங்க வைக்கவும், ஒன்று படுத்தவும் எடுத்த முயற்சி எல்லாம் விழலுக்கிறைத்த நீராயின.

இனம் ஒன்றுபடாமல் தடுக்கின்ற பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகையும் திருவள்ளுவர் காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டுத்தான் இருக்கின்றன. மூவேந்தர்களுக்கோ பிற்காலச் சோழர்களுக்கோ இன்றைய சமூக அரசியல், தமிழ்த்தேசியம் பேசும் பல்வேறு இயக்கத்தலைவர்கட்கோ ஒருங்கிணைந்த காலவரம்புக்குட்பட்ட குறியீட்டிலக்கை அடைவதற்கான பொது வேலைத்திட்டம் இல்லை. சார்பு கெட ஒழுகுதல் என்பது மெய்யுணர்ந்த துறவர்களுக்கு மட்டுமின்றி சமூக மேம்பாட்டிற்குழைக்கின்ற தலைவர்கட்கும் கட்டாயம் தேவை. தன்னியக்கம், தன்னிக்கத்தின் தனிச்சிறப்பான கொள்கை, தன் தலைமைச் சிறப்பு என்பவற்றைத் துறந்து, இனம் ஒன்று படுவதற்காகத் தன்னைக் கரைத்துக்கொள்கின்ற செயல் திறவோர் வேண்டும். *இன்று தமிழ்த் தேசியம் பேசுகின்ற இயக்கத்தார் சிறுசிறு கொள்கை வேறுபாடுகளால் பிரிந்து பல குழுவாக இயங்குவதை உடனடியாகத் தவிர்த்து ஒருங்கிணைந்து ஓர் பொது வேலைத்திட்டத்தில் செயல் பட முன்வர வேண்டும்.* இம் முயற்சி இன்றியமையா உடனடித்தேவை.

2. தமிழ்நாகரிகப் பண்பாட்டை சிதைவுறாதவாறு பேணிக்காத்து மேலும் செழுமைப்படுத்தக் கீழ் காணும் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயலவேண்டும்.

உலக முதல் உயர்தனிச்செம்மொழியாகிய செந்தமிழின் தொன்மை, இயன்மை, இனிமை, மூலமொழிக்குரிய தலைமைப்பண்பு ஆகியவற்றை விளக்கும் வண்ணம் உலக மொழியாய்வாளர்களின் பார்வையிற்படும்படியாகத் தொல்காப்பியம், திருக்குறள் பிற இலக்கியங்களை உலக மொழிகளில் குறிப்பாக ஆங்கிலத்தில் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்புகளாக – திரட்டுகளாகச் செய்ய, தகுதியான பேராசிரியர்களைக் கொண்ட குழுவை அமைக்கவேண்டும்.

பள்ளிக்குழந்தைகள், கல்லூரி இளைஞர்கள், பணியாற்றுவோர் உழைக்கும் அடித்தட்டு மக்கள் என அனைத்துப் பிரிவினரிடமும் ஆரியப்பார்ப்பன எதிர்புணர்வையும், அமெரிக்க வல்லாளுமை எதிர்ப்புணர்வையும் அவர்கள் மனங்கொள்ளுமாறு புகட்டவேண்டும். பள்ளிக் குழந்தைகளின் உள்ளங்களில் பைந்தமிழ் உணர்வைப் பதியம்போட ஆவன செய்யவேண்டும். தாய்த்தமிழ்ப் பள்ளிகளில், இன்றைய அறிவியல் தொழில் நுட்ப ஊழிக்குத் தக்கவாறு ஒரே வகையான சீரிய பாடத்திட்டத்தைப் பல்துறைச்சார்ந்த தமிழ் உணர்வாளர்கள், கல்வியாளர்களைக் கொண்டு வகுத்துச் செயல்படுத்த வேண்டும். அதேபோன்ற பாடத்திட்டத்தை அரசுப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தவும், அரசே தாய்த்தமிழ்ப் பள்ளிகளை ஏற்றுக் கொள்ளுமாறும் செய்யவும் சூழ்ந்து முடிவெடுக்க வேண்டும்.

3. தமிழ் தேசியந்தான் நம் அனைத்து முடக்கத்தையும் கட்டவிழ்த்து முன்னேற்ற வல்ல கூர் கருவி

என்பதை முழுமையாக நம்பி ஏற்றுக் கொண்டு தமிழ்த் தேசியச் சிந்தனையுடைய இயக்கத்தார் ஒவ்வொருவரும் தமிழ்த் தேசியக் கட்டமைப்பிற்குத் தேவையான ஒவ்வொரு பிரிவை எடுத்துக்கொண்டு செயல்படவேண்டும். தமிழ்த் தேசியத்திற்குச் சார்பான பெரியாரியல் சிந்தனைகளைப் பரப்பவும் மக்கள் நடைமுறையில் கடைப்பிடித்தொழுகுமாறு செய்யவும் ஒரு குழுவினர் செயலாற்ற வேண்டும். அவர்களுக்கு மூட நம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவுக் கருத்துப் பரப்பல், ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்புணர்வை விதைத்தல்

என்ற பணிகளை அளிக்கவேண்டும். சாதியக்கூறுகளைத் தகர்க்கும் அதிரடி வேலைகளைத் தொடங்குமாறு கூறவேண்டும்.

மார்க்சியக் கருத்துகளைப் பரப்பவும், அமைப்புச் சார்ந்த, சாராத உழைக்கும் மக்களையும், உழவர்களையும், ஓரணியில் திரட்டவும், அமெரிக்க வல்லாளுமை உணர்வை அனைத்து மட்டத்திலும் பரப்பவுமான வேலைத்திட்டத்தை ஒரு குழுவினரிடம் ஒப்படைக்கவேண்டும். (உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் எதிர்ப்புணர்வு கருத்துக்களைப் பரப்பவுமான வேலையும் இதில் அடங்கும்).

உலகத்தமிழர்களை ஒருங்கிணைக்கவும் உலகின் பல இடங்களுக்குப் புலம் பெயர்ந்த தமிழர்களைத் தமிழ் ஒன்றே பற்றுக் கோடாகக்கொண்டு ஒருங்கிணைக்கவும், வெளிநாடு வாழ் தமிழர்களின், குழந்தைகளின் தமிழ்க்கல்விக்குரிய ஏற்பாடுகளைக் கவனிக்கவும், அவர்களைத் தமிழ்க்கலை இலக்கியப் பண்பாட்டுக் கூறுகளால் இணைக்கவுமான நடவடிக்கைகளை ஒரு குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களிடமிருந்து திங்கள் தோறும் அல்லது ஆண்டுதோறும் அவரவர் வருவாய் அடிப்படையில் குறிப்பிட்ட பொருளைத் திரட்டி ஒரு தமிழர் மேம்பாட்டுப் பொருட்குவையை(நிதியத்தை) நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களையும் பிற்படுத்தப்பட்ட மக்களையும் முழுமையாக இணைத்துக் கொண்டு தமிழ் தேசிய அரசியலை முன்னெடுத்துச் செல்லும் பணியை ஒரு குழுவாரிடம் ஒப்படைக்க வேண்டும். இக்குழுக்களின் தலைமை அமைப்பாளர்களையும் பல்திறச்சான்ற அறிஞர்களையும் கொண்ட தலைமைச் செயற்குழு அமைக்கப்பெற்று அவர்களின் கண்காணிப்பிலும், காலமுறைப்பட்ட மீள் பார்வை மறுசீரமைப்பு வழியாகவும் இலக்கு நோக்கிய முன்னேற்றம் குறித்த ஆண்டறிக்கைகள் உருவாக்கி கலந்துரையாட வேண்டும். அரங்குகளில் அறிஞர்களும் உணர்வாளர்களும் கூடி வீரம் கொப்பளிக்கப் பேசிப்பிரிதல் என்ற நிலையிலிருந்து மாறி புதிய செயலூக்கத்தோடு பொது மக்களிடம் அவர்களின் அன்றாட வாழ்வியல் சிக்கலினூடாகத் தமிழ்த் தேசியப் புரட்சிக்கான கட்டமைப்பு வேலைகளைத் தொடங்கவேண்டும். தொடங்கினால் எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே என்ற பாவேந்தர் வரிகள் உண்மையாகும் பழந்தமிழ் மாட்சி தங்கும். புதுமை பூக்கும். ஆக்கம் விளையும்.

5. தமிழ் நாகரிகம் இன்று என்னவாக இருக்கிறது?

கி. இளங்கோ, சேலம்

1. பல ஆண்டுகளாக உறங்கியும், உறங்காமலும் நான் காணும் பகற்கனவுகளில் தமிழ் நாகரிகம் இடம் பெறத் தவறுவதில்லை. பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் என்பவை உடுப்பது, உண்பது, மற்றவர்களிடம் பழகுவது, இருந்து வரும் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவது, இயலாதவை அல்லது தேவையற்றவற்றைக் கைவிடுவது அல்லது ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொள்வது என்ற வாழ்க்கை முறையைக் குறிக்கும் சுருக்கச் சொற்கள். இவை சாதி, மதம், இனம், மொழி, மண், மனம், காலம் சார்ந்தவை. தமிழ் நாகரிகத்தின் கடந்த காலம் குறித்துப் பெருமிதப் பெருமூச்சுகள், நிகழ்காலம் குறித்த சவலைப் பார்வைகள், எதிர்காலம் குறித்த கவலைச் சிந்தனைகள் தமிழுணர்வாளர்களுக்கு முக்காலமும் உண்டு. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாகரிகத்திற்குத் தெளிவான வரையறைகளைத் திருவள்ளுவர் வகுத்திருந்தார்.

காலத்திற்கேற்றவாறு அவற்றிலும் மாற்றம் காணமுனையலாம். 'கொழுநன் தொழுதெழுவாள்' (55) காலக் கழிப்பிற்கு உட்பட வேண்டிய பெருமையே! (அமர்ந்தோ, குனிந்தோ, படுத்தோ தொழுதால் மட்டுமே எழுதல் இயலும் ...)

சிலப்பதிகார ஆசிரியர் மீது கொண்ட பற்றால் எனக்கு என் தந்தை 1946 இல் இளங்கோ என்று பெயர் சூட்டினார். சிலப்பதிகார நாயகி மீது கொண்ட பற்றால் 1954இல் கண்ணகி என்று என் மனைவியின் தந்தை பெயர் சூட்டினார். தந்தையின் பெயர் மட்டுமல்ல, தாயின் பெயரும் குழந்தையின் பெயருடன் இணைந்து நிற்றலே நீதி எனக்கருதி, எங்கள் பெயர்களின் முதல் எழுத்துக்களையும் இணைத்து, சாதி, மத, இன, பால்வேறுபாடு கண்டறிய இயலாதவாறு எங்கள் மகனுக்கு 1984இல் க.இ. இளவேனில் என்று பெயர் சூட்டினோம். தமிழ்க் குழந்தைகளின் பெயர்களில் ஷ், ஸ், ஹ, ஜ எழுத்துகளில் ஒன்றாவது இடம் பெற்றாக வேண்டும் அல்லது அனாமிகா, இனாமிகா, பினாமிகா, அஸ்திகா, அவந்திகா என்று பொருள் புரியாமல் இருக்க வேண்டும் என்ற மயக்கத்திற்கு ஆட்பட்ட தமிழர்களை நாம் அடிக்கடி சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

பல நூற்றாண்டுகளாக ஒற்றுமை என்ற சொல்லிற்குத் தமிழினம் கண்ட பொருள் எட்டிக் கனியின் தீஞ்சுவை என்பதே என்பதால் தமிழ் நாகரிகம் பலவாறு சிதறிக் கிடந்த வரலாற்றுப் பெருமையும் உண்டு. சாதிப்பற்று என்பது தமிழ் நாகரிகத்தின் ஒரு கூறாகப் பெரும்பாலான தமிழர்களின் மரபணுக்களில் நீக்கமற நிறைந்திருப்பதற்கான சான்று பெற நாம் மரபணு அறிவியல் அறிஞர் எவரையும் தேட வேண்டியதே இல்லை!.

2. திருமணம் என்பது பெற்றோர் ஏற்பாடு செய்வதாகவே பெரும்பாலான தமிழ்ப் பெண்களைப் பொருத்த வரையான தமிழ் நாகரிகத்தின் ஒரு பெருங்கூறாகவே நிலைபெற்றுள்ளது. தமிழரின் சாதிப்பற்றே இதன் அடிப்படையாக இருக்க வாய்ப்புண்டு. காதல் என்ற சொல்லும் செயலும், சாதி மறுப்புத் திருமணம் என்ற மனமிசைவு மணவாழ்க்கைக்கான வரவேற்பும் பெரும்பாலான பெற்றோருக்கு சிறியாநங்கை இலை இனிப்பே! ('சிறியா நங்கை' நல்ல பாம்பின் நஞ்சு முறிவு மூலிகை. இணையற்ற கசப்புச் சுவை உடையது). தன்னுரிமை பல இழந்து, தான் வாழ்ந்த முறை துறந்து, ஒருவனின் தாலிக் கயிற்றால் கட்டுண்டு, தன் விருப்பு வெறுப்புக்களைப் புகுந்த வீட்டில் புதைத்து விட்டு, அவன் தீண்டலுக்குத் தன்னை ஆட்படுத்தி, அந்த இன்னொருவனின் சொந்தங்களின் பார்வையில் தோற்பாவையாகி, உழைப்பில் தோய்ந்து, தமிழ்ப் பெண் வாழும் வாழ்க்கை முறை தமிழ் நாகரிகமாகப் போற்றப்படுவது என் மனதில் நிலைத்த வடு. 1959இல் வெளியான மு.வ. வின் 'பெண்மை வாழ்க' என்ற நூல் தமிழ் நாகரிகம் பற்றிப் பேசியவை நினைவுகளில் நிழலாடுகின்றன.

பெரும்பாலான தமிழர்க்குத் தமிழ்ப் பற்றை விட, ஆங்கில மொழி மீதான மயக்கமே மிகுதி. *தமிழர் திருநாளான பொங்கலுக்கும் வாயில்கோலத்தில் 'விஷ் யூ ஹேப்பி பொங்கல்' என்று ஆங்கில எழுத்துக்களில் எழுதி, ஆங்கில வாழ்த்து அட்டைகளை அனுப்பப் பழகிவிட்டவர்கள், ஆங்கிலப் புத்தாண்டைப் பெரும் சிறப்புடன் கொண்டாடுவதில் வியப்பில்லை.* நகரப் பொங்கல் சோற்றினை, 'பிரஷர் குக்கர்' களில் உருவாக்குவது எளிதாக இருக்கிறது. கணவனின் நண்பன், மனைவிக்கு அண்ணன் முறை என்ற நிலை மாறி, 'உங்க ஃபிரண்ட்' என்று மனைவியும், மனைவியின் தோழி கணவனுக்குத் தங்கை முறை என்ற நிலை மாறி, 'உன் ஃபிரெண்ட்' என்று கணவனும் சிக்கல்கள் நோக்கிச் செல்லும் பழக்கம் வந்துள்ளது.

1969இல் ஒருநாள் மதுரை நகரப் பேருந்து ஒன்றில் நண்பருடன் அமர்ந்து பயணம் செய்த போது சேலையின் படபடப்பு எங்கள் பேச்சை நிறுத்தியது. நிமிர்ந்தோம். இன்னும் சில நாட்களில் மகப்பேறு எதிர்நோக்கும் நிலையில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தார். நண்பரும், நானும் எழுந்து எங்கள் இருக்கையில் அமர வேண்டினோம். அவர், ‘ஐ டோண்ட் வாண்ட் யுவர் மெர்சி’ என்று பதிலுரைத்து, நின்றே பயணம் தொடர்ந்தார். ‘கருணையினால் அல்ல’ என்றும், தாய்மைக்கு மதிப்பளித்தே அமரச் சொல்வதாகவும் நண்பர் விளக்கினார். எனினும் அவர் அமரவில்லை. ‘நீங்களும் உட்காரமாட்டீர்கள். அவரும் உட்காரப் போவதில்லை. இந்த சீட் ஏன் காலியாக இருக்க வேண்டும்?’ என்று சொன்னவாறு இன்னொருவர் வந்தமர்ந்து கொண்டார். நாங்கள் மூவர் மட்டும் நின்றவாறு பயணம் செய்து கொண்டிருந்தோம். வேகத்தைக் குறைக்காமல் ஓட்டுநர் பேருந்தைத் திருப்பிய போது அனிச்சையாக இரு செயல்கள் நிகழ்ந்தன. நிலை தடுமாறி அந்தப் பெண் விழுந்து விடாமலிருக்க நண்பர் இருக்கையின் மேற்கம்பியைப் பற்றித் தன் கையைக் குறுக்கே வைத்துக் கொண்டார். நிலை தடுமாறிய அந்தப் பெண் என் தோளைப் பற்றி சமநிலை அடைந்தார். சற்று நேரத்தில் மூவரும் ஒரே நிறுத்தத்தில் இறங்கி நடந்த போது, அந்தப் பெண், ‘சாரி’ என்றார். 37 ஆண்டுகள் ஆகியும் பேருந்துப் பயணத் திருப்பங்களில் எனக்கு இதே நடுக்கம் தான்.

2002இல் சென்னையில் ஓர் இரவு. நகரப் பேருந்து நிறுத்தம் ஒன்றில் ஒரு பேருந்தை எதிர்நோக்கி நின்று கொண்டிருந்தேன். எதிரிலிருந்த விரைவு உணவு விடுதியிலிருந்து 35, 40 வயதினரான ஒரு பெண்ணும், இன்னோர் இளம் பெண்ணும் வந்தனர். பேரிளம் பெண் துப்பட்டா இல்லாமல் சுடிதார் உடையில். இடப்புறம் மட்டும் துப்பட்டா தொங்கும் சுடிதார் உடையில் இளம் பெண். நான் காத்திருக்கும் அதே நகரப் பேருந்து சென்று விட்டதா என இளம்பெண் ஆங்கிலத்தில் கேட்டார். *தமிழில் கேட்டால் பதில் சொல்வதாகத் தமிழில் கூறினேன். என் மீது ஏளனப் பார்வை வீசிய இளம்பெண் ஏதும் பேசவில்லை.* பேரிளம் பெண் தமிழில் கேட்டார். அதே பேருந்திற்காக நீண்ட நேரமாகக் காத்திருப்பதாகச் சொன்னேன். சற்று நேரத்தில் அந்தப் பேருந்து வந்தது. மகளிர் பகுதியில் நடுவில் ஒரே பெண். இவர்கள் இருவரும் அந்தப் பெண்ணின் முன் இருக்கையில் அமர்ந்து, போகுமிடம் சொல்லிப் பயணச்சீட்டு வாங்குமாறு பின் இருக்கைப் பெண்ணிடம் பணம் நீட்டினர். அவர் அசையவும் இல்லை; பதிலும் சொல்லவில்லை. பெரும்பாலும் சென்னை நகர அரசுப் பேருந்து நடத்துநர் தன் இருக்கையில் அமர்ந்தே இருப்பார். பயணிதான் அவரை அணுகிப் பயணச்சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சேலத்திலிருந்து பெங்களூர் சென்ற போது, தொடர்வண்டிப் பாதைக்குச் சிறிது தொலைவில் 7,8 வயதுச் சிறுமி கையில் குச்சியுடன், சுடிதார், கழுத்தைச் சுற்றி இரு நுனிகளும் பின்புறம் தொங்கும் வண்ணம் துப்பட்டா அணிந்து ஆடுகள் மேய்ப்பதைக் காண நேர்ந்தது. *பெரும்பாலான மெட்ரிக் பள்ளிகளின் மாணவியர் உடை தமிழர் உடையன்று. கட்டாயமில்லை என்றால் கல்லூரி மாணவியர் தமிழர் உடை அணிவதில்லை.*

2005 இறுதியில் சென்னையில் ஓர் இரவு. 9.30 மணிக்கு மேல் நகரப் பேருந்து நிறுத்தம் ஒன்றில் காத்திருக்கும் போது, 6,7 வயதுச் சிறுமி, 4,5 வயதுச் சிறுவனுடன் நல்ல முறையில் சேலை அணிந்த ஏழைப் பெண் ஒருவர் வந்து நான் காத்திருந்த அதே பேருந்து சென்று விட்டதா என்று கேட்டார். அரை மணி நேரமாக வரவில்லை என்றேன். மேலும் 15 நிமிடம் காத்திருந்துப் பொறுமையிழந்து, ‘அம்மா, நீங்கள் போக

வேண்டிய இடம் தாண்டித்தான் நான் போகிறேன். மணி 10 ஆகப் போகிறது. ஆட்டோவில் போக நினைக்கிறேன். குழந்தைகள் தூங்கப் பார்க்கிறார்கள். வழியில் நீங்கள் இறங்கிக் கொள்ளுங்கள் என்றேன். 'முன்னபின்ன தெரியாத ஆம்பிளையோட ராத்திரி எப்படி அண்ணே தனியா ஒரு பொம்பள வரமுடியும்?' என்று மறுத்துவிட்டார். 'அது சரிதாம்மா. இன்னுங் கொஞ்ச நேரம் பார்க்கலாம்' என்றேன். மணி 10.15க்கு மேலும் ஆயிற்று. நாங்கள் செல்ல வேண்டிய பேருந்து வரக் காணோம். அதற்குள் சிறுவன் உறங்கிவிடவே, தோளில் சுமந்தவாறும் சிறுமியைத் தன் மீது சாய்த்தவாறும் நின்ற அந்தப் பெண் தயங்கியபடி கேட்டார், 'அண்ணே ஆட்டோவுக்குக் காசு இல்லண்ணே'. 'காசெல்லாம் வேண்டாம்மா. இனிமே எப்படியும் நான் ஆட்டோவில்தான் போயாக வேண்டும். வழியில் உங்களை இறக்கி விட்டுட்டுப் போறேன்' என்று சொல்லி, 'ஓர் ஆட்டோவை அழைத்து ஏறி அமர்ந்தோம். ஓட்டுநர் அருகே நான் அமர்ந்து கொண்டேன். சிந்தாதிரிப்பேட்டைப் பக்கம் கூவம் கழிவாற்றங்கரையில் ஒரு குடிசை போன்ற குடியிருப்பிற்கு அந்தப் பெண் வழிகாட்டினார். மனைவி, மக்களுக்காக வாயிற்கல்லின் மீதமர்ந்து கவலையுடன் காத்திருந்த தன் கணவரிடம் அந்தப் பெண் சொன்னார், 'இந்த அண்ணன்தான் இட்டாந்துச்சு, போயி ஆட்டோகாரருக்கும் அண்ணனுக்கும் டீ வாங்கிக் குடுத்து அனுப்பிச்சுட்டு வந்துடு. அந்நேரம் தேநீரெல்லாம் வேண்டாம் என்று சொல்லி விட்டுப் புறப்படும் போது, குழந்தைகளைப் படுக்க வைத்து விட்டு வெளியே வந்த அந்தப் பெண் சொன்னார், 'ரொம்ப டேங்ஸ்ண்ணே'.

3. கேழ்வரகுக் களி, கம்பு, வரகு, சாமைச் சோறு, தினைமாவுத் தின்பண்டங்கள், தும்பை, தொய்யை, பண்ணை, குமுட்டி, கரிசலாங்கண்ணிக் கீரை வகைகள், மண்சட்டிச் சமையல் நகரம் புகுந்தோரிடமிருந்து விலகிச் சென்றுவிட, பிஸ்ஸா, பர்கர், சில்லி இட்லி, சில்லி பரோட்டா, நான், குல்ச்சா, கோபி மஞ்சூரியன், ஃபிரைடு ரைஸ், கிரேவி வகைகள் தமிழர் நாவிற்குச் சுவை கூட்டி, உடலுடன் விளையாடி வருகின்றன.

விருந்தினர் வந்தால் முதலில் செம்பில் குடிக்கத் தண்ணீர் தருவது மாறி, 'ஹாட் ஆர் கோல்ட்? காபியா, டீயா? சர்க்கரை போடலாமா? என்று கேட்டுக் கொண்டு, குளிர்ப்படுத்தும் பெட்டி திறந்து பெப்சியோ, கோகோ கோலாவோ, வேறு ஒன்றோ ஊற்றித் தந்துவிடும் பழக்கத்தால், காபி, தேநீர் தயாரிப்புப் பணிச் சுமையும் குறைத்துக் கொள்ளப்படுகிறது. செல்லும் நேரமும் தொலைக்காட்சித் தொடர்களின் நேரமாக இல்லாமல், செய்திகளின் நேரமாக இருந்து விடுவது விருந்தினர்க்கு நல்லது! வி. சாந்தாராம் எழுதி இயக்கி நடித்த இந்திப்படம், 'தோ ஆங்கேன் பாராஹாத் (இரு கண்களும், பன்னிரண்டு கைகளும்)' 1963 இல் பார்க்கக் கிடைத்த போது, தமிழ் நாகரிகம் அடியொற்றிய காந்தியப் புனைகதை என்று தோன்றியது. இப்படம் பல ஆண்டுகளுக்குப் பின்னர் 'பல்லாண்டு வாழ்க' என்று தமிழில் எடுக்கப்பட்டு வெளியாயிற்று. தமிழ் நாகரிகம் பற்றிய பார்வைகளுக்கு இவ்விரு படங்களும் நல்ல சான்று. தமிழ்த் திரைப்படங்கள், தொலைக்காட்சித் நாகரிக விளக்கமும் அளித்து வருகிறார்கள். இவர்களிடமும் தமிழ் நாகரிகத்தின் எதிர்காலம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழர் வாழும் முறைபற்றி நிறைய அறநூல்களை அவரவர் வாழ்ந்த காலச் சூழலுக்கேற்ப ஆக்கி வைத்திருக்கிறார்கள். வாயுள்ள யாரும் அறிவுரை சொல்லும் வழக்கத்திலிருந்து மீள முடிந்ததில்லை. எனினும் தம் வாழ்க்கை முறையைத் தமிழர்கள் சாதி, மதம், இனம், மொழி, மண், மனம், காலத்திற்கேற்றவாறு தம்மளவில் வகுத்துக் கொண்டு வாழ்ந்தார்கள்; வாழ்கிறார்கள்; வாழ்வார்கள். அறிவுரை கூறுவதில் உள்ள ஆர்வம், கேட்டுக் கொள்வதில் இருப்பதில்லை.

ஏறக்குறைய 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ் நாகரிகப்பதிவுகளை இளங்கோவடிகள்

செய்து வைத்த பெருங்காப்பியம் சிலப்பதிகாரம் என்ற நம்பிக்கை பலருக்கும் உண்டு. 'கற்பனைக் கதாபாத்திரமான கண்ணகிக்குக் கண்ணீர் சிந்தும் கலைஞர்' என்ற ஒரு கருத்தை, 'கல்கி' இதழ் (27-8-2006) நேர்காணலின் போது தமிழர் தொல். திருமாவளவன் முன்வைத்திருக்கிறார். அடுத்து வந்த 'கல்கி' இதழ் (3-9-2006), 'கற்பனைக் கதாபாத்திரமான கண்ணகி என்கிறாரே திருமா, கண்ணகி வரலாறு இல்லையா? என்ற வாசகர் கேள்விக்கு, 'இல்லைங்க. வரலாறாகி விட்ட காவியக் கதாபாத்திரம்' என்று சொல் விளையாட்டில் இறங்கியுள்ளது.

மனநெகிழ்வு வெளிப்பாடே கண்ணீர். மனம் உறையுங்காலத்திற் கண்ணீரும் கட்டியாகிவிடும் என்ற உண்மைகள் ஒருபுறமிருக்க, கண்ணகியுடன் கோவலன், மாதவி, மணிமேகலை, கவுந்தியடிகள், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன், கோப்பெருந்தேவி, சிலம்பு அனைவரும் வரலாறாகிவிட்ட காவியக் கற்பனைக் கதாபாத்திரங்களாகி, தமிழ் நாகரிகப் பழம்பெருமை யாவும் கற்பனையாக்கப்படுகின்றன. சிலம்பில் சதுக்கபூதமும், கண்ணகி மதுரையை எரித்த முறையும், கோவலனோடு விண்ணேகியதும் காலத்தாற் கற்பனையெனக் கருத வாய்ப்பளிக்கும் வகையிலான கண்ணகி – கோவலன் மீதான ஏற்றிப் போற்றல்கள் எனலாம்.

அத்துடன் கங்காதேவி, குந்தி, காந்தாரி, பாஞ்சாலி போன்ற மகாபாரதக் கற்பனைக் கதாபாத்திரங்களையும், சீதை, இராமன், அனுமன் போன்ற இராமாயணக் கதாபாத்திரங்களையும் வரலாறாக்கித் தமிழர் தலைமீது சுமையாக ஏற்றி வைத்தவர்களையும் நாம் அடையாளம் காணாமலில்லை. அரசியலையும், அறத்தையும் இணைத்துத் தமிழ் நாகரிகம் பாடி வைத்தவர் இளங்கோவடிகள். அறம் அருகுதலும், மறம் மரத்தலும் தமிழ் நாகரிகம் மீது காலம் வரைந்த கோணற் கோலங்கள். ஏற்றுக்கொள்ளும் அரசியல் தலைமைக்கும், இணைந்து கொண்ட அரசியல் கூட்டணிக்கும் கட்டுண்டு கிடத்தலும் தமிழ் நாகரிகம் மீது காலம் தொடுத்த தாக்குதல்கள்.

தமிழ் நாகரிகம் என்னும் பொழுது, அதன் கோட்பாடுகளை வகுத்ததில் தமிழ்ப் பெண்களின் பங்கு எவ்வப் போதெல்லாம் என்ன என்னவாக இருந்திருக்க வாய்ப்புகள் அவர்களுக்கு அமைந்திருக்க முடியும் என்று நான் பல்லாண்டுகளாகச் சிந்தித்தே வந்திருக்கிறேன். *தமிழ் நாகரிகத்தின் எதிர்காலம் என்ன என்பது நம் தமிழ் மகளிர் மனங்களில் முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்கள் மீது சுமத்தப்- பட்டிருக்கும் தமிழ்நாகரிக, பண்பாட்டு, கலாச்சார வரைமுறைகளை அவர்கள் காலப்போக்கில் திருத்தி அமைத்துத் தமிழ்ச் சமூகத்தை வழிநடத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.*

ஐஐஐஐ

6. தமிழ் நாகரிகத்தின் தளர்ச்சியும் எழுச்சியும்

நாராயணசாமி

1. தமிழர் நாகரிகம் என்பது கி.மு. 6ம் நூற்றாண்டு தொல்காப்பியர் நூலுக்குப் பல்லாயிர (கி.மு.5,000) ஆண்டுகளுக்குமுன் தோன்றி வளர்ந்து செம்மைப்பட்ட மக்களினத்தின் முதல் நாகரிகமாகும். அதன் படிவங்கள் தொல்காப்பியப் பாக்களில்

தொகுக்கப்பட்டுள்ளன. நூலோர், புலவர், ஐயர் போன்று அவர் சுட்டியவை தொல் தமிழ் வள்ளுவக் கணியர்கள், ஆய்வாளர்கள், அறிஞர்களின் கருத்துக்களையும், தொன்மையான பழந்தமிழ் மரபுகளையும் பாரம்பரியங்களையுமேயாம். சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பவையே பழந்தமிழ்ப் பண்பாட்டுக் கோட்பாடுகள்.

தமிழ் வடமொழிக்கு, ஆரிய நாகரிகத்திற்கு மிக முற்பட்டது, மாறுபட்டது என்பதை உணர்த்தவே தமிழ் இலக்கண / இலக்கிய மரபுகளைத் தொல்காப்பியக் கருத்துக்கள் அமைந்துள்ளன என அண்மைக்கால ஆய்வாளர்கள், உரையாசிரியர்கள் கருதுகின்றனர். நால்வருண வகுப்புமுறை இடைச்செருகலேயென்ற தமிழறிஞர்களின் பார்வையையும் க. அறிவன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சூழலில் "ஆரியரின் வருண முறைக்குத் தொல்காப்பியர் தம் இலக்கணத் தொகுப்பில் இடம் கொடுத்தார்" என பொதுவாகக் குறிப்பிடுவது பொருத்தமற்றது. திருக்குறளும் சங்கஇலக்கியங்களும் நால்வருண முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

2. தொல்காப்பியத் திணையியலில் மக்கள் வாழும் நிலங்கள், வாழ்வியல், தொழில்கள் அடிப்படையில் குறிஞ்சியில் காடர் - மலசர் (குறவன் - குறத்தி) முல்லையில் வேட்டுவர் - ஆயர் (ஆநிறை காப்போர்), மருதத்தில் வேளாளர் (உழவன் - உழத்தி) நெய்தலில் எயினர் (மீனவர், பரதவர், கைவினைஞர், வணிகர்) பாலையில் நுளையர் (ஆறலைப்போர்) எனக் குறித்துள்ளது. தொழில் முறைப்படியான பாரம்பரியங்களை இறுக்கி, பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் மிக்க சாதிகளாக உருவாக்கிய, கீதையிலும் (4-1, 10-6) பரிந்துரைத்த, சனாதன பிராமண மனுவின் கோட்பாடுகளின் படி 'கீழோர்' எனப்பட்ட வேளாளர், தாழ்த்தி பிற்படுத்தி ஒடுக்கப்பட்டோர், பஞ்சமர்; 'மேலோர்' எனப்பட்ட வணிகர், அரசினர், *அந்தணரின் தொழில்களைச் செய்யக்கூடாது என்ற வன்முறை தன்னல ஆதிக்கத்தைத் தொல்காப்பியம் ஏற்கவில்லை.*

'அந்தணர்க்கு உரியவும் அரசர்க்கு உரியன'	தொ.பொ. மரபு 73
'வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் ஆரமும் தேரும் மாவும் மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய'	தொ.பொ. மரபு 84
'வேந்துவிடு தொழிலில் படையும் கண்ணியும் வாய்த்தனர் என்ப அவர்பெறும் பொருள்'	தொ.பொ. மரபு 81-82
'மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே'	தொ.பொ. அகம் 30
'மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப'	தொ.பொ. அகம் 32
'உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான'	தொ.பொ. அகம் 33
'வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீய ஏனோர் மருங்கிலும் எய்திட உடைத்தே'	தொ.பொ. அகம் 34
'பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே'	தொ.பொ. அகம் 35

இவற்றின்படி கூலமும் விளைத்தலும் வணிகர் கடன். படையும் கண்ணியும் வேளாண் மாந்தர்க்கும் உரியனவாகும். காவல், தூதுசெல்லல், தொழில் செய்தல், வணிகர், வேளாளர்களுக்கும் உரியன. வணிகர் ஓதுதல் நிமித்தம் பிரிதலும்,

பொருளீட்டுவதற்காக வணிகரும், வேளாளரும் பிரிதலும் உரியவரே. சாதியை அஃறிணையாகக் குறித்த தொல்காப்பியர் மனுவின் நால்வருணக் கோட்பாடுகளுக்கு இடம் கொடுத்தார் என்பது முரண்பாடு. வடவர் பிராமணர் வருகைக்கு முன்னர் ஆகமச் சடங்குகளும் இருந்ததாகத் தெரியவில்லை என்று பூ. அர. குப்புசாமி அவர்களும் குறித்துள்ளார். நால்வருண சாதிய முறைகள், மதங்களின் தோற்றப் பின்னணி, பரவல், தாக்கங்கள், வரலாறு பற்றி மருத்துவர் கோபியும், க. அறிவன் அவர்களும் அலசியுள்ளனர்.

3. கம்பராமாயணம், வில்லிபாரதம். பன்னிரு திருமுறைகள், நாலாயிரப் பிரபரந்தம் போன்ற பக்தி நூல்கள் வேற்றுமைகளைக் கற்பிக்கும் பூசல்கள் மிகுந்த மதக்கோட்பாடுகளைப் பரப்பி மக்களைப் பிரித்ததைத் தவிர, பழந்தமிழர் நாகரிகப் பண்பாடுகளை எங்ஙனம் வளர்த்தன என்பது கேள்விக்குறியது. அவை நம் பண்டைய நாகரிகத்தின் வீழ்ச்சியைத் தொடக்கிய படிக்கட்டுகளாக அமைந்தன என்பதை மறுக்கஇயலாது. பக்தியின் பெயரால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் பலவற்றில் தமிழுக்கு நுழைவிடமில்லை; அங்கு தமிழிசைக்கும், கூத்துக்கும், சிற்பக்கலைக்கும் உரிய மதிப்போ, வாய்ப்போ இப்போது இல்லை.

சிந்துவெளி நாகரிகம் பழந்தமிழர் நாகரிகத்தின் அடிப்படையில் தோன்றி வளர்ந்ததுதான் என்பதை உறுதிப்படுத்தும் மற்றொரு அண்மைய அகழ்வாய்வு ஆதாரம் நாகப்பட்டின மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்த செம்பியன் கண்டியூரில் ஆசிரியர் சண்முகநாதன் வீட்டின் புழக்கடையில் தோண்டிய போது 'புதிய கற்கால' கைக்கோடரிகள் இரண்டு கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்றில் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மொகஞ்சோதரோ - ஹரப்பா நாகரிகக் கால எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

4. "தன்னாட்சி இறையுரிமை பெற்ற மொழி வழி மாநிலங்கள் விரும்பி அமைக்கும், பிரிந்து செல்லும் உரிமையை விட்டுவிடாத, ஒன்றிய அரசே நம் குறிக்கோள்; 'மாநிலத்தில் தன்னாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதில்தான் மாநிலங்களின் தன்னுரிமை நிலைக்கும்; அவை ஏற்கும் பொதுவான செயல்பாடுகளே ஒன்றிய அரசைச் சாரும்" என்ற அரசியல் கோட்பாட்டை 1946க்கு முன் உறுதியளித்த பேராயக் (காங்கிரசு) கட்சியும்,

"இந்தியாவில் ஒவ்வொரு பகுதியும் கட்டற்ற தனிநாட்டு உரிமை பெறவேண்டும் (இந்திய பொதுவுடைமைக் கட்சியினரின் இங்கிலாந்து அமைச்சரவைக் குழுமுன் விண்ணப்பம் - 15-4-1946), இங்குள்ள நாட்டினங்கள் அனைத்திற்கும் தனிநாட்டுரிமை வழங்கி அரசியல் சட்டம் செய்ய வேண்டும் (பொதுவுடைமைக் கட்சியின் கல்கத்தா மாநாடு 27-2-1948) என்று சொன்ன மார்க்சியவாதிகளும்., *ஆங்கிலேயரின் விடுதலைக்குப் பின்னர் பிராமணீய ஆதிக்கத்தால் தங்கள் முகமூடிகளைக் களைந்து, பாதைகளை மாற்றிக் கொண்டனர்.* தொல் தமிழினம் மீண்டும் அடுத்துக் கெடுக்கும் ஆரியரின் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டது. தமிழின உணர்வுகளைப் பாதுகாக்கும், தொல்தமிழ் நாகரிகத்தைப் பேணி வளர்க்கும் ஆர்வமோ, இறையாண்மை / குடியுரிமைக் கூட்டாட்சி பற்றிய ஆக்கமுறையிலான செயல்பாடுகளோ முந்நிலைக் கட்சிகளான பேராயக் (காங்கிரசு), மார்க்சியப் பொதுவுடைமை, திமுக, அதிமுக கட்சிகளிடம் காணப்படவில்லை. தன்னுரிமை என்றாலே தனிநாடு என்ற அச்சம், ஆரியப் பண்பாடும் சிந்தனை முறையும் நம் சமுதாயத்திலிருந்து முற்றாகத் துடைத்தெறியும் வரை நீங்காது. *ஆரியத்திற்கும் தமிழியத்திற்கும் இடையுள்ள பண்பாட்டுக் கோட்பாடுகள் முறையிலான பகை, அனைத்திந்திய ஆட்சிமுறை தளர்ந்து தன்னுரிமையுள்ள கூட்டாட்சி ஏற்பட்டால்தான் தீரும்.*

5. ஆங்கிலேயரிடமிருந்து அரசியல் விடுதலை பெறும் இயக்கத்தில், சுதந்திர மயக்கத்தில், இன நலன், கூட்டாட்சி உரிமைகள் பற்றி ஈ.வே.ரா. பெரியார், சி. சங்கரன் நாயர் போன்ற மிகச் சிலரைத் தவிர மற்றவர்கள் சிந்திக்கவோ, அக்கறைகாட்டவோ, திட்டமிடவோ இல்லை. அம்பேத்கர் போன்றோர் அரசியலமைப்புச் சட்ட உருவாக்கத்தின் போது பிராமணர் ஆதிக்கத்தில் கட்டுண்டு, செயலிழந்து ஏமாற்றம் அடைந்தனர். நாட்டை நல்வழியில் நடத்திச் செல்ல ஒரு சுபாசுசந்திரபோசுக்கோ, வல்லபாய்பட்டேலுக்கோ மத – மொழி வெறியர்கள் வாய்ப்பளிக்கவில்லை. நேருவின் தலைமையில் நாட்டின் வெளிஅரசியலும் பொருளாதாரச் சுதந்திரமும் விடுதலைக்குப்பின்னரும் வெள்ளையரின் நீள்வெளியங்கி வாலில் கட்டிவிடப்பட்டன. வெளிநாட்டோர் நேரடி ஆளுமைச் சுமையைக் களைய முனைந்து, மறைமுகப் பொருளியல் ஆளுமைக்கு அடிமைப்பட்டுள்ளோம். கொஞ்சநஞ்சம் மீதமுள்ள இன-மொழி உணர்வுகள் வலுப்பெற்று, அச்சுறுத்தலாக வளர்ந்து விடக்கூடாது, 'தமிழன் என்றோர் இனமுண்டு' என்ற எண்ணத்தைச் சிதைத்து, உருக்குலைத்துக் கரைத்து விட வேண்டும் என்பதே மையத்திலும், பிற மாநிலங்களிலும் ஆதிக்கம் செலுத்துவோரின் குறிக்கோள். இன-மொழிப்பற்று, தன்னாட்சி உரிமைகள் கொண்ட கூட்டாட்சி விழிப்புணர்வு பற்றிப் பேசுவதே பிரிவினைவாதம், *நாட்டைப் பிரிவுபடுத்தி விடும் என்ற இந்திய அரசியலாரின் கோழைத்தனமே ஈழத்தமிழர்களின் கையறு நிலைக்குக் காரணம்.* இலங்கையில் தமிழரின வாழ்வுரிமை காக்கப் போராடுபவர்களுக்குத் தமிழ்நாட்டவர் அறவழி ஆதரவு தெரிவித்துப் பேசுவதைக் கூட தாங்காது கண்டிக்கும் கட்சியினரின் முதுகெலும்பற்ற, ஆரியத் துதிபாடும் வெட்கக்கேடான நடத்தை சட்டப்பேரவையிலும் பதிவாகிறது. அவர்களின் ஆதரவை நம்பித்தான் இன்றைய தமிழக அரசு உயிர் பிழைக்கிறது.

6. தமிழின நாகரிக வளர்ச்சியின் சிக்கல்களுக்குத் தீர்வுகாண எதிர்வினைகள், வழிமுறைகள் தேடும் சூழலில் எதிர்மறை இடர்ப்பாடுகளை ஆய்வது வேதனைதான். உண்மைகள் கசந்தாலும் எதிர்கொள்ள வேண்டியவை. நம்முடைய தவறுகள், குறைகள், பலமின்மை, ஆர்வமின்மை, அக்கரையின்மை, செயலின்மை, ஏமாளித்தனம், நம் கடமைகள் பற்றிய தெளிவு தேவை. 'இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும். தமிழகத்தில் தமிழினம் என்ற உணர்வும், பெருமையும் காக்காதது நம் சீரழிவு. ஒத்த எண்ணம், தெளிவான குறிக்கோள், ஒருங்கிணைந்த முனைப்பான செயல்பாடும் இல்லாமல் தன்னல உயர்வு மட்டுமே நாடி காலில் விழுந்து, கையேந்திப் பிழைப்பு நடத்துவதே பல சிக்கல்களுக்கு அடிப்படை. கி.மு.(கடை)/கி.பி. நூற்றாண்டுகளின் வரலாற்றுக் காரணங்களால், படையெடுப்புகளால், குடிபுகுதல்களால், ஆட்சியின் ஆதிக்க முறைகளால் தமிழினம் சிதைந்து தன் அடையாளங்களை மறந்து இழந்துள்ளது. 1956வரை சென்னை மாநிலத்தில் இணைந்திருந்த ஆந்திர, கேரள, கர்நாடகப் பகுதிகளிலிருந்து கணிசமான தொகையினர் தமிழகத்தில் குடிபுகுந்து நிலைபெற்றுள்ளனர். அவர்களிலும் அலுவல்கள், உழவு, வாணிகம், கைவினைத் தொழில்கள், கையுழைப்புத் தொழில்கள் செய்வோர்; சேவைத் தொழில்கள், கூலித் தொழில்கள் செய்யும் பிற்படுத்தி தாழ்த்தப்பட்டோர் உட்பட தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளைத் தாய்மொழிகளாக, பாடமொழிகளாகத் தொடர்கின்றனர்.

7. 1945க்குப் பிறகு வடமாநிலங்களிலிருந்து இங்கு குடியேறிய குசராத்தியர், மார்வாரிகள், பனியாக்கள், போராக்கள், சிந்தியர், பஞ்சாபியர் முதலானோர் தொழில் - வணிகத் துறைகளில் பொருளியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றியுள்ளனர். அண்மைக் காலத்தில் பஞ்சாபி, ஒரியா மக்கள் தொழிற்சாலை, சேவைப்பணிகளில் பரவத்தொடங்கி உள்ளனர். வெளியிலிருந்து குடியேறியவர்களும், அவர்கள் வழித்தோன்றல்களும்

இல்லங்களிலும், உறவுகளிலும் தங்கள் தாய்மொழிகளில் பேசி, வெளிசமுதாயத்தில் வடமொழி, ஆங்கிலம் கலந்த கொச்சைத் தமிழில் பேசி வாழ்கின்றனர். *இந்நிலையில் தமிழர் இனம் என்பது தமிழ்நாட்டில் சிதைந்து சிதறிய, வலுவற்ற, ஒற்றுமை குன்றிய, தமிழுணர்வு மங்கிய இனமாகத் தோன்றுகிறது.* எந்த ஒரு இயக்கமும் எதிரணிக்குச் சாதகமான வாக்கு வங்கியாக மாறிவிடக்கூடாது என்ற நோக்கில்தான் அரசு போராட்டங்களுக்குச் செவி சாய்க்கிறது, கட்டாயச் சூழலில் செயலாக்குகிறது.

மொழி - இன உணர்வுகளை மட்டும் முன்வைத்து இன்றைய மக்கள் மனப்போக்கை, ஆதிக்க ஆட்சியை மாற்றமுடியாது. உணவு, உடை, உறைவிடம், கல்வி, உழைக்கும் வாய்ப்பு அற்ற பெரும்பான்மையோரை ஒன்று திரட்டி ஆதிக்க ஆரசியலை, ஆட்சியை அகற்றினால்தான், மற்ற பண்பாடுகளைச் சீரமைத்துச் செழிக்கமுடியும். விலங்கின் இயல்பான மதம் என்னும் போதையில் மூழ்கி, தலைவிதி, குருட்டு வாய்ப்பு என்னும் மடமைகளில் உழலும் வரை தமிழரின் தன்மானம் தலை தூக்காது; சமுதாயத்தில் புரட்சி தோன்றி வெற்றி பெறாது. வன்முறைகள் பெருகிச் சீரழிக்கும். சீனருக்குக் கொடுக்கப்பட்ட அபினை விடக் கொடிய நஞ்சுகள் இவை. இன்றைய சூழலில் தமிழின, மொழி வளர்ச்சிக்கு எதிரான பெரும் சிக்கலாக, அதேநேரம் அரியபெட்டகமாக எனக்குத் தோன்றுவது அதன் தனித்துவம், தற்சார்புப் பாரம்பரியம் (சிதைவின்கண் ஒல்கா உரம் - தளராத ஊக்கம்). அடுத்துக் கெடுக்கும், ஆள்வோரின் துணை கொண்டு மிரட்டும், பொய்களைப் புனைந்து பரப்பி ஏமாற்றும் தந்திரங்களைப் பலகாலமாகக் கையாண்டும், தமிழ் மொழி/இன உணர்வுகளை வடமொழியாளர்களால் / ஆங்கிலேயர் ஆட்சியால் முழுதுமாகச் சிதைத்து ஒழிக்க இயலவில்லை. ஏனெனில் *தமிழ் இயற்கையில் தோன்றி இயல்பாக வளர்ந்தது; இயற்கை உய்யுமளவும் வாழும் திறனுடையது. முற்றியும், முற்றாது எறிந்தும், அறைப்படுத்தும் பற்றற்கரிய இயற்கை அரண் பூண்டது தமிழ். தமிழின் மாண்புகளும் விழுமியங்களும் காலமும் சூழலும் தாண்டி தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும்.* இதனை நமது அரசும், பிற இன / மொழி மக்கள் புரிந்து ஏற்கும் வரை போராட்டங்களைத் தொடர்ந்துதான் ஆகவேண்டும்.

7. தமிழ் நாகரிகத் தகர்வும் மீட்சியும்

முனைவர். வே. சுகுமாரன்

1. அண்மையில் ஞானி அவர்கள் வெளியிட்டுள்ள "தமிழ் நாகரீகத்திற்கு என்ன எதிர்காலம்?" என்ற சிறுநூல், தமிழ், தமிழரின் வாழ்வு சார்ந்த நேற்றைய இன்றைய நடப்புகளைப் பிணைத்து அதன் வழி நாளை என்னநிகழும் என்கிற வினாவைத் தொடுத்திருக்கிறது. இது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஓர் ஆவணமாகக் கருதலாம். இந்நூலின் பிற்பகுதியில் பலரும் எதிர்வினை என்கிற நிலையில் தங்கள் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். நானும் என் சிற்றறிவுக்கு எட்டியதை பலநாட்களாக என்னுள் இருந்து வருகிற வினாக்களையும், விடைகளையும் சிறியளவில் இங்கே முன்வைக்க முயன்றுள்ளேன்.

2. அந்நாள் நாகரிகம்

பழங்காலத்தில் தமிழன் உன்னத நிலையில் இருந்தான் என்பது பற்றி, இருவேறு கருத்திற்கு இடமில்லை. நிலவியலாளரின் ஆய்வுப்படி, உலகில் மிகப் பழமையான மண் தமிழ்நாட்டு மண் தான் என்பதை திரு.வி.க. ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். அவ்வாறே உயிரின நடமாட்டங்களில் குறிப்பாக மனித நடமாட்டம் தோன்றிய இடமும் தமிழ்நாடுதான் என்கிறார். அண்மைக்காலத்தில் நடத்தப்பட்ட மரபணு ஆய்வுகளில் ஆப்பிரிக்க கண்டத்திலிருந்தே மனிதன் எல்லா இடங்களுக்கும் சென்றிருக்கிறான் என்பதை உறுதிபடுத்தியுள்ளன. இந்த ஆப்பிரிக்க கண்டமே பெருவெடிக் கொள்கையின்படி இங்கிருந்து பிரிந்து சென்றதுதான் என்று வாதிடுபவரும் உண்டு. இதை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழினம் எந்த அளவிற்குத் தொன்மையான இனமாக வாழ்ந்திருந்தது என்பது தெரிய வரும். தமிழனின் நாகரிகம், இலக்கியம், பண்பாடு, இலக்கண நூலான தொல்காப்பியம் போன்ற பல்வேறு விடயங்களைப் பற்றியும் தமிழனின் மெய்யியல், தமிழ் மண்ணின் சுற்றுச்சூழல் இன்றைய உலகமயமாக்கலால் தமிழ் நாகரிகம் விழுங்கப்படுவது பற்றி ஞானி மிக அக்கறையுடன் சுட்டிக்காட்டியிருக்கிறார். அந்நாளிலிருந்த ஜாதிப் பாகுபாடுகள் பற்றியும் ஞானி தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

2. ஆரியரின் வருகைக்கு முன்பே சாதி இருந்தது என்றும், ஆரியர் வருகைக்குப் பின்தான் இது வந்தது என்றும் விவாதங்கள் இருக்கின்றன. முருகனின் துணைவியான வள்ளியைக் குறத்தியாய்க் காட்டியதும், சங்கறுப்பது எங்கள் குலம், சங்கரனாருக்கு ஏது குலம் என்று நக்கீரன் இறைவனோடு வாதிட்டதாய் கூறப்படும் விடையமும் சாதி இருத்தலை சுட்டிக்காட்டும் செய்திகள்தான். எனினும் ஆரியர் வருகைக்கு முன் சாதிய உட்பிரிவுகளும் இவ்வளவு அழுத்தமாக பேசப்படாமல் இருந்திருக்கலாம். எது எவ்வாறு இருப்பினும் சோழர்கள் காலத்திலிருந்து ஆரியம் தமிழ்நாட்டிற்குள் வேர்பிடித்ததும் சாதிக் குழப்பங்கள் தலைதூக்கியதும் வரலாறு நமக்குச் சுட்டிக்காட்டும் விடையங்கள்.

3. பெண் அடிமைத்தனம், உடன்கட்டை ஏறுதல், பலதார மணம் போன்ற பலதரப்பட்ட சமூகக் கேடுகளைத் தமிழன் எப்படி உள்வாங்கினான் என்பது நம்முன் நிற்கும் கேள்வி. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதுஇல் என்று கூறி விதவையைப் பின்னுக்குத் தள்ளியதும், உடன்கட்டை ஏற அவளை ஊக்குவித்ததும் நம் இலக்கியப் பதிவுகளாக இருக்கையில், *1810ஆம் ஆண்டு, கிழவன் சேதுபதி இறந்த போது அவனுடைய 45 மனைவிமார்களும் உடன்கட்டை ஏறினார்கள்* என்பதைத் தமிழக வரலாறு பதிவு செய்திருக்கும் போது பிறர் நம்மை கெடுத்து விட்டார்கள் என்று எப்படிக் குற்றம் சொல்லமுடியும்.

3. தமிழ்த் தேசியம்

தமிழ்த்தேசியம் என்ற சொல்லாடல் தொடக்கத்திலிருந்தே சந்தேகத்திற்குரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது. எங்கோ யாரையோ ஆதரிக்க இச்சொல்லாடல் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகம் எழுந்து விட்டதால் இது படித்தவர்களிடையே பெரும் ஆதரவைப் பெறவில்லை. அன்றியும், இத்தகைய தமிழ்த் தேசியம் பிலிப் சுதாகர் கூறுவது போல பன்முகத் தன்மை கொண்டதாக இருக்கவேண்டும். அப்படி இல்லையெனில் ஹிட்லரும், முசோலினியும் தமிழனாக இருந்தால் தவறில்லை என்று நாம் கூறுவதுபோல் ஆகிவிடும். எனவே தமிழ்த் தேசியம் விரிந்த பார்வை உடையது என்பது விரித்துரைக்கப்பட வேண்டும்.

இந்திய - கூட்டாட்சி

தமிழைப் பற்றியும், தமிழனைப் பற்றியும், தமிழ் நாகரித்தின் தேய்மானம் பற்றியும் பேசும் போதெல்லாம் ஏதோ இந்திய அரசியலமைப்பும், இந்திய கூட்டாட்சித் தன்மையும்தான் தமிழனை இப்படிச்செய்துவிட்டது போல சிலர் பேசுவதைக் கேட்கமுடிகிறது. இது உண்மையை மூடி மறைத்து வேறேதோ நோக்கத்தில் பேசுகிறார்கள் என்கிற ஐயத்தை எழுப்புகிறது. இந்திய அரசியலமைப்பும், இந்தியக் கூட்டாட்சியும் தமிழனுக்கு மட்டும் எப்படி தீங்கிழைத்தது. மற்ற மாநிலத்தவர் எப்படி தப்பித்தார்கள் அல்லது மற்ற மாநிலத்தவர்கள் எப்படி போராடினார்கள்? அவர்கள் போராட்டம் வெற்றி பெற்றதா? இப்படி பல கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையில் இந்தியா கூட்டாட்சியா? ஒற்றையாட்சியா? என்ற கேள்வி எழுந்தபோது அம்பேத்கார் மிகத்தெளிவான ஒரு பதிலைத்தந்தார். போர்க்காலத்தில் இந்தியா ஒற்றையாட்சியாகவும், போரற்ற காலத்தில் கூட்டாட்சியாகவும் இருக்கும் என்றார். இந்திய அரசியலமைப்பை ஆய்வுக்கு உட்படுத்திய பேராசிரியர். கே.சி. வியர் இந்தியா ஒரு அரைக் கூட்டாட்சி என்றார். அமெரிக்க ஐக்கியநாடு முழுக் கூட்டாட்சிக்கு எடுத்துக்காட்டாய் கூறப்படுகிறது. எனினும் நாம் மறக்கக்கூடாத ஒரு செய்தி 1861ஆம் ஆண்டு ஆபிரகாம்லிங்கன் தலைமையில் நடந்த உள்நாட்டுப் போருக்குப் பிறகுதான் இன்றைய கூட்டாட்சித் தன்மையை முழுமையாகப் பெற்று இருக்கிறது. அதிகாரம் இல்லை என்றால், ஒவ்வொரு மாநில முதல்வர்களாலும், சில ஆயிரம் கோடிகளை தங்கள் சொத்தாக எப்படிக் குவிக்க முடிகிறது. இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டும் இத்தனை ஆங்கிலவழி மெட்ரிக்பள்ளிகள் எப்படி வந்தன? *தமிழ் மொழிக்குத் தரவேண்டிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் இந்திய அரசியலமைப்பு எங்கே தடுத்தது?* தமிழன் கெட்டு சீரழிந்து போக தமிழ் நாகரிகம் நசிய தமிழன் தான் காரணமே தவிர இந்திய அரசியலமைப்போ, கூட்டாட்சியோ அல்ல!

மும்மொழித் திட்டம் கூட உண்மையில் தமிழனை ஒன்றும் செய்துவிடமுடியாது. அண்டை மாநிலமான கேரளத்தில் மும்மொழித் திட்டம்தான் நடைமுறையில் உள்ளது. அரசியல் ரீதியில் இந்தி மொழியின் ஆதிக்கத்தை அவர்கள் எப்படி எதிர்க்கிறார்கள்? சில *பத்தாண்டுகளுக்கு முன்பு கேரளத்தில் அமைச்சராக இருந்த பாலகிருஷ்ணப்பிள்ளை என்பவர் மத்திய அரசிடமிருந்து வந்த இந்தி மொழிக் கடிதத்திற்கு மலையாளத்தில் பதில் அனுப்பி வைத்தாராம்.* இதுபற்றி அவர்கள் கேட்ட போது, "நீங்கள் அனுப்பிய இந்திக் கடிதம் எனக்குப் புரியவில்லை எனவே நான் மலையாளக் கடிதம் அனுப்பினேன்" என்றாராம் நம்மவர்க்குத் தமிழ்ப்பற்றோ கலாச்சாரப்பற்றோ இல்லாமல் போனதற்கு பிறரைக் குறை கூறி என்ன பயன்?

4. நாம் செய்ய வேண்டியவை:

1. புரியாத ஆங்கிலத்தில் மனப்பாடம் செய்கிற ஆங்கில போதனா வழிக் கல்விக்கு மாற்றாக புரியக்கூடிய தமிழில் உயர்கல்வியைக் கொண்டு வர இயன்ற வரை முயலவேண்டும். ஏதேனும் ஒரு வடிவத்தில் அரசை நெருக்கி அத்தகையதொரு சட்டத்தை உருவாக்க நாம் முயல வேண்டும்.

2. அண்டை மாநிலத்தவரான மலையாளிகள் தாங்கள் பிழைக்கச் சென்ற இடத்தில் கூட தங்கள் பண்டிகையான ஓணத்தையும் தங்கள் கலாச்சார கலைகளின் கூறுகளான கதகளி, மோகினி ஆட்டம் போன்றவற்றையும் பத்திரப்படுத்தியிருக்கும் போது, *தமிழ்நாட்டில் உள்ள தமிழன் தன்சொந்த மண்ணிலேயே பொங்கல் பண்டிகையையும், கரகாட்டத்தையும், தெருக்கூத்தையும், ஒயிலாட்டத்தையும் கைகழுவி விட்டான்.* இவற்றை மீண்டும் முன்னிலைப்படுத்தி மக்கள் மனத்தில் இவற்றின் பாலான ஈடுபாட்டை ஏற்படுத்த முயல வேண்டும்.

3. ஆங்காங்கே சிறுசிறு குழுக்களாக தமிழன் தமிழுக்காக சத்தம் போடுவதை விட்டு விட்டு எல்லோரும் ஒன்றிணைந்து ஒரே குரலில் நமது கோரிக்கைகளை எழுப்ப வேண்டும்.

4. தனதுமண், தனதுமொழி, தனது கலாச்சாரம் போன்றவற்றை பேணிப் பாதுகாக்க ஒரு சிறுதுளியேனும் தமிழன் தியாகம் செய்ய தயாராக வேண்டும். மாதம் ஒன்றுக்கு பதினைந்தாயிரம், இருபதாயிரம் ஊதியம் பெறும் ஒரு தமிழன் ஆண்டு ஒன்றிற்கு இரண்டாயிரம் அல்லது மூன்றாயிரம் செலவிட முடியாதா? இப்படி சேகரிக்கும் பணத்தில் நமது கலாச்சார மேம்பாட்டிற்காகவும், பிற வளர்ச்சிக்காகவும் பல காரியங்களை செய்ய இயலும்.

5. ஜப்பானியரைப்பார், சீனரைப்பார் என்று சொல்வதில் அர்த்தமில்லை. இந்நாடுகளில் எல்லாம் ஏன் ருஷ்யாவில் கூட பெரிய விஞ்ஞானிகளுக்கே ஆங்கிலம் தெரியாது. இருந்தும் அவர்களால் எப்படி விஞ்ஞானத்தில் முன்னேற முடிகிறது? ஜப்பானிய அரசு ஒருகுழுவை அமைத்திருக்கிறதாம். அக்குழுவின் பணி அவ்வப்போது வெளியாகும் ஆங்கில நூல்களை ஜப்பானிய மொழியில் மொழி பெயர்ப்பதுதான். இத்தகையதொரு நிலை தமிழகத்தில் இருந்தால் தமிழன் உலகளாவிய வகையில் எவ்வளவோ செய்துவிட முடியும். இப்படி ஒரு குழுவை அமைத்து நம் மொழியையும் அறிவையும் வளர்க்க இந்திய அரசியலமைப்பு நம்மை தடுக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்வோம்.

6. பலதரப்பட்ட கல்விமுறைகளை ஒழித்து ஒரே வடிவிலான கல்வி தமிழக மாணவர்களுக்கு போதிக்கப்பட வேண்டும்.

7. சில ஆண்டுகளுக்கு முன் சென்னையிலுள்ள தமிழ் ஆய்வுக்கழகம் ஒன்று பிறமொழி பேசுபவர்கள் தமிழை எளிதாகப் படிக்க தமிழ் எழுத்துக்களைக் குறைத்துக் குறிப்பாக பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் 'பிரெயில்' முறையில் உள்ளது போல் 31 எழுத்தில் தமிழ் எழுத்து அனைத்தையும் சுருக்கிக் கொண்டு வரலாம். இத்தகையதொரு முறை பற்றிய ஒரு ஆய்வு செய்யப்பட வேண்டும் என அது தெரிவித்திருந்தது. தமிழ் வளர்ச்சியில் உண்மையான அக்கறை உள்ளவர்கள் இதுபற்றி சிந்தித்து இதன் சாதக, பாதகங்களை ஆய்ந்து இம்முறையைப் பயன்படுத்த முடியுமானால் அதையும் செய்து பார்க்கலாம். பிறர் நம் மொழியைக் கற்பது மூலம் நாம்

விரும்பாவிட்டாலும் அவர்களாவது நம் மொழியில் உள்ள நல்லவற்றைத் தம் மொழிக்குக் கொண்டு செல்வார்கள் இல்லையா? மேலும், தமிழ் மொழி படித்தவர்களின் எண்ணிக்கை கூடுவதற்கான வாய்ப்பு இருக்கும் அல்லவா?

8. நிகழ்காலத்தை வைத்துத்தான் எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதால் இந்நிகழ்காலத்தை ஆழமானதாகவும் அகன்றதாகவும் உருவாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. "ஓர் இனத்தை அடிமை செய்ய அதன்மீது நீ போர் தொடுக்க வேண்டிய தேவையில்லை. *அந்த இனம் கையில் புத்தகங்களை எடுக்காமல் பார்த்துக் கொண்டால் போதும் தாமாகவே அடிமை ஆகிவிடும்"* என்றான் ஓர் ஆங்கில அறிஞன். "பாட ஏறினும் ஏடது கைவிடேல்" என்று கூறிய ஔவையின் மொழியை மறந்து தமிழன் பாட ஏறினும் ஏடது கைதொடேன் என்றும் புதுமொழியை தனக்கு உருவாக்கிக் கொண்டான். இந்நிலை மாற்றப்பட்டால் அடிமை விலங்கு தானாக உடைந்து விடும். இம்முயற்சியில் மிகத் தீவிரம் காட்டி இன்றைய இளைஞர்களையும், மாணவர்களையும் படிக்கும் பழக்கத்திற்கு மீண்டும் கொண்டு வரவேண்டும்.

9. இன்றைய சூழலைக் கருத்தில் கொண்டு தலித்துகள், பெண்கள், மார்க்சியர்கள், பெரியாரியர் ஆகிய அனைத்து பகுதியினரையும் ஒன்றிணைத்து செயல்படக்கூடிய செயல் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். சாதிஒழிப்பில் மிகுந்த தீவிரம் காட்டி முடிந்தால் கலப்பு மணங்களை எல்லா வகையிலும் ஆதரித்து சாதியற்ற சமூகத்தை உருவாக்குவதின் வாயிலாக தமிழர்களிடையே ஒன்றுபட்ட ஒத்த உணர்வுடன் கூடிய செயல்பாட்டுத் திறனை வளர்த்தெடுக்க இயலும்.

தமிழும் சாகாது தமிழ் நாகரிகமும் தேயாது இப்போது காணப்படுபவை தற்காலிகமானதே. நம்பிக்கையோடும், திடசித்தத்தோடும் செயல்பட்டால் வெற்றி உறுதி. உலகில் எல்லா நாகரிகங்களிலும் இத்தகைய தற்காலிக இடர்ப்பாடுகள் இருந்திருக்கின்றன. எனவே நாம் தெளிவான குறிக்கோளுடன் நமது சக்திகளை சிதறவிடாமல் திரட்டிக் கொண்டு முன்னேறினால் தகர்வைத் தவிர்க்கலாம் மீட்சியைக் கொண்டு வரலாம்.

8. தமிழ் மனம் வைத்தால் ...

முனைவர். இரா. சத்தியமூர்த்தி

இன்றைக்கு நம் தமிழுக்குப் பிரச்சனையாக இருப்பவர்களே தமிழர்கள்தாம். தமிழுணர்வுடன் தமிழ் பேசுகிற எல்லோருமே தமிழ்மக்கள் தான். மிகத் தொன்மையான இப்பண்பாட்டை இன்றைய சூழலுக்கு ஏற்றவாறு அதன் கரு சிதையாமல் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது யாருடைய பொறுப்பு? தமிழைப் பயிற்றுமொழி ஆக்க வேண்டா என யார் தடுத்தது? பேராயக் கட்சி இந்திக்கு ஆதரவாக இருந்தாலும் புற்றீசல் போல் ஆங்கிலப் பள்ளிகளைத் திறக்க அனுமதித்ததா? தமிழும் ஆங்கிலமும் போதும் என்று குரல் எழுப்பிய நம்மவர்கள் தமிழை மறந்து விட்டது தானே உண்மை?

தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் நோக்கம் என்ன? இவற்றைப் பற்றியெல்லாம் தமிழர்களாகிய நாம் அகஆய்வு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். மார்க்சியமும் பெரியாரியமும் உயர்ந்த நோக்குடையவை. மனிதம் சார்ந்தவை. இவற்றில் ஐயப்பட

ஏதுமில்லை. ஆனால் அதன் நிலைப்பாடு எவ்வாறு காணப்படுகிறது? வானத்திலிருந்து விழும் நீர் தூயதுதான்; ஆனால் அது மனிதன் கைபட்டு மாசாகி விடுகிறது என்பதுதான் உண்மை. மார்க்சியம் மனித மனத்தை, அதன் உணர்வுகளை, உணர்ச்சிகளைக் கணக்கில் கொண்டுள்ளது? சுதந்திரக்காற்றை மார்க்சிய மண்ணில் சுவாசிக்க முடியுமா? மார்க்சியத்திற்கு மாறாகக் குரல் எழுப்புவோர் தன் தாய் மண்ணைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அழித்தொழிக்கத் தவறுவதில்லை என்பதுதான் உண்மை. சைனாவில் 1986களில் என்ன நிகழ்ந்தது? ஒரு நல்ல கொள்கை மனிதனின் கையகப்படும் போது அவனுக்கேற்றவாறு வளைக்கப்பட்டு விடுகிறது. சோவியத்தின் வீழ்ச்சியும் சைனாவின் நெகிழ்ச்சியும் இதனையே நமக்கு உணர்த்துகின்றன. பெரியாரின் நேரடி அன்பர்களின் நிலைப்பாட்டை நாம் காணவே செய்கிறோம்.

திரு. ஞானி குறிப்பிட்டது போல பகைமை பாராட்டுவதால் இனிப் பயனேதும் இல்லை. இன்றைய அறிவியல் தொழில்நுட்ப சூழல் எவரையும் தனித்து வாழ அனுமதிக்கப் போவது கிடையாது. 'பகைமை இருசாராருக்கும் தீமைதான் தரும்' என்பதில் மனிதநேயம் விளங்குவதைக் காணமுடிகிறது. பரிதிமால் கலைஞர், உ.வே.சா., பாரதி போன்றவர்களை நாம் எளிதில் மறந்துவிட முடியாது. தமிழால் வாழ்பவர்கள்பலர் பாரதி உளறினாலும் தமிழ் மொழியின் மாண்புகளையே உளறிவைத்தான். கஞ்சா மயக்கத்திலும் தமிழ் மீது அவனுக்கு ஆறாக் காதல் இருந்தது; மயக்கத்திலும் தமிழின் மேன்மையையே அவன் உளறிக் கொட்டினான். தமிழ், பாரதிக்கு பிழைப்புப் பிச்சைக் கருவியாக இருந்திருந்தால் வாழ்நாள் முழும் வயிற்றுச் சோற்றிற்கு அலைந்திருக்கமாட்டான்.

தமிழ்நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் அனைவரையும் தமிழராக ஏற்பதே நலம். தமிழர் பண்பாட்டை பேணி வளர்ப்பதற்கான அடித்தளமாகக் கல்வி அமைதல் வேண்டும். இந்த வகையில் தமிழ்ப் பண்பாட்டின் எதிர்காலம் மேன்மையுற மார்க்சியம் மற்றும் பெரியாரியம் இவற்றைவிட வள்ளுவம் பெரிதும் துணைநிற்கும் என்றே தோன்றுகிறது. வள்ளுவம் மக்கட் பண்பைப் பேணி வளர்க்க வழிகாட்டுகிறது. அதன்வழி நயத்தகு நாகரீகம் சிறக்கும் என உணர்த்துகிறது. கற்ற தமிழ் மக்கள் இரட்டை வேடம் போடுவதில் வல்லவர்கள். தமிழ் தமிழ் என முழங்கும் பலரைப்பார்த்திருக்கிறேன். அவர்களுடைய குழந்தைகள் ஆங்கில வழிப் பள்ளிகளில் இன்றும் படிப்பதை நான் அறிவேன். இந்த வெற்றுக் கூச்சல் போடாத கிராமத்து மக்கள் இன்னும் தமிழ் வழியைப் பேணிக் கொண்டிருப்பது மட்டுமே உண்மை. இங்கு கற்றவர்கள் தங்கள் செயல்பாட்டிற்குக் கூறும் காரணம் தம் மனைவிமார்களின் வற்புறுத்தல் தான் என்கின்றனர். தன் சொந்த மக்களையே தமிழ்வழி கற்க ஆயத்தப்படுத்த முடியாத இவர்கள் தமிழை எவ்வாறு காப்பாற்றுவர்? படித்தவன் தவறு செய்தால் அய்யோ எனப் போவான். இதற்கு மேல் சொல்ல யாதுமில்லை. தமிழை முன்னெடுத்துச் செல்ல என்ன செய்யவேண்டும்? இந்திய இறையாண்மைக்கு உட்பட்ட தமிழ் இறையாண்மை மலரவேண்டும். தமிழர் சமயநெறி பொதுநெறி, கணியன் பூங்குன்றனாரும், திருவள்ளுவரும், வள்ளலாரும் உலகுக்கே வழிகாட்ட வல்லவர்கள். ஆரியம் கலவாத மனிதநேயம் சார்ந்த மெய்ந்நெறி தமிழர் சமயநெறி. இதனை மீட்டெடுக்க வேண்டும்.

திருக்கோயில்கள் தமிழரின் அழகுணர்வுக்கும் கட்டடக் கலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குபவை. திருக்கோயில்கள் தமிழ்மொழிக்கு மட்டுமே இடமளிக்க வேண்டும். இக்கனவு மெய்யப்பட உழைப்பது அவசியம். சட்டத்தின் ஓட்டைகளிலும் குறுக்குவழிகளிலும் தமிழைப் புறந்தள்ளி விடாமல் "தமிழ் உணர்வாளர்கள்" பார்த்துக்கொள்ள வேண்டும். எத்தனையோ தமிழ்ப்பெயர்கள் கொண்ட ஊர்களெல்லாம் வெற்றுக்கதைகளுக்கு

உரியதாக்கப்பட்டு வடமொழிப் பெயர்களைத் தாங்கிநிற்கின்றன. (சான்றாக மயிலாடுதுறை – மாயூரம்) அதைப்போல் தமிழனால் உருவாக்கப்பட்ட கோயில் சிலைகள் வடசொல்லால் அழைக்கப்படுகின்றன. (பிரகதீசுவரர் - பெருஉடையார்). தமிழர்கள் சமயஉணர்வை மீட்டு எடுத்தல் அவசியம். இதன் மூலமே ஓரளவு சாதித்துவிட முடியும். தமிழ்நாட்டில் தமிழ்தானே வழிபாட்டு மொழியாக இருக்க முடியும்? இந்த எளிய உண்மை பலருக்குப் புரியாததற்கு யாது காரணம்? சமயத்தையும் அரசியலையும் தமிழுக்கு தமிழ் உணர்வுக்கு நாம் மீட்டெடுத்து விட்டால் தமிழ் நாகரிகத்திற்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கியவர்களாக இருப்போம். வள்ளலார் வழிகாட்டுகிறார். கருணையற்ற ஆட்சியைச் சாடும் அவர் அருள் நயந்த நன்மார்க்கர் ஆளவேண்டும் என்று அவாவுகிறார். பொதுமை உணர்வு மிளிர திருக்கோயில் ஒன்று எழுப்பி தமிழ் வழிபாட்டிற்கும் பாதை அமைத்துச் சென்றுள்ளார் அவர். நம் சித்தர்கள் தமிழ்ச் சமய நெறியைப் பற்றி ஓங்கியே குரல் எழுப்புகின்றனர். அந்நிய மோகம் தமிழனுக்கு என்றுமே அதிகம். தமிழனின் இம்மனக் கோணல் உடனடியாகச் சரிசெய்யப்படவேண்டும். சங்கமித்ரா அவர்கள் குறிப்பிட்டது போன்று "தமிழ்த் தொண்டர் பணி" இன்றைய தேவை. இப்பணி தமிழரின் மனக்கோணலை மாற்றக்கூடும்.

ஒரு அரசின் பணி என்ன? உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், கற்க கல்வி, நலமுடன் வாழ நல்மருத்துவம் இவற்றை தடையின்றி அளிப்பதுதான். எந்த 'இயமும்' இல்லாமலேயே ஒரு நல்லரசால் இதனை அளித்து விடமுடியும். மனம்வேண்டும்; துணிவுவேண்டும்; செயற்படுத்தும் ஆற்றல் வேண்டும். கல்வி தாய்மொழி மூலமே பயிற்றுவிக்கப்பட வேண்டும். *சித்திர எழுத்துக்களை வைத்துக் கொண்டு அமெரிக்காவிற்கு அறைகூவல் விடுக்கிறதே! சப்பான்? ஆனால் நாமோ தொன்மைத் தமிழை வைத்துக் கொண்டு கைபிசைந்து நிற்கிறோம்.* இது அவலமின்றி வேறென்ன? ஆங்கிலத்தை இனி புறக்கணிக்க முடியாது. இது எதார்த்த உண்மை. ஆங்கிலத்தின் கரங்கள் நீண்டுகொண்டே இருக்கின்றன. எனவே அனைத்துப் பாடங்களும் - மருத்துவம் பொறியியல் உட்பட அனைத்துப் பாடங்களும் - தமிழ் வழி கற்பிக்கப்படும் போது தொடர்பு மொழியான ஆங்கிலத்திற்கு குறைந்தது இரண்டுமணி நேரமாவது நாளொன்றிற்கு வழங்கலாம். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழும் நாம் சில எதார்த்த உண்மைகளை மறந்து விடக்கூடாது. நமக்கென்றுள்ள தமிழ் முகத்தோடு வாழ்வதுடன் பிறருடன் இயைந்தும் வாழ வேண்டிய கட்டாயம் உள்ளது. *இசுரேலியர் போன்று இன உணர்வும், பார்ப்பனர் போன்று மரபுவழிப் பண்பாட்டுணர்வும் தேவை.* வாழ்க்கையே உறவுமுறையில்தான் விளங்குகிறது என்பார் ஒரு மெய்யுணர்வாளர். இத்தகைய அடிப்படை மாற்றங்களை நாம் செய்யத் தொடங்கினாலே போதும் தமிழ் மேன்மையுறத் தொடங்கிவிடும். இதனை இன்றே இப்போதே நம் தமிழர் மனம் வைத்தால் சாதிக்கமுடியும்.

9. தமிழ் நாகரிகத்திற்கு எதிர்காலம் உண்டு

தனராசு

1. தமிழ் நாகரிகத்திற்கு என்ன எதிர்காலம் என்று ஞானி அவர்களின் கேள்விக்கு, மறுமொழி, தமிழ் நாகரிகம் என்று தலைப்பிட்டதிலேயே அடங்கி இருக்கிறது. தமிழ் மொழி, இனம், நாடு, கலை, பண்பாடு, பொருளாதாரம், அரசியல் வாழ்வு என்ற அனைத்தும் அடங்கிவிடுகிறது. தமிழ் நாகரிகம் என்ற தலைப்பில், இதற்கு மறுமொழி, தமிழ் நாகரிகத்திற்குச் சிறப்பான எதிர்காலம் உள்ளது என்பதுதான்.

உடையில் படிந்துள்ள கறைகளையும் அழுக்குகளையும், துவைத்து வெளுப்பது போல, கடந்த 1000 ஆண்டுகளாகத் தமிழ் நாகரிகத்தின் மீது படிந்துள்ள கறைகளும், அழுக்குகளும் இல்லாத சிறப்பான எதிர்காலம் தமிழ் நாகரிகத்திற்குக் காத்துக் கொண்டுள்ளது. நம்முடைய வேலை, இந்த எதிர்காலத்திற்கு நம்மை அணியமாக்கிக் கொள்வதுதான். அணியமாக வேண்டும் என்பதற்கான கேள்விதான் ஞானி அவர்களின் கேள்வி. தமிழ் தேசிய இன அமைப்புக்கள், குழுக்கள், கட்சிகள், சிற்றிதழ்கள் முதலிய எல்லா நிலைகளையும், ஒருங்கிணைப்பும் முறையான வாய்க்காலும் தான் இன்றைய தேவை.

தமிழ் நாகரிகத்திற்கு என்ன எதிர்காலம் என்ற ஞானி அவர்களின் கேள்விக்கு விடையளித்துள்ள, 13, தமிழ் இன உணர்வாளர்கள், ஏதும் செய்ய முடியாத நிலைக்குத் தமிழினம் தாழ்ந்து போய் உள்ள நிலையை வெளிப்படுத்தி, ஒரு வெறுப்பான மனநிலையில் மறுமொழி கூறி இருந்தாலும், தமிழ் நாகரிகத்தின் எதிர்காலத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். இதுவே, தமிழ் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழரின் நிலையாகும். மரு. வே. ஜீவானந்தம் அவர்கள், முதலாளியம் அழியும் என்ற மார்க்சின் எதிர்ப்பார்ப்பைப் பொய்யாக்கி முதலாளியம், உலகமயம் என்ற புதுவடிவைப் பெற்றுள்ளதாகக் கூறுகிறார். ஆனால் முதலாளியம் தன்னுடைய அழிவினின்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கடுமையான முயற்சியைச் செய்து கொண்டுள்ளது என்பதுதான் உண்மைநிலை. அதாவது முதலாளியம், தன்னுடைய சாவைத் தள்ளிப்போடும் நிலைதான் ‘உலக மயம்’ என்பது. முதலாளியம் தன்னை அழித்துக் கொள்ளும் வலுவைத் தனக்குள்ளேயே வளர்த்துக் கொள்கிறது என்ற மார்க்சின் கூற்று நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டுள்ளது. தனித்தனி முதலாளிகளாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த முதலாளியம், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள தேசிய முதலாளியமாக மாறியது. தனித்தனி முதலாளிகளின் முகத்தை அழித்து உண்டான தேசியமுதலாளியத்தின் முகம், ஏகாதிபத்தியத்தால் அழிந்தது. ஏகாதிபத்தியத்தின் முகம், தரகு முதலாளியத்தால் அழிந்தது. இன்று தரகு முதலாளியம் உலகமயத்தால் அழிந்து கொண்டுள்ளது.

உலகமயம் என்பதில், அமெரிக்காவின் முகம் மட்டுமே தெரிகின்றது. இந்த முகம்தான் முதலாளியத்தின் கடைசி மூச்சு. இந்த முகத்தில் கரிபூசி அழிக்கும் வேலையை கியூபா முதல்கொண்டு தென்னமெரிக்க நாடுகள் தொடங்கிவிட்டன. இதன் வளர்ச்சியாக, லுக்கோடர்மா நிற மக்களையே, எதிரிகளாகப் பார்க்கும் நிலை, கருப்பு, மஞ்சள் கோதுமை நிற மக்களிடம் வளர்ந்துள்ளது.

இதேபோன்று இந்திய ஒன்றிய அரசும் தேய்ந்து கொண்டுள்ளது. டெல்லி அரசில் ஒரே கட்சி ஆட்சி என்ற நிலைமாறி ஒரே கட்சி ஆட்சி இனி எப்போதும் இல்லை என்று வளர்ந்துள்ளது. வெள்ளத்தில் சிக்கியவன் துரும்பைப் பிடிப்பது போல் எந்தக் கட்சியையும் பிடித்து ஆட்சி அமைக்கும் நிலையில், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலை

உள்ளது. இந்தியா என்ற அமைப்பைத் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியில் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு என்ற நிலை மாறி கூட்டணி ஆட்சி என்ற நிலைக்கு வந்துள்ளது. இந்தக் கூட்டணி ஆட்சி, கூட்டாட்சியாக மாறும் நாள் தொலைவில் இல்லை. கவிஞர் தமிழன்பன் அவர்கள், எழுபதுக்கு வயதுக்கு மேலுள்ள தமிழ் தேசியர்களால் எப்படி முடியும் என்று ஆதங்கப்பட்டிருந்தார். மூத்தத் தமிழ் தேசியர்களது கண்முன்பே, இந்தியக் கூட்டாட்சி முறை வருவதைக் காணத்தான் போகின்றார். ம.இலெ. தங்கப்பா அவர்கள் பொதுநிலைத் தமிழர்களின் இனமொழி உணர்வற்ற நிலை மாறுமா என்று கேட்டிருந்தார். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு 1950 முதல் 70 வரையுள்ள தமிழ் மக்களின் மொழி, இனஉணர்வுகளை எண்ணிப் பாருங்கள். அந்த நிலை மாறியதற்கான காரணங்களையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று புரியும்.

உலகிலுள்ள எந்த இன மக்களும், இவ்வளவு கீழ்த்தரமாக ஏமாற்றப்பட்டதில்லை என்ற அளவுக்குத் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். இந்த ஏமாற்றங்களால் உண்டான செயலற்ற நிலையும், தி.மு.க.வின் தொடக்ககாலப் பேச்சுக்களால், செயலூக்கமடைந்து, வீடுகளில் கன்னடம், தெலுங்குமொழியை அரைகுறையாகப் பேசிக் கொண்டிருந்த தமிழ் உணர்வு பெற்ற தமிழர்கள் - இன்று தங்களை வேற்று மொழியினராக அடையாளப்படுத்த முடியாமலும், தமிழராக அடையாளப்படுத்தவும் முடியாத இரண்டுங் கெட்டான் நிலையிலுள்ளவர்கள், நூற்றுக்கு இரண்டு பேர்களே இருந்தாலும், அனைத்து ஊர்களிலும் உள்ளனர். இவர்களின் இரண்டுங் கெட்டான் நிலையினாலும், பொதுநிலைத் தமிழர்களின் பங்களிப்பென்பது இல்லாதது போன்ற தோற்றத்தை உண்டுபண்ணியுள்ளது. இந்தத் தோற்றத்திற்கும் செயலற்ற நிலைக்கும் காரணம், தமிழ் தேசிய இன உணர்வாளர்கள் சிற்றிதழ்கள், அமைப்புகளின் தெளிவின்மைதான் காரணம். இவர்கள் நாம் எவ்வாறு ஏமாற்றப்பட்டோம், ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பனவற்றைக் கூறுவதிலேயே பொழுதைக் கழித்துக்கொண்டுள்ளனர். அதேநேரத்தில் எதிரிகளை விட, பிற தமிழ் அமைப்புகளைக் குறை சொல்வதிலேயே காலத்தை வீணாக்குகின்றனர். அதுமட்டுமல்லாமல், ஞானி அவர்கள், மேன்மை மிக்க சிந்துவெளி நாகரிகத்திலிருந்து நாம் எப்படி விலகி வந்தோம் என்பது இன்றுள்ள கேள்வி என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கேள்விக்கு விடை, நாம் சிந்துவெளி நாகரிகத்திலேயே இல்லை, இருந்திருக்கமுடியாது என்பதுதான்.

இப்போது நாம் இருக்கின்ற நாட்டைக் காப்பாற்ற முடியவில்லை. எல்லைகளை இழந்துவிட்டோம். நீர்த்தடங்களை இழந்து விட்டோம், எல்லைகளில் நிற்கவும் முடியவில்லை. கடல் எல்லையும் இல்லை என்றாகிவிட்டது. வெளிநாட்டார்களின் ஊடுருவலைத் தடுக்க முடியவில்லை. இருக்கிற இனத்தைக் காக்க வழிஇல்லை, மொழியைக் காக்கத் திறனில்லாத நிலையில், சிந்துவெளி நாகரிகம் நம்முடையது, இந்தியா முழுக்கத் தமிழ்தான் இருந்தது என்று காற்றில் எழுதிக் கொண்டிருப்பதை நிறுத்த வேண்டும்.

இந்தியா என்ற அமைப்பே, பிரிட்டானியர்களின் சுரண்டலுக்காக உருவாக்கிய அமைப்பு என்னும் போது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியா என்பது எங்கிருந்து வந்தது. இந்தியா என்ற அமைப்புக்கு வேறொரு பெயர் வைத்துப் பெருமை பேசுவதை விட்டு விட வேண்டும். இருக்கின்ற நாட்டைக் காக்க, மொழியை, இனத்தைக் காக்க என்ன செய்ய வேண்டும் என்பதை நினைக்க வேண்டும் அதில் நிலைக்க வேண்டும்.

2. பொதுவாக ஆங்கிலத்தில் பேசுவதையும், ஆங்கிலச்சொற்கள் கலந்து பேசுவதையும், நான் படித்தவர், உயர்ந்தவர் என்பதைக்காட்டிக் கொள்ளச்செய்கிறோம். நம் உயர்வைக்

காட்டிக் கொள்ள என்றால் நம் தாழ்வு மனப்பான்மையை மறைக்க என்பது பொருளாகும். இந்தத் தாழ்வு மனப்பான்மையை நீக்க ஆங்கிலம் கலவாமல் பேசுவது சரியானதாகும். கலப்படமற்ற தமிழில் பேசுகிறோம் என்ற பெயரில், எழுதுவது போலவே பேசுவது என்ற நிலையை மாற்றியாக வேண்டும்.

வேற்று மொழிக்காரர்கள் தமிழ் பேசுவதுபோல் இலக்கண முறையில் பேசும் செயல், பொதுநிலைத் தமிழர்களை தமிழ் உணர்வாளர்களிடமிருந்து விலக்கி வைத்துள்ளது. இதனால் இயல்பான பேச்சு வழக்கு நடையிலேயே, கலப்படமற்ற தமிழில் பேசி உணர்வூட்ட வேண்டும். தமிழ் இன உணர்வாளர்கள், தமிழ் தேசிய அமைப்புக்கள், எல்லாம் ஒன்றிணைந்து, தமிழ் நாட்டுப் பள்ளிகளில், சேர்க்கை விண்ணப்பங்கள், பதியும் ஆவணங்கள், பள்ளி இறுதிச் சான்றிதழ்கள், பட்டயச் சான்றுகள், பட்டச் சான்றிதழ்கள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசையும், அனைத்து மனுக்கள் படிவங்களில் எல்லாம், தேசிய இனம் என்று கேட்டுள்ள வரிக்குக் கீழே குடியுரிமை என்ற சொற்றொடர் இணைக்கப்பட்டு, தேசிய இனம் என்னுமிடத்தில் ‘தமிழர்’ என்றும், குடியுரிமை என்னுமிடத்தில் இந்தியக் குடியுரிமை என்று பதியும் உரிமை வேண்டும் என்று இந்திய அரசிடமும் கேட்க வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான போராட்டத்திற்கு வழி வகுக்க வேண்டும். இக்கோரிக்கை, பெருமளவில் பொதுத் தமிழர்களை, தமிழ் உணர்வாளர்களாக மாற்றும்.

தமிழ்நாட்டு மொழி இன பாதிப்புகள், பற்றிப் பேசும் போது, காமராசர், அண்ணாதுரை, கருணாநிதி, இராமதாஸ் என்ற பெயர்களைக் கூறாமல், மறைவாகப் பேசுவது என்பதை விடுத்து, நேரடியாக அவரவர் செய்த இரண்டகங்கள், கேடுகளைக் கூறவேண்டும். காமராசரின் காங்கிரஸ் ஆட்சியில், தமிழ் நாட்டு நிலங்களையும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளையும், பிறநாட்டுக்குக் கொடுத்த இரண்டகங்களையும், அண்ணாதுரையின், திராவிட நாடு, ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி, தமிழ் ஆட்சி மொழி, பாடமொழி பயிற்று மொழி என்ற ஏமாற்று வேலைகளையும், இந்த ஏமாற்று வேலைகள் தொய்வின்றித் தொடர தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க. என்ற லாவணி நாடகங்களையும் இலவச அறிவிப்பு ஏமாற்றுக்களையும், டெல்லி அமைச்சரவையில் பங்கேற்றுக் கோடி கோடியாய்ச் சொத்து சேர்ப்பதற்காக தமிழ் நாட்டை தமிழ் மொழி இனத்தையே அடகு வைத்துள்ள கருணாநிதியின் குடும்பத்தின் கொடும் வடிவத்தை, மகனின் மைய அமைச்சர் பதவிக்காக, பா.ம.கட்சியை, தன் சாதியை அடகு வைத்த மருத்துவர் ராமதாசின் இரண்டகத்தையும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூச்சநாச்சமற்ற கூட்டுக்களையும், கொள்கை அறிவிப்புகளையும், இதனால் கொள்ளை போகும் தமிழ்நாட்டு நிலையையும் தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழ் மொழி, நாட்டு, இன அமைப்புகள், தமிழ் தேசிய அமைப்புகள், தமிழ்நாடு, மொழி இனம் காக்கப்பட வேண்டும், உரிமை அடைய வேண்டும் என்னும் போதே, தனிநாடா? இந்திய அரசுடன் இணைந்த தன்னுரிமைத் தமிழ்நாடா? தன்னுரிமை கூட்டாட்சியா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தனிநாடு என்பதில் தமிழர்கள் ஏற்கெனவே சுடுபாலைக் குடித்த பூனையாக உள்ளனர். மேலும் இன்றைய உலகமயச் சூழ்நிலையில், தனிநாட்டுப் போராட்டம் என்பது, அமெரிக்காவின் ஆயுத விற்பனைக்கான சந்தையாகவே பயன்படும். எனவே தனிநாடு என்பது சரியான தீர்வாகாது. இந்திய ஒன்றியத்தில் இணைந்துள்ள, தன்னுரிமை பெற்ற தமிழ்நாடு என்ற முறையில் உள்ள கூட்டாட்சிதான் சரியான முடிவாக இருக்கமுடியும். இந்தக் கூட்டாட்சியும், எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழ்நாட்டிலிருந்து டெல்லி அரசுக்குச் செல்லும் வருமானங்கள் எவ்வளவு, அதில்

எவ்வளவு நமக்குச் செலவளிக்கப்படுகிறது. எவ்வளவு கொள்ளை போகிறது என்பதுவும், இவை எல்லாம் நம் நாட்டு நலனுக்குத் திருப்பப்பட்டால் நலன் எவ்வளவு பெருகும் என்பதுவும், தமிழ் நாட்டிற்கு எல்லைப் பிரச்சனைகள் இல்லை. அப்படியே வந்தாலும், இந்திய இராணுவம் பயன்படுத்தப்படுவதில்லை. அவ்வாறிருக்க, தமிழ்நாட்டின் வரியில் பெரும்பகுதி இந்திய ராணுவத்திற்குச் செலவிடப்படுவது முதலியன, தெள்ளத் தெளிவாக மக்களுக்கு விளக்கப்பட வேண்டும். என்னென்ன அதிகாரங்கள் பொறுப்புக்கள் டெல்லியில் இருக்கவேண்டும் என்பதையும் தெளிவாக மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

தமிழ் நாகரிகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கேள்விகள், வேறுபாடில்லாமல் அனைத்துத் தமிழ் இன உணர்வாளர்களுக்கும், அமைப்புக்களுக்கும், சிற்றிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு, அவர்களின் பதில்கள் ஒன்றிணைக்கப்பட்டு, அதன்பின் அமைப்புகள் அந்தந்த அமைப்புகளின் கட்டமைப்புக்குக் கேடில்லாமல், இணைந்து செயல்படுவது என்பது, வரப்போகும் இந்தியக் கூட்டாட்சியை வரவேற்கும் நிலையாகும்.

10. தமிழ் நாகரிகத்தில் தலித் மக்களுக்கு என்ன இடம்?

முனைவர் மு. ஜீவா

தன்னைக் கட்டமைத்துக் கொள்ளத் தமிழனுக்கு மிக அவசியம் - நாகரிகம். தனித் தமிழ் இயக்கம் சார்ந்தும் நாகரிகத்தை முன்வைக்கலாம். மார்க்சியம் சார்ந்தும், ஆன்மீகம், சார்ந்தும், அனுபவம் சார்ந்தும்... ஏன்? இருக்கின்ற நடப்பு நிலைகளைக் கணக்கில் கருதியும் ஒரு 'நாகரிகத்தைக்' கட்டமைக்கலாம். ஆனால், நான் முன்வைப்பது இன்னொருவருக்குப்பொருந்துமா? என்பதில்தான் சிக்கல் இருக்கின்றது. இது தனிமனிதத்துவத்தை முன் நிறுத்துவதற்காக அல்ல. ஆனால் இருக்கின்ற நிலைப்பாடுகளைப் பகுத்தறிந்து ஆராய முற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மார்க்சியவாதிகள் மார்க்சியவாதிகளாக இல்லை. தனித்தமிழ் இயக்கவாதிகளாக இல்லை. மார்க்சியவாதி, பெண்ணியவாதி போன்ற முத்திரைகள் கூட மணல் மேல் வரைந்த ஓவியமாய் மாய்ந்து போன காலத்தில் தான் 'தமிழ் நாகரிகம்' அவசியம் என்று சொல்வது கூட அடையாளங்களுக்காகத்தான். எதிர்கால நாகரிகத்தை இந்த மணல் ஓவியங்களின் மேல் கட்டமைத்துக் கொள்ளலாம் என்ற நோக்குடன் தான் பேசுகின்றோம். 'தமிழ் நாகரிகம்' என்பது எதிர்காலத்தில் நிச்சயமாக இருக்காது என்பது வருத்தம் தரக்கூடியதுதான். ஊடகக் குவியல்கள் ஒன்றையும் இல்லாமல் செய்து கொண்டிருப்பதை நாம் கண்ணாரக் கண்டு கொண்டு இன்னும் 'தமிழ் நாகரிகம்' இருக்கிறோம். டிஜிட்டல் நாகரிகம் நம்மை வசதியுள்ளவர்களாக மாற்றியிருக்கிறது. நூற்றுக்கு தொண்ணூற்று எட்டுப்பேர் அதில் மூழ்கிக்கொண்டிருக்கும் போது எஞ்சியிருக்கும் இரண்டு பேரை மையமிட்ட தமிழ் நாகரிகம் எதிர்காலத்தில் எத்தகையதாய் இருக்கும்?

தமிழ் அல்லாத இன்னொரு மொழியைத் தெரிந்து கொள்வதும், இன்னொரு மொழியைப் பேசுவதும், இன்னொரு நாகரிகத்தைத் தெரிந்து கொள்வதும் இன்று தேவையாக இருக்கின்றது. இப்படிப் பேசும் போதும், இன்னொரு நாகரிகத்தைக் கடைப்பிடிக்கும் போதும் உயர்வாக மதிக்கப்படுகிறோம் என்பது மட்டுமல்ல காரணம், சூழல்களின் எல்லைகளைக் கடப்பதற்கு, இன்னொரு மொழி, இன்னொரு நாகரிகம் உதவி புரிகின்றது.

'தலித்' என்ற நிலையில் இன்னும் தரங்களை உயர்த்துவதற்குப் பிறமொழிகள், பிறநாகரிகங்கள் (தமிழை விட) உதவிபுரிகின்றன என்பது உண்மை. சாதிவாரியான தரப்பிரிப்புகளில் தலித்துக்கள் வாழ்வது உண்மைதான் என்றாலும், அதிகப்படியான செய்திகளைத் தெரிந்து கொண்டு மற்றவர்களை அறியாமையில் ஆழ்த்துவது தலித்துகளின் 'சுயத்தை' உயர்த்த, சரியான ஆயுதம் என்றே நினைக்கின்றேன். அப்போது அதன்வழி உணர்த்தப்படுகின்ற நடத்தைகள் எப்படிப்பட்டதானாலும் அவை 'நாகரிகம்' என்ற பெயரில் வெளிப்படும். ஐக்கியநாடுகளின் உலக மனிதஉரிமைப் பேரறிக்கை பின்வருமாறு கூறுகின்றது. "அனைத்து மனிதர்களும் சுதந்திரமானவர்களாகவும், கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமானவர்களாகவுமே பிறக்கின்றனர்". ஆனால் 'இந்து' இந்தியாவில் ஒருவன் பிறக்கும்போதே அந்தத் தாய்க்குரிய சாதி – தொப்புள் கொடியாக அவனைச் சுற்றி இறுக்கி விடுகின்றது. உரிமை மறுக்கப்படுகின்றது. அவன் இறந்த பிறகும் அவனுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவனைப் புதைப்பதற்குக் கூட, தீண்டாமையின் காரணமாகத் தனிச் சுடுகாடு. உலக வரைபடத்திலேயே இதுபோன்ற ஒரு கொடுமை இல்லை. எவ்வித எதிர்ப்புமின்றி நாள்தோறும் இப்படி நடைபெறுவது இந்தப் 'புண்ணியப்' பாரத பூமியில் மட்டும்தான். வாழுகின்ற காலத்தில் மனித உயிருக்கும், சுதந்திரத்திற்கும், பாதுகாப்புக்குமான உரிமை தலித்துக்கு இல்லை. அடிமைத்தனத்தையும், உரிமை மறுப்புக்களையும் சுமந்தபடியே தலித் சமூகம், தன் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமுதாயத்தில் 'தமிழ் நாகரிகம்' அந்தரத்திலிருந்து தொங்கி விழுவதல்லவே?

"இந்தியாவின் அறிவு நாகரிகத்திற்கு நாம்தான் முதலுரிமை உடையவர்கள்" என்று ஒடுக்கப்படுகின்ற தலித்துக்கள் மார்தட்டிக் கொள்ள முடியுமா? பின் எப்படி அவர்கள் தமிழ் நாகரீகம் பற்றிப் பேசுவார்கள்! சிந்திப்பார்கள்! அப்படிச் சிந்திக்க முடியாத போது தமிழ் நாகரிகத்தின் எதிர்காலம் பற்றிப் பேசுவதில் ஒரு தலித்துக்கு என்ன பங்கு இருக்கின்றது? சாதி, மதம், சடங்குகள் என்பன தமிழ்ச் சமூகத்தில் 'இடம் பெற்றிருந்தன' என்ற உண்மையை தொல்காப்பியர் தொட்டு இன்றுவரை யாரும் மறுக்கவில்லை. இவை 'இடம் பெற்றிருந்தன' என்ற உண்மை எளிதாக எழுதிவிட்டுப் போகக்கூடிய செய்தியல்ல. சாதியும், ஏற்றத்தாழ்வும் இடம் பெற்றிருந்ததன் வழியாக அதிகமாகப் பாதிக்கப்பட்டவனின் ஆதங்கத்தை - இழப்பை, எப்படிச் சரிக்கட்டுவது? இன்று நாம் பேசும் தமிழ் நாகரிகம் அதில் ஏற்கெனவே இடம் பெற்றிருந்த சாதியும், மதமும், சடங்குமில்லாமல் பார்க்கப்படுகின்ற பார்வையா? என்பதே சந்தேகம்தான். *தலித்துக்களின் எதிர்ப்புணர்வு ஆரியத்திற்கு எதிரானது மட்டுமல்ல. தமிழ் நாகரிகத்திற்கும் எதிரானதுதான். இந்த எதிர்ப்புணர்வு மட்டும்தான் தலித்துக்களின் நாகரிகமாக இருக்கும். தமிழ், தலித் இரண்டையும் ஒரு அர்த்தத்தில் பார்த்தால்தான் தமிழ்நாகரிகம் தலித்நாகரிகமாகக் கருதப்படும். அப்படிக் கருதப்படுமானால், தமிழ் நாகரிகத்திற்கான எதிர்காலம் சரியான புரிதல்களோடு பகிர்ந்து கொள்ளப்படும், உணர்ந்து கொள்ளப்படும்.*

"தமிழ் என்பது அன்பு, அறம், ஆண்மை, பெண்மை, தாய்மை, அழகு, கலை, தவம் என்று ஆயிரம் பொருள்படும்" என்று ஞானி குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் அவை ஒவ்வொன்றும் இன்றைய சமுதாயத்தில் அர்த்தமுரண்களைச் சந்திப்பவைகளாகவே

இருத்தலோடு இணைந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. எது அன்பு? எது தவம்? என்று விளக்கம் சொல்ல முற்படும் போது எது தமிழ்? என்ற விளக்கத்திற்கு நாம் வரவேண்டி இருக்கும். "ஆண்டாண்டுக்காலமாக காலால் மிதித்து நசுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட என் மக்களுக்கு நான் செய்யும் முயற்சிகளின்போது இந்த நாட்டுக்கு உதவி புரியவில்லை என்றால் அது என்னால் தவறாகாது; எந்தத் தீங்கும் என்னால் இந்த நாட்டிற்கு ஏற்படவில்லை என்றால் அதற்கு என் மனசாட்சிதான் காரணம். என் மனசாட்சியின் தூண்டுதலால் என் மக்களுக்கு மனித உரிமைகள் கிடைக்க நான் எடுக்கும் முயற்சிகள் இந்த நாட்டிற்கு எந்தத் தீங்கையும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தால் அல்ல" என்று அம்பேத்கார் போராடிச்சென்றபின்னும் மனிதஉரிமைகள் கிடைக்காத நாட்டிற்குள் நாகரீகம் என்ற ஒன்று இருக்கின்றது என்பதைச் சிந்தித்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

11. தமிழ் நாகரிகம் – எதிர்காலத்திற்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக்கொள்ளும்

பேரா. முனைவர். தி. கமலி

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நனிநாகரிகம் வேண்டு பவர்"

'உயிர் கொல்லும் நஞ்சினைத் தந்தாலும், எதிர்ப்பேச்சோ, மறு பேச்சோ இல்லாமல் வாங்கி அருந்தத் தயங்காத நாகரிகம் மிக்கத் தமிழினம் எனும். 'நாகரிக வரையறை' உலகிலேயே தமிழ் மொழியில்தான் காணக் கிடைப்பதாக இருத்தல் வேண்டும். அந்தப் பாரம்பரியமும், மரபும் நம்தமிழரை இன்று நஞ்சொத்த யாவற்றையும் மறுக்காமல் அங்கீகரிக்கவும் ஏற்கவும் பழக்கியிருப்பதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது? உலகமயமாதல் 'ஆங்கில நாகரிகத்தை' அனைவருடையதுமானதாகவும், 'உலகநாகரிகம் என்பதே ஆங்கில நாகரிகம் என்பதைப் போலவும், அந்நாகரிக எல்லைக்கு உட்படாததும், விலகிச்செல்வதும், வேறுபட்டு இருப்பதுமாகிய நாகரிகம் 'காட்டுமிராண்டித்தனம்' போலவும், பொருளற்ற மூடத்தனச்செய்கை என்றும், வெட்கி, அஞ்சி, மறைத்துப் பின்பற்றவும், போலியாக நடிக்கவும் தமிழரை மிகச்சிறப்பாகத் தயார்செய்து கொண்டிருக்கிறது.

- ❖ ஒன்றுபடாதிருத்தல்
- ❖ அடிப்படையில் பிரிந்து, சிதறுண்டு போதலைத் தம் இயல்பெனக் கொண்டிருத்தல்
- ❖ எதுநேரினும், பாரதி கூறுவது போல் அதிர்வுறாத இரும்புக் காதினராக இருத்தல்
- ❖ எத்தகைய நலிவுகளையும் விதியென ஏற்றுக்கொள்ளுதல்

எனும் கூறுகள் தமிழர் தம் பண்புநலன்களாக அமைந்திருக்கும் வரை, 'தமிழ் நாகரிகம்' தனக்கான எதிர்காலத்தையும் போராட்டச்சூழல் நிறைந்த நிகழ்காலத்தையும், தனது நீடுபழமை வாய்ந்த செவ்வியல் தகைமையைக் கொண்டு எதிர்கொண்டாக வேண்டிய சூழல் உள்ளது.

2. பெண்களின் கண்களில் கண்ணீர் வழியாமல் அவர்கள் மனநிறைவோடும், நிம்மதியோடும் வாழும் சூழல் நிலவும் சமூகம், நாகரிகம் நிறைந்த சமூகம்' என்று கொள்ளத்தக்கது. இன்றைய சமூகத்தில், பெண்கள் படித்து, வேலை செய்து, பொருள் ஈட்டி, குடும்பத்தை நிர்வகித்து, 'இரட்டைப் பணிச்சுமைகளைத் தம் தோளில் தாங்கிச் செயல்பட்டு வருகின்றனர். 'வீட்டில் அமர்ந்து வாளா உண்ணும் கணவரினம்' என்று ஒரு இனம் உருவாகி வருவதை அண்மைக்கால ஆய்வுகள் உறுதி செய்து வருகின்றன.

Husband - கணவர்; Wusband - மனைவியின் சம்பாத்தியத்தில் வாழும் கணவர் என்று தனிச்சொல் ஆங்கிலத்தில் நேற்று உருவானது. அந்த நிலை இன்று தமிழினத்திலும் தோன்றியுள்ளது.

❖ ஆண் போலப் பெண்ணை வளர்த்தல் இன்று இளம் பெற்றோரிடம் காணலாகும் தன்மையாக உள்ளது. திருமணம் வரையிலும் ஆண் போலவே தன்னைக் கருதிச் செயல்படும் பெண், மண வாழ்க்கையில் பெண்ணாக நோக்கப்படுவதை எதிர்கொள்வதில் உளவியல் சிக்கல்களை உணரத் தலைப்படுகின்றாள். 'பிம்பாயிஷ்' என்று (Tomboish) ஆணாகக் கற்பிக்கப்பட்டு, வளர்க்கப் படுபவர்கள். அணியும் ஆடை, அலங்காரங்கள், உடை, நடை, பாவனை போன்ற புறத்தோற்றத்திலும் சரி; பாலியல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் போன்ற அகஞ்சார்ந்த அறவரையறைகளிலும் சரி; நிராகரித்தல், புறக்கணித்தல், இலேசாக எடை போட்டு புறந்தள்ளுதல் போன்றவற்றைக் கைக்கொள்ளத் தவறுவதில்லை என்று ஆய்வுகள் உறுதி செய்கின்றன. 'தடையற்ற பாலியல் சுதந்திரம்' நவநாகரீக தமிழ்ச் சமூகத்தில், ஆணாதிக்க மனப்போக்கினரால் அங்கீகரிக்கப்பட இயலாததாகவும், பெண் விடுதலை இலக்கினரால் புறந்தள்ள இயலாததாகவும் உள்ளது.

'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்

என்பது எக்காலத்திற்கும் பொருந்துவது. தமிழ்நாகரிகத்திற்கு எதிர்காலம் பிரகாசமாகவே இருக்கும். இதில் யாதொரு ஐயப்பாடும் வேண்டியதில்லை.

3. தமிழ் அடையாளம் மறைக்கப்படும் சூழல் இன்றைய சூழல். பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருப்பதில்லை. தமிழ் மொழி இலக்கியப் பயிற்சி சார்ந்த அக்கறை தமிழர் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும் என்றில்லாமல், 'தமிழாசிரியர்களது உடமை' யாகக் கருதப்படும் மனப்போக்கு, தமிழில் உரையாடுதல் என்று அனைத்தும் அரசியலாக்கப்பட்ட சூழல்தான் எனினும் கவலை கொள்ளத் தேவையில்லை.

'நக்கீரன் வளர்த்த நல்ல தமிழை
லன்னைத் தமிழ் இஸ்துகினு பூட்டுது'

என்று வட்டாரக் கிளைமொழிகள் பெருகுதலைக் காணும் போது, 'மொழி அடையாளம், இன அடையாளம், நாகரிகத்தின் தளமாகத் திகழும் பண்பாட்டு அடையாளம் வெகுவாக மாறி வருதல் திகைப்பூட்டுகிறது.

'மறந்தே போனது உயிர்த்தோழியின் திருமணம்
தொலைக்காட்சி சீரியல்'

என்று யாவற்றையும் மறக்கடிக்கும் தொலைக்காட்சியின் ஆளுமை, அது போதிக்கும் விழுமியங்கள், மூளைச்சலவை கற்பிதங்கள், 'இருட்டாக எதிர்காலத்தைக் காட்டினாலும், கருமேகங்கள் வெகுகாலம் மறைக்கமுடியாது. ஒரு சரிவின் பின்னெழும் எழுச்சி அபரிமிதமானது. அதன் ஆற்றல் அளவிட இயலாதது. அது ஏற்படுத்தும் மாற்றம் உன்னதமானது. தமிழ்ப்படைப்பிலக்கியத் துறை பண்டிதர்களையும், புலவர்களையும் விட்டகன்று, தமிழர் அனைவரையும் பிரதிநிதிப்படுத்துவதாக, எல்லாத் தரப்பினரையும், 'படைப்பிலக்கியவாதிகளாகப் பரிணமிக்கச் செய்து வரவில்லையா? தமிழ் இலக்கிய வரலாறு என்பது 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகில்' உருவான இலக்கியங்களது வரலாறு என்று எல்லையிலிருந்து விரிவடைந்து, 'தமிழகத் தமிழ் இலக்கியம், அயலகத் தமிழர் தம் படைப்பிலக்கியம், என்று உலக எல்லையதாக உருவாகவில்லையா?

புதுதில்லியில், 'மலைமந்திரையும்' ஆஸ்திரேலியாவில், 'சிவாலயங்களையும், அமெரிக்காவில், இலண்டனில் வைதீக முறைப்படி ஆலயங்கள் எழுப்பி வழிபட மறவாத தமிழர்கள் தமது தாயகத்தில் சற்றே அசட்டையாக இருக்கிறார்கள். அவ்வளவுதான்.

<u>கடைப்பெண்ணே! கடைப்பெண்ணே!</u>

புதிதாகத் தான் திறந்த கடைக்கு
வேலைக்குப் பெண் வேண்டும் என்று
விளம்பரம் தந்திருந்தார் மாமா!
வேலைக்குப் பெண் எதற்கு?
பையனைப் போடக் கூடாதா?
ஆட்சேபித்தாள் மாமி;
பையனை வேலைக்கு வைத்தால்
போட்டிக் கடை போடுவான்;
திருட்டுத் தம் அடிப்பான்;
யூனியன் ஆரம்பிப்பான்
பெண்ணை வேலைக்கு வைத்தால்
கொடுக்கிற சம்பளத்தை வாங்கிகிட்டு
சிவனே'ன்னு வேலை செய்யும்;
கடைக்கு வருகிறவர்களுக்கும்
கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கும்
மாமா மாமியிடம் சொன்ன காரணம் இது;
அவ்வப்போது நானும் தொட்டுக் கொள்ளத்
தோதாயிருக்கும்.
மாமா மாமியிடம் சொல்லாத காரணம் இது!

4. பாலியல் சீண்டல் உள்ள பணித்தளம், வாழ்க்கை முறையை அடியோடு மாற்றும்; 'அழைப்புச் சேவை' (Call Centre) தகவல் தொழில் நுட்பப் பூங்காப் பணிக்கூடங்கள், இணைய தளங்கள் என்று உடலுழைப்பு, 'உட்கார்ந்த உழைப்பாகி' வருகிறது. வேலை, ஊதியம், கல்வி வேண்டி திசையெட்டும் செல்லத் தயாராகி வரும் தமிழினம், முன்னுதாரணம் இன்றி வளரும் ஒற்றைக் குழந்தை இல்லங்களது பெருக்கம், கடின உழைப்பு, படிப்படியான, நிலையான வெற்றி என்றின்றி, அதிக சிரமமின்றி உடனடி வெற்றி, சொகுசு வாழ்வு, அதிரடிச் செயல்பாடு என்றாகி வரும் சூழல், எதிரில் உள்ளவர் எல்லாம் தனது போட்டியாளர்; புறம் தள்ளி வெற்றி பெற வேண்டிய எதிரி எனும் மனநிலையை வளர்க்கும் போட்டிக் கல்வி முறை, திருமணம் தள்ளிப்போதல் மணமின்றி சேர்ந்து வாழ்தல், எந்தக் கட்டத்திலும் மணவிலக்கு பெறுதல், மறுமணம் செய்தல், என்று அதிர்வுகளைத் தாங்கும் கொள்கலனாகக் குடும்ப நிறுவனம், கல்வித்தளம், பணிக்கூடம், அரசியல், சமூகக் கட்டமைப்புகள், சமய பண்பாட்டு நிறுவனங்கள் மாற்றம் பெற்று வரும் சூழல் இன்றைய வாழ்வியல் சூழல்;

கடல்கோள்கள், பெரும் பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், அயலவர் ஆதிக்கம் என்று எத்தனை எத்தனையோ இன்னல்களை எல்லாம் எதிர்கொண்டு, மீண்டு, தொடரும் தமிழினம் இது. உலகமயமாதல், நவீனமயமாதல், காலனிய ஊடகத் திணிப்பு, தாராளமயமாதல் என்பவற்றால் தடுமாறலாம்; திகைக்கலாம்;

சிக்கலான சூழல் நேரும்போது, அதற்கான தக்கதீர்வும் தானே வடிவுகொள்ளும்; எக்காலத்திற்கும் எல்லாச் சிக்கல்களுக்கும் பொருந்த வல்ல தீர்வை ஒருநாளும் உருவாக்க

முடியாது. அந்தந்தச் சூழல்களுக்குத்தான் அந்தந்த நேரத் தீர்வுகள் பொருந்தி வரும் என்று நெருக்கடி நிர்வாகக் கொள்கை (Crisis Management) வலியுறுத்துவது தமிழர் நாகரிகத்திற்கும் பொருந்தும்.

இன்று உலகில் வாழும் நாம் அனைவரும் அதிகம் போனால் ஒரே ஒரு நூற்றாண்டுப் பழமையினர். அவ்வளவே! எல்லோரும் புதியவர்கள்; வரலாற்று வெளியில், நெடிய தடங்களைப் பயணித்து, தடயங்களைப் பதிவு செய்து, தொடரும் தமிழ் நாகரிகத்தின் நிகழ்காலம் அதிர்வுகளைச் சந்திப்பதாக இருந்தாலும், எதிர்காலம் உன்னதத் திருப்பங்களை எதிர்கொண்டு, பிரகாசமாக அமையும். ஆற்றல் நிறைந்த புதுத் தலைமுறை அத்தகைமையை உருவாக்குவது திண்ணம்.

12.தமிழன் உள் முகமாகத் தேடி தன்னை மீட்டுக்கொள்ள வேண்டும்

இரா. மோகன்ராசு, முத்துப்பேட்டை

தமிழ் தேசியம் குறித்து எழுத்தாகவும், இயக்கமாகவும் தோன்றுவதற்கு முன்னதாகவே அதுபற்றி எழுதியும் இயங்கியும் வந்த மிகச் சிலருள் தாங்களும் ஒருவர் என்றறிவேன்.

தமிழ் நாகரிகம் என்பதும், தமிழர் நாகரிகம் என்பதும் ஆதிப் பொதுமனிதனின் குழந்தமைச் சாயல்தான். அதனை முழுமையும் போற்றி வளர்த்த ஒரு சமூகம். தமிழ் வாழ்வியல் வரலாற்று நெடுகிலும் எழுந்த அறியப்பட்ட சான்றோர் எவரும் இறைதூதருக்கு சற்றும் குறைவில்லாதோரே!. அரசு என்பது அறமாகவும், உறவு என்பது அன்பாகவும் வாழ்வு என்பது கொண்டாட்டங்களினூடே அமைந்த மெய்ம்மை பற்றிய தேடலாகவும் உருக்கொண்ட ஒரு மக்கள் திரள் அது. ஒரு இயேசுவின் செயல்களில், முகமதுநபியின் செயல்களில், தெரேசாவின் செயல்களில், காந்தியின், செகுவேராவின், ஃபிடல்காஸ்ட்ரோவின் மார்க்சிய, இயக்கங்களில் தமிழனின், தமிழ்நாகரிகத்தின் ஆதிக்கொடை இல்லையா என்ன? எனினும்... இன்றைய உலகின் திசைப்போக்கில் தமிழ்த் தொன்மையின் நிலைதான் என்ன? எவ்வளவு தூரம் அடையாளங்களையும், அதன் உட்சாரங்களையும் ஊடாகக் கொண்டு காப்பாற்றி வந்திருக்கிறது? எங்கும் ஒரே சூழல் போல தமிழ் வெளியும் வர்த்தக வெப்பத்தில் தகித்துக் கிடப்பதை காணலாம். ஒரு குழந்தையை நோக்கிய பஞ்சு மிட்டாய்க்காரனின் கரிசனத்தைப்போல அழைப்பில் எது மிஞ்சும்? அவரவர் தேவைக்கு மற்றவரை வியாபாரியின் குரலிலேயே நேசிக்கின்றனர். ஒவ்வொரு மனிதனும், தமிழனும் ஒரு பெரும் 'நுகரும் தோல்பையாக' மாறி வருகிறான். வர்த்தகச்சூழல் அல்லது முதலாளியமயம் ஒட்டுமொத்த மனிதனையே கேள்விக்குள்ளாக்கும் நிலையில் தமிழன் தப்புவது எதிலிருந்து? தனிமனித ஒழுங்கு (அ) நேர்மை முற்றிலும் சிதைவிலிருக்கிறது. அங்குமிங்குமாகத் தவிர, தமிழனும் விலக்கல்ல. தொல் பெருமை, தொல்தொடர்பு அற்றத் தீவுத்திடலாக மாறிக் கொண்டிருக்கும் தமிழனுக்கு, வரலாற்றுப் பெருமை பாட இன்றைக்கு நேரமில்லை என்பது கசக்கும் உண்மை.

'உனக்கு நீயே விளக்கு' என்பது போல தனிமனிதரிலிருந்தே திருந்துதல் தேவை. ஆமாம் 'திருந்துதல்' என்பது செயற்கையாகிவிடும். சுயஒளியே எவரையும் நெறிப்படுத்தக் கூடியது. வெளியிலிருந்து பாய்ச்சுதல் முழுமை பெறாது.

இயற்கையை முதன்மைப்படுத்திய ஒரு மரபின் தொடர்ச்சி, வண்ணத்துப்பூச்சிகளின் காடு இன்றைக்கு தமிழன் என்பதே ஒரு செயற்கைப் பொருள். சாதி, வருணம் போன்றவை

மட்டுமே பிடிவாதமான தொடர்ச்சியாய் இருக்க, மாண்பின், விழுமியங்களின் மற்ற கண்ணிகளின் தொடர்ச்சிகள் எங்கே? இன்றும் பிச்சை எடுப்பவர். வறுமைக்கும் வெகு கீழுள்ளோர் ஆதித் தமிழரேயன்றி பிராமணர் அல்ல. கூரையின் கீழ் வாழும் குடும்பமரபை நமக்குத் தொடர்ந்து மறுத்து வந்தவர் யார்? எவர், மட்டுப்படுத்தப்பட்ட, எல்லைக்குட்பட்ட வாழ்க்கையை அனுமதித்தும், அவர்களது வார்த்தைகளை, நமது உதடுகள் உச்சரிக்கவும், அவர்களுக்கான வாழ்க்கையை நாம் வாழவும் கட்டமைக்கப்பட்டவற்றிலிருந்து விழித்தெழும் காலமெது? அடிமனதுள் அமிழ்ந்து போய் கிடக்கும் மரபின் வேர்களை நோக்கி உள்முகமாய் திரும்புதலே புறஉலகை மீட்டுக்கொள்ள நமக்கிருக்கும் ஒரே வாய்ப்பு. ஆண்டாண்டு காலமாய் நமது விழுமியங்கள் கேலிக்குரியதாக்கப்பட்டும், சீண்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டு, அடிமேல் அடியாய் 'சம்மட்டியடி' அடிக்கப்பட்டு ஆமையின் முகமாய் உள்புதைந்து கிடக்கும் ஆதி உணர்வுகளை, விழுமியப் பேருணர்வுகளை, மெய்யியல் மூலம் கண்டடைந்த உச்சங்களை மறு மீட்பு செய்து கொள்ளும் தவமாய் ... இதை ஒவ்வொரு தமிழனும் 'சுயமீட்புச்' செய்து கொள்ளுதல் வேண்டும். அதுவே வரும் தலைமுறையேனும் தமிழனென்று சொல்லிக்கொள்ள வார்த்தைகளாகவேனும் எஞ்சக்கூடும். எங்கள் கீழத் தஞ்சைப் பகுதியில் ஆண்டைகளை எதிர்த்துக் கிளம்பிய தீப்பொறி. தோழர். பி. சீனிவாசராவ் அடியொற்றி மணலி கந்தசாமி, களப்பால் குப்பு போன்றோரால் பற்றியெறிந்த கரிக்காட்டில், பழைய கங்கைதணலை, ஊதிப்பெருக்கி சாதியமும், மதவாதமும் இன்றைக்குக் குளிர் காய்வதை வரலாற்றின் எந்தப்பிழையில் சேர்ப்பது என்று தெரியவில்லை. சமதர்ம இரத்தம் உலர்வதற்கும், மதவாத இரத்தம் பெருக்கெடுப்பதற்குமாக வரலாறு சென்று கொண்டிருக்கிறது. தன்னை எப்போதும்போல் வரலாறு சொல்லிக் கொண்டிருப்பதில்லை என்பது உண்மைதானோ? மனிதன் உருவாக்கி வளர்க்கும் எதுவும் அவனது பலவீனங்களையும் கொண்டதாக இருக்கும் என்பது சரிதான் போலிருக்கிறது.

13. தமிழ் நாகரிகத்தின் மீட்சிக்கு தேவை தலைமையே!

நா. வை. சொக்கலிங்கம் (ஆசிரியர், "யாதும் ஊரே" - இதழ்)

"அன்புத் தமிழனே! அடிமைப் பிறவியே!
என்பு நெகிழ இதைஉரைக் கின்றேன்;
சற்றே உன்செவி சாய்த்துக் கேட்பாய்,
முற்றும் எண்ணுவாய்; முடிவொன்று காண்பாய்!"

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

1. ஞானியின் 'தமிழ் நாகரீகத்திற்கு என்ன எதிர்காலம்?' என்ற கட்டுரையில் காணப்படும் முக்கிய உண்மைகள்:

1. நெடுங்காலத் தமிழ் நாகரிகத்திற்கு தொன்மைக்காலம் முதலே நெருக்கடிகள் இருக்கத்தான் செய்தன. இவற்றில் முதன்மையானது வடக்கிலிருந்து வந்த ஆரியத்தின் தாக்குதல்.
2. ஆரியத்திற்கு எதிரான கூர்மையான கேள்வியை வள்ளுவர் எழுப்புகிறார் என்பது உண்மைதான்.

3. ஆரியத்திற்கெதிரான போராட்டம் தமிழ் வரலாற்றில் தொடர்ந்து நடைபெறுகிறது என்பது உண்மைதான்.

4. தேசிய இனங்களின் இறையாண்மையை ஒப்புக்கொள்ளும் முறையில் இந்தியாவில் கூட்டாட்சி அமையவில்லை.

5. மதச்சார்பற்ற அரசு என்ற கொள்கை தடம் புரண்டது.

6. சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்தை இந்தியாவில் கேள்விக்குட்படுத்துகிற ஒரே இனம் தமிழினம்தான்.

7. வேதம், கடவுள், பார்ப்பனியம் ஆகியவற்றை மறுப்பவர்கள் தமிழர்கள்.

8. இந்தி மொழி பேசுபவர்தான் இந்தியாவை ஆளவேண்டும். இந்தியா என்ற சொல்லே இந்து மதம் என்பதைக் குறிப்பதாக இவர்கள் நம்புகின்றனர்.

9. இந்தியின் வருகையை ஆங்கிலம் தடுத்து விடும் என்று நாம் நம்பினோம். தொடக்கத்தில் இந்தியின் நுழைவை நாம் தடுத்தோம் என்பது உண்மைதான்.

10. மெட்ரிக் பள்ளிகள் இன்று பொறுக்கிகளை முதலாளிகள் ஆக்குகின்றன. அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் நிறைய வருமானத்தை வழங்குகிறது.

11. அரசு அதிகாரத்தை உடனடி நோக்கமாகவோ இறுதி நோக்கமாகவோ கொள்ளாத தமிழ்த்தேசிய அரசியல்தான் தமிழ் நாகரிகத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் மேம்படுத்திக் கொள்வதற்குமான அரசியல்.

12. தமிழ்த் தேசியம் என்ற பெயரில் ஆதிக்க அரசியலை மறுக்கும் இயக்கங்கள் ஒன்றிணைந்தாலொழிய தமிழ் நாகரீகத்தைக் காப்பாற்றவோ, வளர்க்கவோ இயலாது.

மேற்கண்டவைகள் யாவும் அனைவருக்கும் உடன்பாடான கருத்துக்கள்தாம். இந்தியாவில் இருக்கும் வரை இந்திமொழியோடு முரண்பட்டுப் பயனில்லை என்பது எப்படி? தன்னுரிமைத் தமிழகத்தை உருவாக்கக் கூடிய தமிழ்த் தேசியத்தை முன்னெடுப்பது என்பதே தமிழ் நாகரீகத்தின் மீட்சிக்கான வழியும் தீர்வுமாகும்.

2. இரண்டு வகையான அழிவுச் சக்திகள் தமிழினம் தலையெடுக்க விடாது தடுக்கின்றன என்பது வரலாறு தரும் உண்மைகளாகும். ஆரியர்களின் ஊடுருவால், பார்ப்பனியத்தின் கலாச்சாரத் திணிப்பால், திராவிட / தமிழ் நாகரிகம் சீரழிக்கப்பட்டது. தமிழ் மொழி சிதைக்கப்பட்டு சிதறுண்டது. பெரும்பான்மையாக இருந்த தமிழர்கள், இன்று இந்தியாவில் மொழிச்சிறுபான்மையினராக மாற்றப்பட்டுவிட்டனர். ஒருபகுதி மக்களை ஒடுக்கப்பட்டவர்களாகவும் புறந்தள்ளிவிட்டனர். புத்தநெறி இந்தியாவிலிருந்து துரத்தப்பட்டதும், இந்தியா முழுவதும் பரவியிருந்த தமிழர்கள் இன்று தமிழகத்தில் முடங்கிக் கிடப்பதும், இப்பார்ப்பனியப் பரவலாலே ஆகும். இரண்டாவது அழிவுச் சக்தியாக விளங்குவது நம்மவர்களின் துரோகமாகும். இராம இராவணப் போரில் இராமனுக்கு அனுசரணையாக தன் இனத்தையே காட்டிக்கொடுத்த விபீடணன், அனுமார், சுக்ரீவன், அங்கதன் ஆகியவர்களைப் போல, நமது இனத்தைப் பார்ப்பானுக்குக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கவும், பதவி பெறவும் உள்ள தேர்தல் அரசியல்வாதிகளின் துரோகமாகும். இத்துரோகம் குறித்து தந்தை பெரியார் கூறுவது: "நாய் நல்ல விசுவாசமுள்ள பிராணிதான் என்றாலும் அது அதை (நன்றியை) மனிதனிடம் தான் காட்டுகிறதே ஒழிய தன் இனத்தைச் சார்ந்த வேறொரு நாயைக் கண்டால் குலைக்கும். அதுபோலத்தான் நம் தமிழர்கள் நிலை இருக்கிறது. தங்கள் இனத்தை மாற்றானுக்குக் காட்டிக் கொடுப்பதையும், தங்கள் இனத்திற்குத் துரோகம் செய்வதையுமே கடமையாகக் கருதி கொண்டிருக்கின்றனர்".

துரோகத்தை தம் வாழ்நாளில் அனுபவித்தவர் அல்லவா பெரியார்?

எனவே, தமிழ் நாகரிகத்தின், தமிழரின், தமிழின் மீட்சிக்கு பார்ப்பனியத்தையும் நாம் எதிர்த்துப் போரிடவேண்டும். அடுத்து *இனத்துரோகம் செய்யும் இழிவுப் பிறவிகளாய், உடன்பிறந்தே கொல்லும் வியாதியாய் உலவும் துரோகத் தமிழர்களையும் கண்டு களை எடுத்தாக வேண்டும்.* இந்நிலையில் 'திராவிட' என்ற பெயரில் தேர்தல் அரசியல் கட்சிகளாக இயங்கும் அமைப்புகள் திராவிட இயக்கங்கள் அல்ல என்பதையும் அவைகள் இனத் துரோக அமைப்புகளே என்பதையும் நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இக்கட்சியின் தலைவர்களுக்கு 'நாம் தமிழர்' என்ற உணர்வு சிறிதும் கிடையாது. பகுத்தறிவுச் சிந்தனைகளோ, சமதர்மச் சிந்தனைகளோ சிறிதும் கிடையாது. மொழி இன உணர்வற்றவர்களிடம் இவைகளை எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? *தேர்தல் அரசியல் என்ற சூதாட்டத்தின் பெயரால் தமிழின விடுதலைக்குத் தடையாக இருப்பவர்கள் இவர்களே!* ஆனால், இக்கட்சிகளின் தொண்டர்களுக்கு 'நாம் - தமிழர்' என்ற உணர்வு உண்டு. இத் தொண்டர்கள் 'நனைந்த கரித்துண்டாய்க் கிடக்கின்றனர்' எனலாம்.

3. மொழி, இன உணர்வுப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம், தேர்தல் அரசியல் கட்சித் தொண்டர்களும், நம்மிடையே இணைந்து மொழிகாக்கும் மறவர்களாக மாறக்கூடிய வாய்ப்புகள் அதிகம். தன்னுரிமைத் தமிழகம் அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்த்தேசிய உணர்வை தமிழர்களிடம் நாம் கொண்டு செல்லவேண்டும். இதற்கான சீரிய தலைமையின் கீழ் நாம் ஒன்றுபடவேண்டும்.

பாவாணர் கூறிச் சென்றது என்ன? "தனித்தமிழ் மறவருள் ஒரு கடுங்கோல் முற்றதிகாரி தலைவனாக வந்தாலொழியத் தமிழ்த் தொண்டர் எத்துறையர் தோன்றினும் தமிழ் பேசும் நடைபிணங்கள் செவிக்கேளா; மனந்திருந்தா; என்று தெளிவுறக் கூறியிருக்கிறார். இன்று, தமிழ்த் தேசியம் பேசும் அமைப்புகள் ஒன்றா, இரண்டா? எல்லா அமைப்புகளுமே, தமிழ்த் தேசியம் பேசுகின்றன. தமிழ், தமிழர் மீட்சி குறித்து முழக்கமிடுகின்றன. ஆனால், குறைந்தபட்ச வேலைத்திட்டம் வகுத்து செயல்படவும் தயக்கம் காட்டுகின்றனவே! அன்று, அண்ணா, அண்ணா காங்கிரசிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினார். இன்று, கலைஞர் தில்லி நாடாளுமன்ற நாற்பது நாற்காலிகளையும், தமிழக ஆட்சியையும் கைப்பற்றினாரே! பயன் என்ன? சமஸ்கிருதத்திற்கு இணையாக செம்மொழித் தமிழை உரிய நிலைக்கு உயர்த்தவும்.

- தமிழ் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும், பாடமொழியாகவும்,
- கோயில்களில் தமிழ் 'நீசமொழி'யாகத் தொடர்ந்து இழிவு படுத்துவதை எதிர்த்தும்.
- மைய அரசு அலுவலகங்களிலும், விளம்பரங்களிலும் இந்தி மொழி திணிக்கப்படுவதை எதிர்த்தும்.

இப்படியாகப் பல போராட்டங்களை தமிழகம் தழுவிய அளவில் எழுச்சி மிக்க அளவில் நடத்தலாம். இத்தகைய அறப்போராட்டங்களின் மூலம் பார்ப்பனிய மேலாண்மையை அழித்தொழிக்கலாமே! துரோகக் கும்பலை ஒடுக்கலாமே!. அடுத்து, மற்றமாநிலங்களில் தேசியஇனங்களின் எழுச்சியை கருத்துப்பரப்பல் மூலம் செய்யலாம். கருத்துப்பரப்பலுக்கு தொலைக்காட்சியும், நாளிதழும் தேவை. பணம் ஒரு பிரச்சனையாக இருக்காது. ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் தத்தம் பங்களிப்பைச் செய்யும். கருத்துப் பரப்பல், போராட்டங்கள் மூலம் புதியஅரசியல் சட்டத்தையே எழுதிவைப்போம். தந்தைபெரியார் அரசியல் சட்டத்திருத்தத்தைச் செய்து நமக்கு வழிகாட்டியாக இருக்கிறார்.

தமிழ் அறிஞர்களே, உயர்வாளர்களே, வீட்டில் அடைந்து கிடக்காமல், வீதிக்கு வாருங்கள்.

இன்றைய முதன்மைத் தேவை – தலைமையே!
"..........................ஆதலினால்
ஊரழியு முன்னம், உருவழியு முன்னேயே
பேரழியு முன்னம், பிழையறிந்து வாரீரென்
றெல்லார்க்கும் கூறுகின்றேன்! ஏற்றதெனக் கண்டீரேல்
நல்லார் ஒருவர் தலைமையிலே நாமொருங்கே
கூடித் தமிழுயர்த்துங் கொள்கை வழிப்பட்டே
ஈடில்லை எங்கெட்கென் றேற்ற குரல் கொடுப்போம்!"

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

14. மொழி – தமிழர் – மூளைச்சலவை

கு. முத்துராமலிங்கம், பொள்ளாச்சி

1. மொழி என்பது சமூகத்தின் அனுபவத்தைச் சேகரிக்கும் ஒரு கொள்கலன், பாத்திரம். கல்வி என்பது அவ்வனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் செயல். குழந்தை கருவாய் உருவான நொடியிலிருந்தே தாய்வழி மொழி அனுபவத்தைப்பெற்று வளர்கிறது. அச்செயலின் தொடர்ச்சியே கல்வி. எனவே, கல்வியை, குறைந்தது தொடக்கக்கல்வியை தாய்மொழியிலேயே தரவேண்டும் என வலியுறுத்துவது தாய்மொழி ஈடுபாட்டினாலன்று; குழந்தையின் கல்வி, அறிவு, மூளை, உடல் உள்ள வளர்ச்சிக்காகவே. 85%க்குமேல் பள்ளிக் கல்வியை, அறிவியலை தமிழ் வழியிலேயே பல காலமாகப் பயில்கின்றனர் என்பதை அவர்கள் ஏமாந்திருப்பதால் வசதியாக மறைத்து விட்டு, *15%க்கு கீழுள்ள ஆங்கில வழியில் பயில்வோரின் நலத்திற்காகவே உயர்கல்வியில் ஆங்கிலம் பயிற்று மொழியாக தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளது.* ஆட்சி மாறியிருக்கிறது. எதிர்பார்ப்பும் கூடியிருக்கிறது. ஏனெனில், பல எதிர்பார்ப்புகளால் உருவான அரசு இது. ஆனால், அந்தோ பரிதாபம்! ஏறக்குறைய அதே நிலை தமிழின் நிலை. அதே மனநிலை, மனப்போக்கு நீடிப்பதால், பாழாய்ப் போன நடைமுறைச் சிக்கல் குறுக்கே வருகிறது. சாதனையாளர்கள் செய்கின்றனர். மற்றவர்கள் காரணம் கற்பிக்கின்றனர் என்பர். முந்தைய மைய, மாநில அரசுகளிடம் உலகளாவிய தமிழ், தமிழர் நலன் குறித்த எதிர்பார்ப்புக்கள் குறைவு. ஆனால், புதிய அரசிடமோ அவ்வெதிர்பார்ப்புகள் பன்மடங்காய் பெருகியுள்ளன. எனவே, பாவேந்தர் வாக்குப்படி தமிழாய்ந்த தமிழ் மகனாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில், நடைமுறைச் சிக்கல் விடைபெற்றுச் சென்றிடும் வண்ணம், 12-ம் வகுப்பு வரை அன்று, ஆய்வுப்படிப்பு வரை கூட தமிழ் மொழியை இந்த ஆண்டு முதலே அறிமுகஞ் செய்து வைக்கலாம்.

2. இன்றல்ல, 100 ஆண்டுகளுக்கு மேலாகவே ஆங்கில மோகம் தலைவிரித்தாடுகிறது. அரசின் சலுகை வசதிகளோடு பெரிய முதலீடும் சந்தைப்படுத்தலும் இல்லாமல் கிராக்கியுடன் செய்யக்கூடிய, *நல்ல லாபம் ஈட்டக்கூடிய தொழிலாக ஆங்கில வழிப் பள்ளிகள் உள்ளதால் அவர்களாலும், கல்விப்பொறுப்பு குறையும் என்ற தவறான எண்ணத்தால் அரசுகளாலும், வேறுவகையில் (vested interests) பயனடைவோர்களாலும், கல்வியில்*

பாடத்திட்டத்தாலும், ஊடகத்தாலும் ஏற்றத்தாழ்வு ஏற்படுத்துவதன் மூலம் தகுதி, திறமை, கல்வி, வேலைவாய்ப்பை மறைபொருளாய் தந்திரமாய் மாற்றிடும் ஆதிக்கச் சக்திகளாலும் ஆங்கில மாயை தோற்றுவிக்கப்படுகிறது. அதனாலன்றோ சிறிது கற்றோரும் தமிழ் வழி மாணவர்களும் கூட தமிழில் அன்றி ஆங்கிலத்தில் கையொப்பமிடும் போக்கு உள்ளது.

3. திராவிடமொழி பேசுவோர்க்கு தாய்க்குத் தாய்மொழியாய் அமைவது தமிழ். கட்டிடத்திற்கு அடித்தளம் போன்று பிறதுறை, பிறமொழி அறிவு, திறன்பெறுதற்கு தாய்மொழியே அடிப்படை. ஆங்கிலத்திறனின்மையால் மேற்கல்வி கற்றோர் வேலைவாய்ப்பைப் பெற இயலவில்லை, என்று கூறப்படுகிறது. *ஆங்கில வழியில் கற்றோர் அனைவரும் வேலை பெற்று விட்டார்களா? ஆங்கிலத் திறனைத்தான் பெற்று விட்டார்களா?* தேர்ச்சிக்காய் அங்கவர் படும்பாடு பெரும்பாடு. 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் செய்முறையில் 50% 50, எழுத்துத் தேர்வில் 20/150 அதாவது 100க்கு 13.33 என மொத்தம் 200க்கு 70 மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்று வந்தனர் நீண்டகாலமாய். எனில், மேற்கல்வித்தரம் எவ்வாறு இருக்கும்? பிறகு, செய்முறைக்கு 50க்கு 30, எழுத்துத் தேர்வுக்கு 150க்கு 40 அதாவது 100 க்கு 26.66 (35 அல்ல) கட்டாயம் எனக்கொண்டு வந்தபோது, ஆங்கில வழிப்பள்ளி நிர்வாகிகளிடமிருந்து எதிர்ப்புக்குரல் வந்தது. சென்ற ஆண்டும் புதிய பாடத்திட்டப்படி நடந்த 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் வினாக்கள் சற்றுக் கடினமாக இருந்ததையொட்டி பழைய மதிப்பெண் முறைக்கு மாறு குரல் கொடுத்தனர். ஆங்கில வழி கற்றோர் நல்ல வேலையைப் பெறுகின்றனர் எனில், அவர் தமிழ் வழியில் பயின்றிருந்தால், அதனினும் மேநிலை எய்தியிருப்பர். *நல்ல எதிர்காலம் எனக் கருதி ஆங்கில வழியில் பயிற்றுவித்து வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவோர், இறுதியில் தங்கள் பிள்ளைகளை பண்பாட்டு அகதிகளாகவும், தம்மை சொந்த நாட்டு அநாதைகளாகவும் ஆக்கிக்கொள்கின்றனர்.* ஆங்கில வழிப் பள்ளிகளில் தமிழ் புறக்கணிப்பும், அவமதிப்பும் அவர் கொள்கை வழி சரியே. விரும்பியோ விரும்பாமலோ வசதியின்மையால் வேறு வழியின்றியோ தமிழ் வழி அரசுப்பள்ளிகளில் பயில்வோர் 85%க்கு மேல் தம் விருப்பில் பொறுப்பில் நல்ல எதிர்காலம் எனக் கருதி வெளிநாட்டு வேலைக்காய் ஆங்கில வழியில் கற்போரை, அரசு தமிழக வேலைவாய்ப்பிலிருந்து விடுவித்து, *தமிழ்வழி பயில்வோருக்கே அனைத்து வாய்ப்புகளையும் வழங்கவேண்டும்* அல்லது அவர் தம் எண்ணிக்கைக்கேற்ப வழங்குதல் வேண்டும். இந்நிலையை அடையவே தமிழறிஞர்கள் முயலுதல் வேண்டும்.

4. யார் தமிழர்?

திரைகடலோடியும் திரவியம் தேடும் ஆசையால், அரபு நாட்டில் பாலைவனக் கப்பலை மேய்த்தவர் பற்றியும், மலேசியா போன்ற நாடுகளில் கொத்தடிமைகளாய்ச் சிக்கி கழிவறைகளைச் சுத்தம் செய்தவர்கள் பற்றியும், அமெரிக்கா போன்ற நாடுகளில் பண்பாட்டை, நிம்மதியைத் தொலைத்து எந்திரமாய் உழைத்து, உழைப்புச் சுரண்டலுக்கு ஆட்பட்டு சக்கையாய் வெளித்தள்ளப்படுபவர் பற்றியும் செய்தித்தாள்களில் தொடர்ச்சியாகப் படித்தாலும், 'விளக்கினுள் விழும் விட்டில் பூச்சி' களாக இருக்கும் தமிழர்களுக்கு, "ஆங்கிலக் கல்வியால் (வெளிநாட்டில்) வேலைவாய்ப்பு (வாய்க்கும்)" என்னும் மாய மானை, கானல் நீரைக் காட்டி ஆங்கில போதையை, போதனையை விற்போர் தமிழரா? தொழில் செய்யத் தெரியாது இங்குள்ள தமிழர்கள் கூலிகளாய் வெளியேறிவிட, ஒரு படையெடுப்பு போல பிற மாநிலத்தவர் இங்கு வந்து இருக்கும் தொழில் அனைத்தும்

உவந்து செய்து வளமுடன் வாழ்வதால், தமிழகத்தின் இன்றைய எல்லையே எதிர்காலத்தில் ஆபத்திற்குள்ளாகும் வாய்ப்பு உள்ளதை உணராத சிலர், பலரின் வஞ்சகத்தால், சிலரின் பெருந்தன்மையால் தமிழகத்தின் எல்லை பறிபோன நேற்றைய வரலாற்றைக் கூறுவர். தமிழர் தம் மனதினில் சுயதொழில் முனைப்பை, உழைப்புப் பண்பாட்டை, ஒற்றுமையுணர்வை உருவாக்காது அதை ஊறு செய்து கூறு செய்து ஒழிக்கச் செய்யும் கூறுகளான கல்வி, சமூகநிலை, அரசியல் போக்கை மாற்றுவது பற்றி சிந்தியாத அனைவரும் பொறுப்புள்ள தமிழரா?

வீட்டினில் வேறு (திராவிட) மொழி (முதியோர்) பேசிடினும், வாழ்வினில் (பள்ளியில்) தமிழைப் போற்றுவோர் தமிழராகாரா? அவர்தம் தாய்மொழியின் தாய்மொழியாக, மூலமொழியாக தமிழ் உள்ளதால், அவர் தமிழுணர்வுடையோராதல் இயல்பு. செம்புலப்பெயல் நீர் செந்நிறமாதல் போல் தமிழகத்தில் வாழ் பிறரும் தமிழுணர்வுடையோராதலும் இயல்பே. *பிறப்பால் மட்டுமல்ல, உணர்வின் அடிப்படையிலேயே ஒருவர் தமிழராவார். பிறப்பால் தமிழர், உணர்வாலும் தமிழராவது எந்தநாளோ?*

5. மூளை (அ) சிந்தனைச் சுரண்டல்

முல்லாவும் கடத்தலும் (ஒரு வேடிக்கைக் கதை): முல்லா பிரஷ்யாவிலிருந்து கிரேக்கத்திற்கு கழுதை மீது வைக்கோலை வைத்துச் சென்று எதையோ கடத்துவதை உணர்ந்த எல்லைச் சுங்க அதிகாரி அவரிடமே, “முல்லா, எதைக் கடத்துகின்றீர்?” என்று வினாவ, “நீங்களே, அதைக் கண்டுபிடியுங்கள்” என்று கூறுகிறார் முல்லா. முல்லாவையும் வைக்கோலையும் நன்கு சோதனையிட்டும் அவர்களால் கடத்தல் பொருளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்பொரு நாள் பிரஷ்யாவை விட்டு வெளியேறிய முல்லாவை எகிப்தில் சந்தித்த அச்சுங்க அதிகாரி முன்பு கடத்திய பொருள் பற்றிக் கேட்க, அதற்கு முல்லா, “பிரஷ்யாவில் குறைந்த விலையில் கிடைக்கும் கழுதைகளைத்தாம் ஒவ்வொன்றாகக் கிரேக்கத்திற்குக் கடத்தியதாகவும், செல்லும் பொழுது கழுதையிலும், வரும் பொழுது கழுதையின்றி நடந்தும் தாம் வந்ததைக் கவனித்திருந்தால் இது தெரிந்திருக்கும்” என்றும் சொன்னார். அச்சுங்க அதிகாரி போலத்தான் இங்கு நமது அரசுகளும், நாமும் உள்ளோம்.

அரசு பெரும்பணம் செலவிட்டு உருவாக்கும் மருத்துவம், பொறியியல், அறிவியல் அறிஞர்கள் போன்ற தொழில்நுட்ப வல்லுனர்களே மனித வளமாகும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும் மனித வளமே அந்நாட்டின் உண்மையான வளமாகும். *பெரும் முதலீடு செய்து ஒரு நாடு உருவாக்கும் மனித வளத்தை பிறநாடுகள் எவ்வித சரியீடுமின்றி பயன்படுத்திக் கொள்வது உழைப்பிற்குரிய ஊதியத்தை வழங்காத உழைப்புச் சுரண்டல் போன்றதொரு சுரண்டலாகும். இதுவே மூளைச் சுரண்டலாகும். அரசு ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி கொடுப்பது கடமையாவது போல, பிறகு உழைக்கும் காலத்து அவ்வுழைக்குந் திறனுக்காய் அது செலவிட்ட தொகையை ஒவ்வொருவரிடமிருந்தும் திரும்பப் பெறுதல் அரசின் உரிமையாகும்.* செலவீடு ஒருவழிப் பாதையில் செல்லாது, மீளப்பெறுதல் அரசின் செயல்பாட்டிற்கு, எளிய இயக்கத்திற்கு அவசியமானதும் ஆதாரமானதும் ஆகும்.

ஞஐஐஐஞ

15. தமிழ் நாகரிகத்திற்கு... ?

சு.ப. ஜீவா

1. "நெடுங்கால தமிழ் நாகரிகத்திற்கு தொன்மைக்காலம் முதலே நெருக்கடிகள் இருக்கத்தான் செய்தன. இவற்றில் முதன்மையானது வடக்கிலிருந்து வந்த ஆரியத்தின் தாக்குதல்". இதிலிருந்தே ஆரம்பிப்போம். இவர்களின் வினைகள் இன்றும் நம் கழுத்தில் நுகத்தடியாக இறங்கிக் கொண்டிருக்கிறன. நவீனகாலம் என்று சொல்லிக் கொள்ளும் இந்நேரத்திலும் இட ஒதுக்கீடு எதிர்ப்பு, கோவிலில் பணி அமர்த்த எதிர்ப்பு, ஏன் பெண்கள் கோவிலில் நுழைய எதிர்ப்பு, நமது கலைகளுக்கும் கலாச்சாரத்திற்கும் ஏற்படும் அவமானம் என்பன போன்ற பலவகையான தொல்லைகளை அன்றாடம் எதிர்நோக்குகிறது. மெனக்கெடுகிறது. அடிப்படை உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள நீதிமன்றத்தில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறது.

எல்லா காலகட்டங்களிலும் ஆரியத்தை எதிர்க்க வேண்டிய கட்டாயம் தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது. அவர்கள் எப்போதும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் அசட்டையாய் இருக்கிறோம். விளைவு தமிழனின் எதிர்காலம் என்ன என்ற வினா எழுப்ப வேண்டியுள்ளது. சமூகத்தின்பால் பிரக்ஞையுள்ள அத்தனை பேருக்கும் எழவேண்டிய அச்சம். கலாச்சார சீரழிவுகளை அனுமதிக்கும் எந்த நாடும் இனமும் அழிந்தே போகும். பல சிக்கல்களை சந்திக்க நேரிடும் என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தும் கவனமில்லை. *தமிழருக்கு ஆரியத்தைவிடவா ஒரு எதிரி புதிதாக முளைத்துவிட போகிறது? கட்டுக்கதைகளிலும் மாயைகளிலும் ஒரு மாபெரும் சமூகத்தை, இனத்தை மொழியை கட்டுக்குள் கொண்டு வந்து விட முடியும்? ஒன்றுமில்லாமல் செய்துவிட முடியும்?* சென்ற தலைமுறையின் அக்கறையின்மைதான் இன்றைய மாணவர்களின் அறியாமைக்கு காரணம் என்றும் கொள்ளலாம்.

2. போன தலைமுறையை எடுத்துக் கொள்வோம். 'படிப்பாளிகள்' அல்லது 'பயனீட்டாளர்கள்' அதாவது அரசாங்கப் பணியிலுள்ள நல்ல நிலையிலுள்ள அனைவரும் இவர்கள் முன்பு வைக்கப்படும் எனது குற்றச்சாட்டுகள்.

1. சட்டங்களால் பாதுகாக்கப்பட்ட அத்தனை சலுகைகளையும் பயன்படுத்தி முன்னேறிவிட்டு சுயநலமாக இருக்கும் போக்கு.
2. இது தன் அதிபுத்திசாலித்தனத்திற்கு கிடைத்ததாக நம்புதல்
3. சமூகத்தில் ஒட்டாமல் சுருங்கிக் கொள்ளும் மேல்மட்ட வர்க்க வாழ்க்கையை விரும்புதல்
4. சமூக அநீதிக்கு குரல் கொடுப்பவர்களை, போராடுபவர்களை வேலை வெட்டி இல்லாதவர்களாக நினைத்தல்.
5. தன்னை இன்னாரென அடையாளம் காட்டத் தயக்கம்.
6. 'தாய்மொழி' அடையாளம் கூட விரும்பாமை. ஆங்கில மொழி மோகம்.
7. உழைப்பவர்களை கேவலமாகப் பார்க்கும் தன்மை. இவ்வளவுக்கும் காரணம் சுயநலத்தின் உச்சத்திற்கு சென்று அதன் பலனாய் பெற்ற சுரணையற்ற தன்மை. தமிழினம் அழிந்துவிடுமோ அழிந்து கொண்டிருக்கிறதா என்று சந்தேகிக்க வேண்டியதில்லை, அழிந்து கொண்டுதான் இருக்கிறது.

3. நாம் இளைஞர்களைக் கனவு காண சொல்லியிருக்கிறோம். அவர்களும் கண்டு கொண்டிருக்கிறார்கள். தற்போதைய இளைஞர் சமுதாயம் புத்திசாலிகளாகவும், அறிவுஜீவிகளாகவும் ஏன் மனிதர்களாகவும் யாரைப் பார்க்கிறார்கள்? இவர்களுக்கு ஒரு

செய்தி. கணிணி உலகில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கும் ஜப்பான், சீனா போன்ற நாட்டின் கணிணித் துறையைச் சார்ந்தவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. அதை அவர்கள் கட்டாயமாகக் கருதவில்லை என்பதுதான் உண்மை. இதற்குச் சான்று வேண்டுமெனில் தமிழகத்தில் கணிணி ஆர்வலர் பிரபல எழுத்தாளர் எழுதியிருந்தார். இதைவிட சாட்சி வேறு எதுவுமில்லை. இன்றைய சமுதாயம் இவர் சொன்னால் நம்பும்.

இன்றைய தலைமுறை, தனக்கு எவ்வித அடையாளமும் தேவையில்லை என நினைக்கும் தலைமுறை. சுயமுன்னேற்றம் ஒன்றே தனது இலக்கு. பயன்படுத்திக் கொண்டே சாதிய இட ஒதுக்கீடு தவறு என பேசும் அறியாமை. தவறு இவர்களுடையது அல்ல. கற்றுக் கொடுக்கத் தவறியதன் விளைவுகள். இன்றைய இளைய தமிழர்களின் முன்வைக்க வேண்டிய சில வினாக்கள்?

1. எதுவும் சாத்தியம் என்று நம்பும் இன்றைய தமிழ் இளைஞர்கள் இந்த நம்பிக்கையை எங்கிருந்து பெற்றீர்கள்?
2. யார் வழங்கினார்கள்? அல்லது யார் கூப்பிட்டுக் கொடுத்தார்கள்?
3. இதற்கு காரணமானவர்கள் என்று யாரேனும் இருந்திருக்கிறார்களா?
4. இதற்கான போராட்டங்கள் இழப்புகள் ஏதேனும் உண்டா?
5. அப்படியாயின் எந்தவுணர்வு உங்களைக்கொண்டு சென்றது?
6. இவர்களுக்கும் உங்களுக்கும் சம்பந்தமிருக்கிறதா?
7. இதை பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறதா இல்லையா?

இவற்றிற்கு விரிவாக வேண்டாம். நேரமில்லை ஒருவருக்கும். எனவே ஒற்றைச் சொல்லில் பதில் வாங்குங்கள். கற்றுக் கொடுக்கத் தவறியமை புரியும்!

4. எப்படி மதம் அழிந்து விடுமோ என்ற ஐயம் எழும் போதெல்லாம் மதவாதிகள் அவர்கள் மதத்தை காப்பாற்ற எவ்வளவு மெனக்கெடுகிறார்கள். மதம் ஒருபோதும் போதிக்கத்தவறுவதில்லை. மனித சமூகத்தைப்பற்றிப் பேசும்பொழுது மார்க்சியம் இல்லாமல் ஒன்றுமில்லை. உலகெங்கும் மறைந்த மனிதத்தை, இனத்தை மீட்க, பாதுகாக்க மார்க்சியமே கைகொடுக்கிறது.

தமிழ் சமுதாயத்தில் பெரியாரிடம் இன்றி முழுமையான சமுதாயம் ஒரு போதுமில்லை. தமிழனின் வாழ்க்கையை அவரைப் போல் ஆராய்ந்தவர் சீரமைக்கப் போராடியவர் எவருமில்லை. கல்வியாளர்கள், பெண்கள் குறிப்பாக நினைத்துப் பார்க்கவேண்டும். ஈ.வே. ராமசாமி அவர்களின் இடையறாத உழைப்பு, செலவழித்த நேரங்கள், சமூக அக்கறை கூடவே அவரது வயதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பெரியாரியத்தின் இலக்கு எதை நோக்கி இருந்தது என்பதை கற்றுக் கொடுங்கள் அதுபோதும். *மார்க்சியமும் பெரியாரியமும் புதிய கலாச்சாரத்தை உருவாக்கும். உலகின் எந்த மூலையில் மனித வன்முறை நிகழ்ந்தாலும் அதை எதிர்க்கும் முதல் குரல் தமிழர்களுடையதாக இருக்கும்.* ஐயமே இல்லை.

16. தமிழ் நாகரிகத்திற்கு எதிர்காலம் – ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுவதே

தி. ரங்கசாமி

எங்கும் எதிலும் குறைகளைக் காண்கின்ற மனிதர்களைப் போலவே எனது இதர உடற்பகுதிகளின் செயல்பாட்டில் குறை கண்டு வலி ஏற்படுத்தி வருகின்ற இருதயத்தைச் சுமந்து கொண்டே நலமுடன் இருக்கிறேன். என் உடல் செய்கின்ற பணிகளில் நிறைவுகளைத் தவிர்த்து குறைகளைப் பெரிதுபடுத்தி வலியைத் தருகிறது. 60 பைசா விலையுள்ள Sorbitrate நாவின் அடியில் வைத்திருந்தால் ஒரு நிமிடத்தில் வலி ஓடிவிடுகிறது. அதேமாதிரிதான் தமிழ் மக்களும் ஆரியப் பிராம்மணன் மீது குறை சொல்லிக் கொண்டே காலம் கடத்தி வருவதாக நான் கருதுகிறேன். சூழ்ச்சிகளால் இழந்து நிற்கிறோம் என்று சொல்லி விட்டு அதனை உயிர்ப்பித்து மேம்படுத்த முயல்வதை ஒத்தி வைத்துக் கொண்டே இருக்கையில் வசைபாடி ஒழித்த பிறகுதான் அடுத்த பணியைத் தொடர வேண்டுமென்று எண்ணுகிறோம்.

செய்ய வேண்டியதைச் செய்யாமல் சவால் விட்டுக் கொண்டே இருக்கிறோம். சுரண்டல் முறையால் பாதிக்கப்பட்ட மக்களிடையே சுரண்டல் முறையை அகற்ற வழியேதும் கூறாமல் அனைவரையும் பாவிகளாக்கி பரமண்டலத்தில் சுகம் பெற அழைப்பது போன்றும், கஷ்டங்களைத் தவிர்க்க தேவைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு முன்னேற வழி கூறாமல் ஆசைகளைத் துறக்கச் சொல்வது போன்றும் சமூகச் சீரமைப்பிற்கு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடாமல் அழிவுப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதுவே தமிழ் மக்களை உயர்த்தும் என்கின்ற மாயவித்தையைச் செய்து வருகிறோம் என்றே நான் கருதுகிறேன்.

17. தமிழ் நாகரீகத்திற்கு என்ன எதிர்காலம் ?

முனைவர். சு. வேணுகோபால்

1. அறுபதுகளில் மொழிஉணர்வு ஓர் உச்சநிலையைப் பெற்றிருந்தது. பெரியார், தமிழனைக் காட்டுமிராண்டி என்றும் தமிழ் மொழியைக் காட்டுமிராண்டிகளின் பாஷை என திட்டிச் சீர்த்திருத்தத்தாலும் தமிழுக்குச் செழுமை சேர்த்தவராகவே இருக்கிறார். தமிழ் நாகரீகத்தைச் சாதியின் பிடியிலிருந்தும் சமஸ்கிருதத்தின் பிடியிலிருந்தும் மீட்டுத் தந்தவர் அவர். அத்தோடு கடவுளின் பிடியிலிருந்தும் அவர் துண்டித்ததில் ஒரு பக்கம் நன்மையும் ஒரு பக்கம் பாதகமும் விளைந்ததாகவே நினைக்கிறேன். சைவம், வைணவம் தமிழோடும், தமிழ் நாகரீகத்தோடும் கொண்டிருந்த உறவு அறுந்துவிட்டது. சிவனுக்கும் தமிழுக்கும் இருந்த உறவு தமிழைத் தெய்வநிலைக்கு உயர்த்தியது. சிவனில்லாத தமிழிடம் அறிவியல் புகுந்து அதனை வெறும் தொடர்பு ஊடகமாக மாற்றியிருக்கிறது.

அறுபதுகள் என்று சொன்னேனே அக்கால இளைஞர்களிடம் தமிழ் மீது உண்மையான பக்தி இருந்தது. இதனை பக்தி என்று தான் குறிப்பிடவேண்டும். ‘ஆர்வம்’ என்ற வார்த்தை அவ்வளவு உசிதமானது அல்ல. அந்த பக்தியில் தமிழைத் தனது வாழ்வியலாக்கிய இளைஞர்கள் என்னென்ன செய்தார்கள். இந்தியைத், தார்பூசி

அழித்தார்கள். இந்திப்படங்களைத் திரையிட்டத் திரையரங்குகளைத் தீயிட்டுக் கொழுத்தினார்கள். தமிழைத் தங்கள் உடம்பில் பச்சைக் குத்திக் கொண்டார்கள். இது ஒருவகையான ஆவேசம்தான். அந்த ஆவேசம் ஏன் அவர்கள் குழந்தைகளிடம் வெளிக்கிளம்பவில்லை? யாரிடம் தொய்வு ஏற்பட்டது. பெற்றோர்களிடமா? அல்லது அவர்கள் சார்ந்திருந்த இயக்கத்திடமா?

ஓடும் ரயிலை இடைமறித்து – அதன்
பாதையில் தனது தலைவைத்து
உயிரையும் துரும்பாய்த் தான் மதித்து
தமிழ் பெயரைக் காத்த கூட்ட மிது'

என மதிப்பிற்குரிய கருணாநிதியவர்களின் இந்தி எதிர்ப்பு போராட்ட நிகழ்வோடு பாடலொன்று கூட வந்திருக்கிறது. ஆனால் பெரியவர் கருணாநிதியவர்கள் தன் குழந்தைகளை எங்கு படிக்கவைத்தார், எப்படி படிக்க வைத்தார் என்பது உலகம் அறிந்த செய்தியாகும். இச்செய்தி அடுத்த கட்ட இளைஞர்களிடம் சந்தேகத்தை எழுப்பியது தானே உண்மை! தமிழ்ப்பற்று என்பதன் பொருள் என்ன? என்ற கேள்வி ஒவ்வொரு தமிழறிஞர் உள்ளத்திலும் அன்று ரீங்காரமிட்டது.

சமீபத்தில் தயாநிதிமாறனை மத்திய மந்திரியாக்கிய போது பத்திரிகையாளர்கள், கட்சியில் மூத்த ஊழியருக்கு மந்திரி பதவி இல்லையா? என்று கேட்டபோது கருணாநிதியவர்கள் தயாநிதிமாறனுக்கு இந்தி தெரியும் என்பதால் அந்த பதவி அளித்திருக்கிறோம் என்றார். இப்படியான வரலாறுகளைப் படிக்கிற போது எப்படி நம்பிக்கை கொள்வார்கள் இளைஞர்கள்!. இந்நிலை தார்பூசி அழித்த கூட்டம், உயிரை துரும்பாக நினைத்து ஓடும் ரயில் தண்டவாளத்தில் தலை வைத்த கூட்டம் மர்மமான முறையில் இந்தி படிக்க வழிவகை செய்கிறதை எப்படி எடுத்துக் கொள்வது? எந்த செயல்பாட்டையும் தமது வீட்டிலிருந்தே தொடங்கவேண்டும். அரசியல்வாதியின் பிள்ளைகள் எல்லாம் மெட்ரிக்குலேசன் பள்ளியில் படித்தவர்கள். *இன்று சினிமா வாரிசு, அரசியல் வாரிசு, இலக்கிய வாரிசுகளின் காலம். தமிழ் பிழைக்குமா? தமிழரின் நாகரீகம்தான் பிழைக்குமா?*

2. இன்று தமிழ்ப் பேராசிரியர்களாக இருப்போரின் நிலை என்ன? எங்கு தேர்வுத்தாள் திருத்தச் செல்லலாம்; எங்கு தொலைநிலை கல்வி பாட வகுப்புகள் (சனி, ஞாயிறு) எடுக்க வாய்ப்பு அமைகிறது; தேர்வு கண்காணிப்பாளராக செல்லும் வாய்ப்பு எங்கு இருக்கிறது என பணமள்ளும் வாய்ப்புக்களைக் கப்பென அமுக்குவதற்காக தவம் கிடக்கிறார்களே, இவர்களால் தமிழ் வளருமா? இவர்களின் மாணவர்கள் தமிழார்வமிக்க தமிழ் மாணவர்களாக நாளை உருவாவார்களா? நிச்சயம் இல்லை. *30 ஆயிரம் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு கேவலம் நூறுக்கும் நூற்றி அம்பதிற்கும் ஓடும் இவர்களை என்ன செய்வது?* வருடா வருடம் இவர்களுக்கு ஊதிய உயர்வு எதற்கு? தன் சொந்தப் பணம் போட்டு நல்ல நூல் வாங்காத இந்தப் பேடிகள்தான் தமிழ்த்துறைகள் எங்கும் நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் கம்பனை முழுமையாகப் படித்திருக்கிறார்களா? சிலப்பதிகாரத்தை முழுமையாகப் படித்திருக்கிறார்களா? புதுமைப்பித்தன் யார் என்று தெரியுமா? இவர்களால்தான் தமிழ் அழிகிறது.

சென்ற தலைமுறைத் தமிழறிஞர்களான தெ.பொ.மீ. வ.சுப.மாணிக்கனார், வையாபுரிபிள்ளை, வேங்கடசாமி நாட்டார், மு.வரதராசனார் போன்றோர்கள் வணங்கத்தக்கவர்கள். இன்று 55

வயதை நெருங்கிக் கொண்டிருப்போரில் எத்தனை பேர் தமிழறிஞர்கள்? எத்தனை பேர் தொடர்ந்து வாசிப்பு பழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றனர்? தன் பிள்ளை, தன் பெண்டு, தன் வீடு என பணம் திரட்டும் இவர்களின் மாணவர்கள் பிற்காலத்தில் எப்படி 'தமிழ் மாணவர்'களாக உருவாவார்கள். இவர்களின் மாணவர்கள் இவர்களைப் போலவே ஆசிரியப் பயிற்சி முடித்தோ, இளநிலைத் தத்துவவியல் முடித்தோ பணம் சேர்க்க வேலை தேடுவார்கள். தமிழ் உருப்படுமா?

3. நாகரீகம் என்பது சிக்கலான விசயமாக கருதுகிறேன். முக்கியமாகக் கற்பு குறித்துத் தமிழ்ப் பண்பாட்டில் அவ்வப்போது சலனங்களை உண்டாக்குகிறது. காமம் என்பது இருபாலிடமும் நிரம்பித் ததும்பக்கூடிய ஒன்றே. தமிழ்ப் பண்பாட்டில் இதுகுறித்து ஆணுக்கு சாதகமாகவும் பெண்ணுக்கு பாதகமாகவும் விதிமுறைகளை விதித்திருக்கிறோம். இது இரண்டாயிர வருட ஆழ்மனப் பிரச்சினை. ஒரு ஏழைப்பெண் கற்பு இல்லை, கத்திரிக்காய் இல்லை என எடுத்தெறிந்து பேசிவிட முடியாது. அவளால் சுயமாக நிலைநிற்க எந்தக் கரங்களும் விடாது. இறுதியில் அவளின் தன்மானம் ஒரு விபச்சாரியாக கொண்டு நிறுத்தி விடும். பணம் படைத்தப் பெண்களே இப்போது புரட்சிகர கருத்துக்களை வெளியிட முடியும். அவர்களால் தங்கள் சொந்தக் கால்களில் நிற்கமுடியும் என்பதால். கிராமங்களில் விவாகரத்தும், மறுமணங்களும் மிக எளிமையாகி விடுகின்றன. காமம் என்ற ஒரு சிறு பிரச்சனையை வைத்துக் கொண்டு கற்புதான் தமிழ் பண்பாடா? எது தமிழ்ப் பண்பாடு என கேள்விகள் கேட்டு தங்களை அறிவு ஜீவிகளாக காட்டிக் கொள்கின்றனர். *என் கிராமத்தில் "பாவிப் பயலே என் வாழ்க்கையையே நாசமாக்கிட்டேயடா. ஒங்கூட வாழ மாட்டேன்" என்று வெளிக்கிளம்பி மறுமணம் புரிந்து சிறப்பாக வாழ்ந்த கிருஷ்ணவேணியை நேசிப்பது போல என்னால் குஷ்பு, சுகாசினியை நேசிக்க முடியவில்லை.* வெகுஇயல்பான ஒன்றைப் பத்திரிக்கையாளர்கள் சிண்டுமுடிந்து விடுவதைப் பற்றியும், இதன்மூலம் பணம் சம்பாதிப்பதற்கான பரபரப்பு நோக்கங்களையும் நம் அறிவுஜீவிகள் விவாதிப்பதே இல்லை, சிலப்பதிகாரக் கண்ணகி, தனித்து நின்று கொலைகாரனை நீ ஒரு கொலைகாரன் என்று நிறுவி, நீதி தவறியவன் என்று எடுத்துரைத்து, ஆட்சி செய்ய லாயக்கற்றவன் என வாதிட்டு வீழ்த்துவதுதானே படைப்பின் நோக்கம். *இன்றளவும் அதிகாரபீடத்தின் தவறுகளை அசைக்கக்கூடிய ஒரு வல்லமையாக கண்ணகிதானே இருக்கிறாள். இது தமிழ் நாகரீகத்தின் உன்னதம் இல்லையா? தாய்மை பெருக பசிப்பிணி போக்கும் மணிமேகலை தமிழ் நாகரீகத்தின் குறியீடு இல்லையா?* உலகை உய்விக்கும் மேலான கருத்துக்களைத் தமிழனின் நாகரீகம் என முன்வைப்பதில் என்ன தவறு. காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை ஒழித்துவிட்டு, காலங்காலமாக திரண்டு வரக்கூடிய மேன்மைகளை சொல்வதும் பின்பற்றுவதும்தான் நாகரீகம். காதலை போற்றி வளர்த்த சமூகம்தான் நம்முடையது. சங்ககால இலக்கியங்கள் ஆழமாகவும், நேர்மையுடனும், எளிமையுடனும் காதல் வாழ்வைத்தான் போற்றுகிறது. இடைக்காலத்தில் சமண, பௌத்த சமயம் மேலோங்கிய போது காதலை அரசும், சமயத் தலைவர்களும் ஒடுக்கியுள்ளனர். பின் வந்த சைவ, வைணவ மதங்கள் மக்களின் காதல் உணர்வை பக்தி மார்க்க உறவாக மடை மாற்றிவிட்டன. இன்றைய சாதிய உணர்வுகளுக்குச் சங்ககால சமூகஉறவுகளை ஒடுக்கியதுதான் காரணம். இன்று சாதிய சமூகமாக பிரிந்திருக்கிற நமது உறவு, நேசம் மிக்கவையாக இருந்தது என்கிற உண்மையை எடுத்துரைக்கிற வரலாற்றுப் பெட்டகமாக சங்க இலக்கியம் உள்ளது. இதுதான் தமிழர் நாகரீகம் என்பதில் என்ன தவறு இருக்க முடியும்.

4. ரஷ்யாவில் கம்யூனிச ஆட்சி வீழ்ந்தது. அதனால் மார்க்சியம் அழிந்து விடுமா என்ன? அதுவரை ருஷ்ய ஆட்சிமுறை மீது வெறுப்புற்றிருந்த ழூக்தெரிதா இப்போதுதான் மார்க்சியத்திற்கான வேலை வந்திருக்கிறது என்றார். *மார்க்சியம் என்பது ஒரு வாழ்முறை. அது ஒரு ஆட்சியதிகாரம் அல்ல என்பதை விளங்கிக் கொள்ளாத போது மார்க்சியத்தின் உன்னதம் தெரிய வாய்ப்பில்லை.* அதுபோலத்தான் தமிழ் நாகரீகம் என்பதும், தமிழனின் நாகரீகத்திற்குள் ஒரு மெய்யியல் இருக்கிறது.

'சிறிய கட் பெறினே எமக்கு ஈயும் மன்னே
பெரியக் கட் பெறினே யாம் பாட தாம் மகிழ்ந்துண்ணும் மன்னே'

என்று மகிழ்ந்து பாடிய கவிதாயினி ஔவையின் நிலை இன்று உண்டா? கேரளத்தில் உண்டு. பஷீர், தகழி, சக்கரியா போன்ற பெரும் எழுத்தாளர்களை முதல்வர் பதவியில் இருந்தவர்கள் நேரில் சென்று அளவலாவிவிட்டு, பாராட்டிய தருணங்கள் உண்டு. தமிழ்நாட்டில் சிறந்த எழுத்தாளர்கள் யார் என்பது கூட நமது முதல்வர்களுக்கு தெரியாது? இவர்கள் மீது பரணி பாடுபவர்களே எழுத்தாளர்களாக அறியப்படுவார்கள். தமிழனின் நாகரீகம் தமிழ்நாட்டில் குப்புற வீழ்ந்து கிடக்கிறது. காரிசியா மார்க்கியூஸ் தனது நெருங்கிய நண்பன் என்று காஸ்ட்ரோவைச் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறார். *ஜெயகாந்தனையோ, அசோகமித்திரனையோ, தி. ஜானகிராமனையோ, சிவகாமியையோ, இமையத்தையோ, ஜெயமோகனையோ தோழமை கொண்ட முதல்வர்கள் உண்டா? கம்பனைப் போற்றிய சடையப்ப வள்ளல் இன்று இல்லை. எழுத்தாளர்களைத் தங்களுக்கு பக்கவாத்தியக்காரர்களாக பார்க்க விரும்பும் அரசியல் நாகரீகம்தான் இன்று இருக்கிறது.* தவறுகளைச் சுட்டிக் காட்டுபவர்களை எதிரியாகப் பார்ப்பார்கள். ஆட்சியாளர்களுக்கு வாழும் எழுத்தாளர்கள் பிடிக்காது. அவர்கள் பிறக்கும் முன்பே செத்துப் போயிருக்கவேண்டும். அதிலொரு வசதி இருக்கிறது. வள்ளுவனும், கம்பனும் இவர்களின் இன்றைய சூழ்ச்சிகளுக்கு நேரடி எதிர்ப்பை நிகழ்த்தப் போவதில்லை.

5. உலக சரித்திரத்தில் வியப்புடன் விவரிக்கப்படும் கங்கை கொண்ட சோழபுர ஏரியை மனித கைகள்தான் உண்டாக்கியது. உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த ஏரிகள் போலத்தான் தமிழகமெங்கும் குளம் குட்டைகளை உருவாக்கியுள்ளனர். வள்ளுவன் சொன்ன 'நீரின்றி அமையாது உலகு' என்ற கொள்கையின் அச்சாணிதான் இந்த நீர்த்தேக்கச் சிந்தனை. உபரி நீரை தேக்கி வைக்கும் சிந்தனையும், வறட்சியான காலத்தில் நீரின் தேவையையும் அறிந்து செயல்பட்ட சமூகம் நம்முடையது'. 'குளம் தொட்டு வளம் பெருக்கினான்' என கரிகால் பெருவளத்தானைச் சிறப்பாக குறிப்பிடும் சொற்றொடர் ஒன்று உண்டு. கல்லணையை உருவாக்கியவன். நிலத்தடிநீரைச் சேமித்தலையும் பாதுகாத்தலையும் ஒரு கலையென உருவாக்கியிருக்கும் சமூகம் தமிழ்ச் சமூகம். இன்று மதுரை, திருச்சி, கோவை, சென்னை, விழுப்புரம் போன்ற பெரு நகரங்கள் குளங்களையும், குட்டைகளையும், ஏரிகளையும் விழுங்கி விட்டன. மதுரையைச் சுற்றி இருந்த தல்லாகுளம், வில்லாபுரம், கண்மாய், மாங்குளம், சொக்கி குளம் என 20 கண்மாய்கள் வீட்டடிமனைகளாக அரசு ஏலம் விட்டு, கட்டிடங்கள் ஆகிப்போயின. *அறிவு சான்ற அரசியல் மேதைகளால் குளங்கள் அழித்தொழிக்கப்பட்டன. இதனைத் தமிழின் நாகரீகம் என்று சொல்ல முடியுமா?* நிலத்தடி நீர் இல்லாதொழிந்து போன் சூழ்நிலையை உண்டாக்கியது யார்? தொடர்ந்து நீளும் மானிட வரலாற்றிற்கு என்றென்றைக்குமான அவசியத்தின்

லட்சியவடிவம் ஊரணிகளும், குளங்களும், ஏரிகளும். இந்த நாகரீகத்தின் சின்னத்திற்கு நகரமயம் எதிர்காலமில்லாது ஆக்கிவருகிறது. இதெல்லாம் தமிழின் நாகரீகம்தான். *இப்படி லட்சிய வடிவங்களை வீட்டடி மனைகளாக விற்று விடலாம் என்ற திட்டத்தை முதன்முதல் முன்வைத்த அரசு அதிகாரி நிச்சயம் ஒரு விவசாயியின் மகனாக இருந்திருக்கமுடியாது.* குளங்களின் அருமை தெரியாத ஓர் அரசு ஊழியனின் மகனாகத்தான் இருந்திருக்க முடியும். ஒருவேளை அவன் பார்ப்பனனாகக் கூட இருந்திருக்கலாம்.

6. பசுமைப்புரட்சி பற்றி சொல்லவேண்டும். நான் ஒரு விவசாயி. ஒட்டுரக விதைகள் மீதான மோகம் எப்படி வந்தது என்பதற்கு உற்பத்தியோடு ஒரு உறவு இருக்கிறது. மரபு விளைபொருளான இருங்குசோளம், வெள்ளை சோளம், ராகி, சாமை, குதிரைவாலி, செந்நெல் போன்றவையின் விளைச்சல் அளவு மிகமிகக் குறைவு. ஒரு ஏக்கருக்கு விவசாயி செலவழிக்கும் தொகையுடனும் உழைப்புடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொது உற்பத்தியைவிட செலவு அதிகமாக இருந்தது. இந்த இழப்பீட்டை வருடாவருடம் தாங்கி நசுங்கிய விவசாயிகளுக்கு ஒட்டுரகவிதைகளின் விளைச்சல் ஆரம்பத்தில் பலனளித்தது. பின் அதுவும் மண்வளம் கெட்டதும் கடனாளியாக்கியது. இன்று மாண்சாண்டோ விதைகளை எதிர்ப்பவர்கள் எளிய விவசாயிகள் அல்ல. படித்த அன்பர்கள். நம்மாழ்வார் போன்ற இயற்கை விஞ்ஞானிகள். விவசாய அரசியல் இயக்கத்தினர். இவர்களுக்கு நான் நன்றியுடையவனாக இருக்க வேண்டும். சுனாமி தாக்குதலில் பாதிப்படையாத நெல்ரகம் விசாகப்பட்டினம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. *கடல்நீர் நெல்வயலுக்குள் உட்புகுந்தும் அப்பயிர் கருகாததற்கு விஞ்ஞானிகள் கண்டு சொன்ன பதில் நம் நாகரீகத்தை நிலைநிறுத்துவதாக இருக்கிறது.* அவ்விதைகள் விவசாயிகள் காலங்காலமாக காத்து வந்த மரபான விதைகள் என்பதுதான். தமிழ்நாட்டிலும் இயற்கை சீற்றங்களை எதிர்த்து வெல்லும் விதை ரகங்கள் உண்டு. ஆனால் வருமானம் குறைவு என்பதால் பயிரிடுவது வெகுவாக குறைந்து வருகிறது. விவசாயிகளிடமும் பொருளியல் ஆசை மேலோங்கி இருப்பதுதான் காரணம். இந்த வியாபாரி மனவார்ப்பை மேலைநாடுகள் குறிப்பாக அமெரிக்க தேசம் உண்டாக்கி வருகிறது. தமிழன் உண்டாக்கிய உணவு தானியங்கள் வருங்காலத்தில் இருக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. தமிழின் தொன்மையான விவசாய முறைகளைப் போற்றும் ஒரு விவசாயி பிழைக்க முடியுமா? மலையளவு செலவுகள் செய்து கடுகளவுதான் வருமானம் பெற முடியும். இவனின் கதியை எவ்வாறு நேர்செய்ய முடியும்? உலகமயமாதலைத் தடுத்துவிட முடியுமா என்று தெரியவில்லை. அபரிமிதமான விளைச்சல் என்ற விளம்பர கவர்ச்சியில் என் எளிய விவசாயியும் சிக்கத்தானே போகிறான். அவன் சேர்த்து வைத்திருக்கும் அறிவுத்திறன் அழிவுறத்தானே போகிறது. எல்லோரும் உலகமயமாக்கலில் வியாபாரிகளாக மாறும் போது விவசாயியும் தனது அறக் கொள்கைகளை கைவிடத் தொடங்கியுள்ளான். இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பேணி வந்த மரபுகளைக் கைவிடுகிறான். இன்று பால் உற்பத்தி என்பது விவசாயிகளைப் பொருத்தளவில் மூலதனம்தான். பசித்தவர்களுக்கு பாலும், மோரும், கொடுத்து உபசரித்த நம் சமூகம் காசாக்கி பழகிவிட்டது.

7. பெற்றோர்களும், ஆசிரியர்களும், அரசியல்வாதிகளும், மதவாதிகளும், தத்துவவாதிகளும் எளியஉள்ளம் படைத்தவர்களாக இல்லை. எளியவாழ்க்கை வாழ்பவர்களாக இல்லை. தனது சொத்துக்களை இந்திய மக்களுக்காக இழந்த நேரு, தந்தை மோதிலால் நேரு போன்றோர் இருந்தனர். காந்தி குறித்து நமக்கு விமர்சனம்

இருந்தாலும் எளிய மனிதராக வாழ்ந்தார் என்பதில் ஐயமில்லை. தந்தை பெரியார் சமூக இழிவுகளை அழித்தொழிப்பதில் தன்னை அர்ப்பணித்தார். காமராசர் தனக்கென சொத்து சேர்த்துக் கொள்ளாத மேன்மையான மனிதராக இருந்தார். இவர்களின் வழிகாட்டுதலில் வந்த தலைமுறை இன்று இல்லை. கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சிப் புயல் வைகோ எல்லோரும் நமது தலைவர்கள். வசதி படைத்த கோடீஸ்வரர்கள். இன்று இவர்கள் தானே தமிழ்ச் சமூகத்தின் வழிகாட்டிகள். ஒரு மேடை பேச்சிற்கு முப்பதாயிரம் வாங்கும் சுகிசிவம் தானே நமது தத்துவவாதி. ஒரு பட்டிமன்றத்திற்கு 20 ஆயிரம் வாங்கும் சாலமன்பாப்பையா, லியோனி, நெல்லை கண்ணன் தானே தமிழறிஞர்கள்.

8. கேரளத்தில் ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு பஷீர், தகழி, குமாரன் ஆசான் போன்ற இலக்கிய ஆளுமைகள் தெரியும். இங்கு பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு பிரபஞ்சன் தெரியாது. தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு மட்டும்தான் தமிழ்நாகரீகமும் தமிழ்மொழியும் பொறுப்புடையவையாகப் பார்க்கப்படுகிறது. கேரளத்தில் என்னுடைய குறுநாவலான கூந்தப்பனை 2002ல் மொழி பெயர்க்கப்பட்டு மாத்ருபூமியில் தொடராக வெளிவந்தது. அத்தொடருக்கு 10,000 ரூபாய் சன்மானம் அளித்தது மாத்ருபூமி. அதுமட்டுமல்லாமல் அத்தொடர் புத்தகமாக்கப்பட்டு எம்.டி.வாசுதேவநாயர் தலைமையில் வெளியிடப்- பட்டது. (கடந்த நான்காண்டுகளாக) 'ராயல்டி' வருடாவருடம் இரண்டாயிரம் ரூபாய் வருகிறது. இதைக் கூறினால் யாரேனும் நம்புவார்களா? அந்நூலை வாசித்த மலையாளி வாசகர்களிடமிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்துள்ளன. அவர்களில் பெரும்பாலோர் மலையாள இலக்கியம் படித்தவர்கள் அல்ல. வேறு துறைகள் சார்ந்தவர்களே. குறிப்பாக பல பாட்டாளிகள் எழுதியவை. *மலையாளிகளுக்கு இருக்கும் மொழி உணர்வு தமிழர்களுக்கு இல்லை. கல்லூரிகளில் எந்த துறை சார்ந்த மாணவர்களும் கட்டாயம் தமிழ் இலக்கிய மேன்மைகளைப் படிக்கும் படியாக இரண்டு தாள்கள் வைக்கப்பட வேண்டும்.* ஒன்று தொன்மையான இலக்கியங்களான சங்கஇலக்கியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருக்குறள் நான்கை மட்டும் முழுமையாக வைக்கவேண்டும். இரண்டாவதுதான் நவீனஇலக்கியத்தில் பாரதி, புதுமைப்பித்தன், தி.ஜானகிராமன், அபி, தேவதேவன் போன்றோரின் முழு படைப்புகளைப் படிக்கும் தாளாக அமையவேண்டும். இப்படியான சில செயல் திட்டங்களை செயல்படுத்தினால்தான் தமிழ் நாகரீகத்திற்கு எதிர்காலம் என்று ஒன்று இருக்கும்.

10. பாரதிக்கும், கம்பனுக்கும் உரிய இடத்தைப் பல இடங்களில் ஞானி குறிப்பிட்டு வருகிறார். அதனை சங்கமித்ரா தவறென சுட்டுகிறார். பாரதி 'தமிழைப் பிழைப்பு/பிச்சை கருவியாக' பாவித்தவன் என்கிறார். இளங்கோவையும், வள்ளுவனையும், கம்பனையும் உலகின் பெரும் கவிஞர்களாக பறைசாற்றுவதில் தயங்காதவன் பாரதி. 'தமிழ் இனி மெல்லச் சாகும் என கூறத்தகாதவன் கூறினான். இந்த வசை எனக் கெய்திடலாமோ' என்று கனல் தெறிக்க நின்றவன், தமிழச்சியைப் போல உலகில் வேறொரு அழகி இல்லை என்றவன், தமிழக நாட்டுப்புற மெட்டுக்களையே தனது பாடல் வரிகளுக்கு பயன்படுத்தியவன் பாரதி வாழ்ந்தது நாட்டுப்புற மக்களுடன், அக்கிரகார கழுதைகளுடன் அல்ல.

கம்பன் உருவாக்கிய ஆரியராமன் கடவுள் நிலைக்கு உயர்ந்ததால் கம்பராமாயணத்தை

ஒதுக்கவேண்டும் என்கிறார். அண்ணாத்துரை போன்றோர் தீயிலிட்டு எரிக்கவும் செய்தனர். கம்பனை அழிப்பதால் யாருக்கு நஷ்டம்? முதலில் திருமாலும், கண்ணனும் ராமனும் ஆரியர்களா? அவன் ஒரு இடைசாதியன். கரியன். ஒரு கருப்பு நிறக்கடவுள் சிவப்பானவர்களுக்கு எவ்விதம் கடவுளாக இருந்திருக்க முடியும்? மாபெரும் திராவிட வீரனான கண்ணனை ஆரியர்கள் எதிர்க்க முடியாமல் தன்வசமாக்கிக் கொண்டனர். பெண் கொடுத்து படுகுழியில் தள்ளினர். ஜேன்மிர்தால் 'இந்தியா காலத்தை எதிர்நோக்கி' என்ற ஆய்வுநூலில் கண்ணன் திராவிடக் கடவுள் என நிறுவியுள்ளார். தொல்காப்பியம்' மாயோன் மேய காடுரை உலகம்' என முல்லைநில கடவுளாக பதிவு செய்திருக்கிறது. போகட்டும். கம்பனால்தான் தமிழின் மேன்மை கூடியிருக்கிறது. தமிழ் மொழிக்கு மிகப் பெரிய பாய்ச்சலைத் தந்தவன் கம்பன். கம்பனைப் போல தமிழ் மொழியைக் கையாண்ட எந்த கொம்பனும் இம்மண்ணில் பிறக்கவில்லை. ஏன் உலகில் கூட இல்லை என்பேன். திராவிடனான இராவணனை வீழ்த்துவதாக காவியம் அமைந்திருக்கிறது. உண்மைதான். இராமனை ஆரிய கடவுளாக பார்ப்பவர்களுக்கு கம்பராமாயணத்துள் ஓடும் மனிதமேன்மை குறித்து தொகுத்துப் பார்ப்பதில்லை யாரும்.

18. பழையன கழிப்போம்

பூந்துறையான்

1. ஞானியின் குறுநூல் பல்வேறு எண்ணங்களை அழகாகத் தொகுத்தளிக்கின்றது. இம்முயற்சி மனமாரப் பாராட்டப்பட வேண்டும். எந்த ஒரு மாற்றமும் அறிஞர் பெருமக்கள், அரசியலார், வெகுமக்கள் என்ற மூன்று தளங்களின் ஒத்திசைவோடேயே நிகழும்.

வெகுமக்கள்:

ஒவ்வொரு உயிரும் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளவே முந்தும். வெகுமக்கள் என்ன நிலைபாட்டை எடுக்கின்றனரோ அதுவே வெற்றி பெறும்; பெற வேண்டும்.

அரசியலார்:

அதனை அரசியலார் செயல்வழி ஊக்க வேண்டும்; ஊக்குகின்றனர். வேறு வழி இல்லை, வாக்கு வங்கிக்காக என்றால் "பொதுமக்களின் தேவை அது" என்பது தானே பொருள். உழைக்கும் மக்கள் தங்கள் குறைந்த அளவுத் தேவைகளை அரசிடம் (தம் உழைப்புக் கூலியை ஏமாற்றும் அமைப்பிடம்) எதிர்பார்ப்பதை எப்படித் தவறு என்று கூறமுடியும்? அறிஞர் பெருமக்களின் கருத்துக் குவிமையமிட வேண்டிய இடம் இது.

அறிஞர்:

மேற்கண்ட இரண்டு கூறுகளையும் வரலாற்றோடும், தொலைநோக்குப் பார்வையோடும் மெய்யியல் அணுகுமுறையோடும் வைத்து அறிஞர் பெருமக்கள் மதிப்பிட்டுத் துலக்க வேண்டும்; தடம் காட்டவேண்டும். இங்கு அறிஞர் தம் பார்வை செழுமைப் படவேண்டும் என்பதே உடனடித் தேவை. என்ன நடந்து கொண்டிருக்கிறது - அதில் எதனை ஊக்கப்படுத்த வேண்டும் - எதனை விலக்க வேண்டும் என்ற பார்வை வேண்டும்.

2. உலகமயமாக்கல், தாராளமயமாக்கலில் எல்லோருக்கும் கல்வி வலியுறுத்தப்படுகிறதே அதனை வரவேற்கவேண்டும். திட்டமிட்டு 'எல்லோருக்கும் கல்வி' என்பதை மறுத்து வந்த பார்ப்பனிய இந்துத்துவ நோக்கம் தகர்க்கப்பட்டமையை வரவேற்போம். காதலர் தினம் வருகிறதே – சாதிகள் உடைய அதனை வரவேற்போம். குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புக்குக் காரணமாகிறதே அதனை வரவேற்போம். இன்னும்,

இன்னும் பார்ப்பனிய இந்துத்துவக்கேடுகளை உடைக்க உலகமயமாக்கல் வழி வருவனவற்றை வரவேற்போம்; மொத்தமாக எதிர்க்க வேண்டியதில்லை. எதிர்த்தாலும் பயன் விளையாது.

அரசியல்:

உலகம் ஒரு குடும்பம் என்ற எண்ணப் போக்குகள் வளர்ந்து செழித்துள்ள இன்றைய நாளில் நாம் எல்லோருக்கும் சேர்த்து சிந்திப்பதே முறை. தமிழருக்காகவும், இந்தியருக்காகவும், உலகினருக்காகவும் நாம் சிந்திப்பது தேவையான ஒன்று.

ஆம்; இந்திய, உலக ஆட்சி அமைப்புகளில் நாம் இடம் பெறாமல் தமிழையும், தமிழனையும், தமிழ் நாட்டையும் நிமிரவைக்க முடியாது. இந்தப் போக்குக்கு இணையாக மக்களாட்சியைச் சட்டமன்ற மக்கள் நாயகத்திலிருந்து மக்களே நேரடியாக அதிகாரம் செலுத்தும் கணிப்பொறி வழி அதிகார மாற்றத்தை – ஆட்சி அதிகாரத்தை மக்கள் பெறுவதை நோக்கி நடை எடுக்க வேண்டிய தருணம் இது. இதில் மாநில சுயாட்சி, தன்னாட்சி என்பவை எல்லாம் பழைய மூட நடைமுறைகளே; பழைய கள்ளைப் புதிய மொந்தையில் ஊற்றும் வேலைதான்.

பொருளியல்:

பொருளாதார நடைமுறைகளிலும் உலக நடைமுறைகளை இங்கும் கொண்டு வருவது குறித்து சிந்திக்க வேண்டிய நேரம் இது. சுவிஸ் வங்கி போல, 82000க்கு மேற்பட்ட இந்திய கோடியாதிபதிகளின் பணமும் மற்றும் பணம் படைத்தோரின் பணமும் இந்திய வங்கிகளிலேயே வைக்க வழிவகை செய்ய வேண்டும். இந்திய, தமிழக அரசியல்வாதிகளின், முதலாளிகளின் சுவிஸ் வங்கி வைப்புத் தொகை 110 இலட்சம் கோடி என்கின்றனர். அவற்றை இந்திய வங்கிகளில் வைக்கும் வாய்ப்பை உருவாக்கினால் ஆண்டுதோறும் காப்புத் தொகையாக மட்டும் 3.3. இலட்சம் கோடி - இந்திய வரவு செலவு திட்டத்திற்கு நிகரான தொகை கிடைக்கும். தமிழக இந்திய இளைஞர்களின் வேலையின்மையை இத்தொகையைக் கொண்டு மாற்ற முடியும்.

குடும்பப் பொருளாதாரம்:

உலகின் எல்லாப் பொருள்களும் வீட்டுக் கதவைத் தட்டும் : இதனை வாங்க வேண்டும்: இதனைத் தவிர்க்க வேண்டும் எனக் குடும்ப வரவு செலவுகளைத் திட்டமிட வெகுமக்களைப் பயிற்றுவிக்க வேண்டும். குடும்ப வரவு செலவு ஏடுகளை எளிய விலையில் கோடிக்கணக்கில் வெளியிட வேண்டும். “ஆகாறு அளவிட்டிதாயினும்” (குறள்) போன்ற இலக்கியங்களைப் பரப்ப வேண்டும்.

சமூகவியல்:

காதல் மணம், சாதி மறுப்புத் திருமணம், ஏன் மணம் செய்துகொள்ளாமல் தனியே வாழ விரும்பும் இளைஞர்களை - இளைஞிகளை ஊக்குவிக்கவேண்டும். பெண்களுக்கான எல்லா விடுதலைகளையும் அறிஞர் உலகம் ஏற்றுப்போற்ற வேண்டும்.

கலை – பண்பாட்டியல்கள்:

பழையனவற்றில், பயனுள்ள வற்றைப் புதுக்கவேண்டும்; புதியனவற்றில் தக்கனவற்றை வரவேற்க வேண்டும். பெண்கள், தலித்துகள் என எல்லாத் தரப்பினரும் கல்வி பெறும் வகையில் ‘மின்னணுப் பலகைகளைப்’ பயன்படுத்தி எளிதாகவும், தரமானதாகவும் கல்வியை வழங்க வேண்டும். தமிழக, இந்திய, உலகஅளவில் தொடக்கக் கல்வியை எல்லோருக்கும் கொண்டு செல்ல இந்த அணுகுமுறை பயன்படுத்தப்பட வேண்டும். தொலைக்காட்சி, திரைப்படம், ஆபாசம் என முகம் சுளிக்கும் காட்சிகள் எல்லோருடைய

அந்தரங்கத்திலும் உள்ளவைதான். உடைகளை - திரைகளை – களைந்து – போலிகளை ஒதுக்கி, இயற்கையான வாழ்க்கைக்குச் செல்லும் தடங்களை ஊக்குவித்து வழிகாட்டவேண்டும். (பெரியார் நிர்வாண சங்கத்திற்குச் சென்றதை இங்கு இணைத்துப் பார்க்கவேண்டும். காந்தியடிகள் ஆண், பெண், குழந்தைகளை உடையின்றி விளையாடச் சொன்னதை இங்கு நினைவு கூறலாம். சித்தர் மரபுகளையும் எண்ணலாம்). இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க வேண்டும். தொழிற்புரட்சி ஏற்பட்ட போது, அமெரிக்க ஐரோப்பிய நாடுகளும் தொடக்கத்தில் குப்பையாக மாறித்தான் பின் தங்களை காத்துக்கொள்ள ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்குக் குப்பைகளை அனுப்புகின்றன. நாடும் வளர – பழைய வாழ்க்கை போதாது – வரலாற்றைத் திருப்ப முடியாது – புதியவற்றை வரவேற்றுக் கொள்ளுவனகொண்டு, தள்ளுவன தள்ளிப் பயிற்றுவிப்பதே அறிஞர்கடன். அறிவியல் கண்டுபிடிப்புகளை ஒழுங்குபடுத்த ஒரு கண்காணிப்புக் குழுவை – "மக்கள் அதிகாரக் குழுவை" ஏற்படுத்த வேண்டும். வெகுமக்களுக்கு எதிரான கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்க இயலாத "மூளைக்கு கட்டளை இடும்" புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும்.

3. இனி உடனே செய்யத் தக்கனவற்றை – செய்ய இயன்றவைகளைத் தொகுப்போம்.

1. மாவட்டம் தோறும் ஒரு செந்தமிழ்க் கல்லூரியை நிறுவுதல் வேண்டும்; அதனை இந்திய ஆட்சிப்பணிகள் முதலான பயிற்சி மையமாகச் செயல்படுத்துதல் வேண்டும்.
2. மாவட்டம் தோறும் ஒரு சித்த மருத்துவக் கல்லூரியும், சித்த மருத்துவ மருந்தியல் கல்லூரியும், இயற்கை உணவுப் பயிற்சி மையமும் உருவாக்க வேண்டும்.
3. அரசுக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் அரசுக் கல்லூரிகளைத் தொடங்கி, அரசியல், பொருளியல், வரலாறு, சமூகவியல், மானிடவியல் பாடப்பகுதிகள் கொண்ட பட்டப் படிப்புகள் முதுநிலை மற்றும் ஆய்வுப் படிப்புகளைத் தொடங்க வேண்டும்.
4. பல்கலைக்கழக நிதிக்குழு, எல்லாக் கலை – அறிவியல் கல்லூரிகளுக்கும் துறைவாரியாக 10 இலட்சம் வரை ஆய்வுத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி உள்ளது. இதனை எல்லாக் கல்லூரிகளிலும் உள்ள தமிழ்த் துறைகள் உட்பட எல்லோரும் அந்தந்த மாநில மொழி அறிவியல் புலங்களில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளத் தூண்ட வேண்டும்.
5. அவ்வகையில் - அந்நிதியைப் பயன்படுத்தி – தமிழ்ச் சூழலில் உடனடியாக மொழிபெயர்க்கப்பட வேண்டிய நூல்களை ஒரு மூன்றாண்டுத் திட்டத்தில் முழுமையாக மொழி பெயர்க்க வேண்டும்.
6. தொடக்க, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தேவைகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்யவேண்டும். "அனைவருக்கும் கல்வித்திட்டம்" செய்ய முயல்கிறது. மாநில அளவிலும், ஊர்தோறும் ஒரு தன்னார்வ அமைப்பு இவற்றைக் கண்காணித்து ஊக்குவிக்க வேண்டும். இராசகோபாலன், வசந்தி தேவி முதலியோர் கொண்ட 'கல்வி' அமைப்பு இதனை முன்னெடுத்து வருகிறது; நாமும் அவர்களோடு இணைந்து பணியாற்றலாம்.
7. முப்பத்தைந்து வயதிற்கு உட்பட்டவர்களைப் படிக்கச் செய்யும் வகையில் ரூ.1 விலையில் 4 அல்லது 6 பக்கம் கொண்ட நாளேடு ஒன்றை அரசின் நிதி உதவியோடு தன்னார்வலரின் கொடை உதவியோடு தொடங்க வேண்டும்.
8. மடங்களையும், தொண்டு நிறுவனங்களையும் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முயலவேண்டும்.

9. நூலாசிரியர் ஒவ்வொருவரும் கணிப்பொறி அறிஞர்களை / இளைஞர்களை இணைத்துக் கொண்டு தம் சொந்தச் செலவில் ஒவ்வொரு தமிழ் மென்பொருளை உருவாக்கித் தமிழ் வளர்ச்சியை உறுதிப்படுத்த வேண்டும்.

10. மது உற்பத்தி ஆலைகளில், 'மது வெறுப்பு மருந்து' கலந்து, தமிழ்ச்சமூகத்தை மதுக்கொடுமையிலிருந்து மீட்கவேண்டும்.

11. பள்ளிச்சத்துணவைத் தரம் உயர்த்தி, எல்லா மாணவருக்கும், ஆசிரியருக்கும் விரிவுபடுத்துவதன் வாயிலாகப் பள்ளியில் சமத்துவத்தை உருவாக்க வேண்டும்.

12. மையஅரசு, அரசுஊழியர், ஆசிரியர்களுக்கு, ஆறாவது ஊதியக் குழுவை ஏற்படுத்தியுள்ளது. மைய, மாநில அரசு ஊழியர் அனைவருக்கும் ஆண்டுதோறும் ரூ.2000 மதிப்பிற்கு கைத்தறி மற்றும் கதர்த் துணிகளும், ரூ.2000 மதிப்பிற்கு நாள்தோறும் ஓர் இளநீர் அல்லது இயற்கை வேளாண்மையில் உற்பத்தி செய்த காய்கறிகளும் ரூ.2000 மதிப்பிற்குப் புத்தகங்களும் ஊதியத்தோடு வழங்கும் வகையில் ஊதிய மறு சீரமைப்பு அமைய வேண்டும்.

13. இவை போன்ற கருத்துக்களை – மாநில அளவில் - நாடு தழுவிய அளவில் அறிஞர்குழு ஒன்று நேரடியாகத் தொடர்புடைய அமைச்சகங்கள், தலைமை அமைச்சர், முதலமைச்சர்களிடம் எடுத்துரைத்து வலியுறுத்த வேண்டும். அதற்கான அமைப்பை நாம் தொடங்கலாம்.

19. தமிழ் மொழி, இன, நாட்டின் எதிர்காலம் ?

அ. அருட்செல்வன்

1. தமிழ் மொழி, தமிழினம், தமிழ், தமிழ்நாடு இம்மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பானவை. ஒன்றின் ஆக்கமும், அழிவும் ஏனைய இரண்டின் ஆக்கத்திற்கும் அடிகோலுபவை. எனவே இம்மூன்றின் தற்போதைய நிலை, நேற்று வரை தமிழினம் எப்படிச் செயல்பட்டது என்பதன் எதிர்வினையே. நாளை இம்மூன்றும் எப்படி இருக்கும் என்பது இன்று தமிழினம் எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பொறுத்ததே.

வரலாற்றை நோக்குங்கால், தமிழே உலக முதல்மொழி என்பதும், இந்தியத் துணை கண்டம் முழுமையும் தமிழே பேசும் மொழியாக இருந்தது என்பதும் சிந்து சமவெளி நாகரிகம் என்பது தமிழர் நாகரிகமே என்பதும் தெளிவான உண்மை. பாவாணர் மொழி ஆய்வும், அம்பேத்காரின் வரலாற்று ஆய்வும் இவற்றை உறுதி செய்கின்றன. இந்தியா முழுக்க பேச்சு மொழியாக இருந்த தமிழ்மொழி வடவேங்கடம், தென்குமரி கிழக்கும், மேற்கும் கடல் என்ற எல்லையிலும் சுருங்கி இன்றைய தமிழ்நாட்டில் மட்டும் மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறது. அறத்தான் வருவதே இன்பம் என்ற பண்பாட்டு நிலை வீழ்ச்சி அடைந்து, எப்படியும் பொருள் தேடலாம்; அதைக் கொண்டு ஐம்புல இன்ப வழிப்பட்டு எப்படியும் வாழலாம் என்று தமிழினம் தடுமாறிக் கொண்டு இருக்கிறது.

2. இதற்கான காரணங்கள்:

1) சமக்கிருதம் என்ற செயற்கை மொழி உருவாக்கப்பட்டு, எமது, கம்மம், மதங்கம் போன்று எண்ணற்ற சொற்கள் மருது, க்ராமம், ம்ருதங்கம் என்று உருமாற்றம் செய்யப்பட்டு மீண்டும் தமிழில் மிருது, கிராமம், மிருதங்கம் என்று அரங்கேறி தமிழ் மொழி சிதைக்கப்பட்டதும் அல்லாமல், பல புதிய மொழிகள் தோன்றவும் சமஸ்கிருதம்

காரணமானது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கனக விசயர் தமிழைப் பழித்தார்கள் என்பதற்காக சேரன் செங்குட்டுவன் அவர்கள் தலையில் இமயத்தில் இருந்து கல் ஏற்றி வந்து கண்ணகி கோவில் கட்டினான்; அந்தச் சேரன் ஆண்ட சேரலம் இன்று கேரளம் ஆகி கி.பி. 14ஆம் நூற்றாண்டு அளவில் மலையாளம் என்ற மொழி, சமஸ்கிருதக் கலப்பால் தோன்றி, தமிழ் மொழி வழங்கும் எல்லையும் சுருங்கி மலையாள நாடாகி விட்டது.

ஒரு மொழியை எவ்வளவு பேர் பேசுகிறார்கள், எப்படிப் பேசுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அது எப்படி வாழ்கிறது என்பது உறுதி செய்யப்படுகிறது. *இன்று 60 கோடிப் பேரால் (மக்கள் தொகைப் பெருக்க அளவில்) பேசப்பட வேண்டிய தமிழ்மொழி எட்டு கோடிப் பேரால் தான் பேசப்படுகிறது* என்பதோடு, ஆங்கிலக் கலப்பின்றிப் பேச முடியாது என்ற நிலைக்கும் போய்க் கொண்டிருக்கிறது. இது தமிழ் என்றும் வாழும் மொழி என்பதற்குச் சான்று ஆகாது.

2) தினமலர் போன்ற பார்ப்பன மற்றும் பார்ப்பன அடிவருடி நாளிதழ்கள் வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களையும் அழிக்கும் நோக்கில் செயல்படுகிறது. பிரமோஷன், பெயிலியர், நோ போன்று எண்ணற்ற சொற்களைத் திட்டமிட்டுக் கலந்து தமிழை அழிக்கிறது. தொலைக்காட்சியில் திட்டமிட்டு தமிழ் அழிப்புச் செய்யப்படுகிறது. (சன் தொலைக்காட்சி போன்ற நிறுவனங்களில் பார்ப்பனர்களே பதவி பெற்று இந்த வேலையைத் துணிந்தும், விரைந்தும் செய்கின்றனர்). வானொலியும் இதற்கு விலக்கல்ல; திரைத்துறையும் இதற்கு விலக்கல்ல.

3) தமிழ் நாட்டு ஆட்சியும், பிறமொழிக்காரர்களின் ஆதிக்கத்தில் அகப்பட்டு எங்கும் தமிழில்லை, எதிலும் தமிழில்லை என்ற நிலையில் உள்ளது. தமிழ்நாடு மைய அரசின் வல்லாண்மைக்கு உட்பட்டு இந்தி மொழியின் வல்லாட்சியும் தமிழை அழிக்கிறது. இந்து மதம், இசுலாம் மதம் போன்ற மதங்களுக்கு ஆட்பட்டு சமக்கிருதம், அரபுமொழிச் சொற்களை தமிழுடன் தயங்காமல் கலக்கின்றனர். நீதித்துறையில் பிறமொழிக்காரர்களின் தலைமை, தமிழை நீதிமன்றத்திலும் புறக்கணிக்கிறது.

4. வணிக விளம்பரங்களில் Full Talk Time, Textiles போன்று மொழிக்கலப்பு அளவின்றிச் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டின் அடித்தட்டு மக்களும் ஆங்கிலம் கலந்து பேசுவதே நாகரிகம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். தமிழர்களில் பணம், பதவி, புகழ் இவற்றில் உயர்நிலை எய்துபவர்களுடன் பார்ப்பனர்கள் இனக் கலப்பு செய்து அவர்களைப் பார்ப்பன அடி வருடிகளாக்குவது தொடர்ந்து நடைபெறுகிறது.

3. தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வின்மை

1. தமிழர்கள் தங்களை இழந்தும், பரந்த மனப்பான்மையுடன் பிற மொழியினரிடம் உறவு பாராட்டுவார்கள். இதனால் பிறமொழிக்காரர்கள் தமிழ்நாட்டில் உரிமையோடு முதலாளிகளாகவும், அதிகாரிகளாகவும் வலம் வரமுடியும். ஆனால் தமிழர்கள் வாழும் பிறநாட்டிலோ, மாநிலங்களிலோ அடிமையாகத்தான் வாழ்கிறார்கள். எனவே எங்கு வாழ்ந்தாலும் அடி, உதைக்குத் தப்பமுடியாமல் அடங்கி வாழ்கிறார்கள்;
2. மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போது குமரி, நெய்யாற்றின் கரை, செங்கோட்டை, திருப்பதி வெங்காலூர் (பெங்களூர்), கோவார், சித்தூர், காளத்தி (காளகஸ்தி), தேவிகுளம், பீர்மேடு என்று பல தமிழ்ப் பகுதிகளை இழந்தோம். தேவி குளம், பீர்மேடு இன்று நம்மிடம் இருந்தால் முல்லைப் பெரியாறு சிக்கலே இல்லை.
3. தமிழ் இன உணர்வுள்ளவர்கள் தமிழ் நாட்டை ஆட்சி செய்யாததால் முல்லைப்

பெரியாறு, காவிரி, தமிழ் ஈழம் போன்ற சிக்கல்களில் தமிழர்களை ஒன்றுபட விடாமல் பிரித்து, இந்தச் சிக்கல்களால் தமிழினத்திற்கு பெரிய இழப்பு ஏற்பட இருப்பதை உணர விடாமல் செய்கின்றனர்.

4. *பணம், பதவி, விலைமகளிர் போன்றவற்றில் ஆசை கொண்டு தமிழர்கள் எளிதில் விலை போகின்றனர். தமிழ்நாட்டு ஆற்றுமணலைக் கேரளாவுக்கு பணஆசையால் கடத்துகின்றனர். தேவகவுடா தலைமை அமைச்சர் ஆனவுடன் காவிரி நடுவர் முகர்ஜியை வீட்டுக்கனுப்பினார். ஆனால் தமிழர்கள் பதவிக்காக தமிழ்நாட்டு உரிமையைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.*

5. ஆங்கிலம் படித்தால்தான் வேலை கிடைக்கும் என்று மாணவர்கள் திசை திருப்பப்படுகிறார்கள். இதனால் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பிலும் பிற மாநிலத்தவர் இடம் பிடிப்பதை தமிழக மாணவர்கள் உணரவில்லை. மைய அரசின் தேர்வாணையத்தால் (UPSC) தேர்ந்தெடுக்கப்பட்ட 18 தமிழர்கள், கர்நாடகாவில் AG AUDIT பணியில் சேர்விடாமல் தடுக்கப்பட்டதை இங்குள்ள ஆட்சியாளர்களும் பெரிதுபடுத்தவில்லை. மாணவ உலகமும் கண்டுகொள்ளவில்லை.

6. அமெரிக்காவின் கோலா, தூத்துக்குடி ஸ்டெர்லைட் போன்றவற்றிற்கு பிற மாநிலங்களில் இடம் பிடிக்க முடியாமல் திணறினார்கள், திணறுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் கோலாவின் நீர்த் தேவைக்காக கங்கை கொண்டானிலும் (நெல்லை) காற்றை மிகவும் மாசுபடுத்தும் ஸ்டெர்லைட்டுக்காக தூத்துக்குடியிலும் இடம் பிடித்துள்ளார்கள்.

7. சாதி உணர்வுக்கு முதன்மை கொடுத்து, தமிழர்களே ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளுதல் இதை வளர்க்கும் போக்கில் அரசியல்வாதிகள் மதவாதிகள் நடந்து கொள்வதை உணர்ந்து கொள்ளாத மடமையில் தமிழர்கள் இருக்கிறார்கள்.

8. *இசை, கணியம் போன்ற துறைகளில் முன்னணியில் இருந்த பாணர், வள்ளுவர் போன்ற தமிழ்க் குலங்களிடமிருந்து அக்கலைகளைக் கற்று பின்பு அவர்களையே தாழ்த்தப்பட்டவர்கள் ஆக்கினார்கள் பார்ப்பனர்கள்.*

9. பார்ப்பனர்கள் அரசர்களை மது, மாது போன்றவற்றில் மயங்கச் செய்து, பார்ப்பனப் பெண்கள் வழி அரசர்களை தங்கள் விருப்பத்திற்கு ஆள வழி செய்தார்கள். இதை எதிர்த்தே பெண் வழிச் சேரல், வரைவின் மகளிர் போன்ற அதிகாரங்களை திருக்குறளில் திருவள்ளுவர் படைத்தார்.

10. இன்றும் ஆர். எஸ். எஸ். போன்ற இயக்கங்கள் மதத்தின் பெயரால் விளக்குப் பூசை என்று பெண்களையும், மதவெறி ஊட்டி இளைஞர்களையும் அரசியல் அடிமைத்தனத்திற்கு இட்டுச் செல்வதை தமிழகம் தடுக்கவில்லை. தடுப்பதாகச் சொல்லி இயக்கம் கண்டவர்களும் தங்கள் வீட்டுப் பணப் பெட்டிகள், நிரம்புவதையே குறியாகக் கொண்டுள்ளார்கள்.

4. தமிழ்ப் பண்பாட்டு வீழ்ச்சி

1. வந்தாருக்கும், பார்ப்பனர்களுக்கும் அடிமையாக இருப்பதிலும், அவர்களுக்கு அடியாளாக இருப்பதிலும் மகிழ்ச்சி.

2. தன் இனத்தவரிடம் பொறாமை கொண்டு உட்பகை வளர்த்து தன் இனத்தவரையே காட்டிக் கொடுத்தல். (சேர, சோழ, பாண்டியர் காலத்தில் இருந்து இது தொடர்கிறது.

இதை எண்ணியே இளங்கோவடிகள் தமிழர்களின் ஒற்றுமை கருதி சிலப்பதிகாரம் செய்தார்.)

3. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற செய்திகளிலும், காட்சிகளிலும் தமிழர்கள் ஈடுபாடு கூடிக் கொண்டே போகிறது.
4. தவறான வழிகளில் பணம் சேர்த்தாலும் தவறில்லை. மாட்டிக் கொள்ளாமல் இருந்தால் போதும் என்ற மனப்பான்மை வளர்ந்து விட்டது.
5. நான்கு இளைஞர்கள் கூடினால், குடித்துக் கூத்தாடுவது இன்று திருமணம் போன்ற சடங்குகளிலும் இயல்பான காட்சியாகி விட்டது. 6. AIDS என்ற பால்வினை நோய் தமிழ்நாட்டில்தான் அதிகம். திருவள்ளுவர் "செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமையானும் கெடும்" என்றார். தமிழர்கள் கெடுவது இந்தக் குறளுக்கு சரியான ஓர் எடுத்துக்காட்டு. *ஆர். எஸ். எஸ். இயக்கம் போல் வீடுதோறும் இயங்கி தமிழர்கள் விழிப்புணர்வு அடையப் பாடுபடத் தவறினால் இன்னும் 50 ஆண்டுகளில் தமிழ்மொழியும், தமிழினமும், தமிழ்நாடும் இல்லாமல் போவதுடன் திருக்குறளும், சிலப்பதிகாரமும் மற்றும் தமிழ் மொழி இயக்கங்களும் கண்காட்சிப் பொருளாவது தவிர்க்க முடியாத ஒன்று.*

20. தமிழ் நாகரீத்திற்கு அழிவெண்பது இல்லை ?

பேரா. முனைவர். இர. குழந்தைவேலு

தமிழக மக்களும் உரிமை பெற்று விழித்தெழுந்த இக்காலத்தில், இங்குக் குடியரசு விளைந்தது. கற்றவர் மிகுந்த காலம் இது. இக்காலத்தில் தமிழோடு தமிழ் நாகரிகத்தைக் குறித்துக் கற்றவர் ஒவ்வொருவரும் எண்ணியே ஆகவேண்டும் என்னும் ஒரு கருத்தினைத் தமிழறிஞர் ஞானி சொல்ல வந்தார். அவரது நல்ல எண்ணம் வீணாகாது. தமிழ் நாகரிகம் என்பதும், தமிழ்ப் பண்பாடு என்பதும் இந்நாளில் தமிழ் மொழி என்னும் வடிவங் கொண்டுள்ளது. இங்குப் பண்பாடோ, நாகரிகமோ தனித்த ஒருவர் பண்பாடு, ஒருவர் நாகரிகம் என்று பேசப் பெறுவதில்லை. அவற்றை ஒரு நாட்டோடும் ஓர் இனத்தோடும் இணைத்துச் சொல்லும் போக்கே உண்டு. பண்பாட்டை நாகரிகம் எனக் குறிப்பிடும் ஓர் இடம் குறளில் (580) காணப் பெறுகின்றது.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்".

இங்கே பகைவர் மனமும் நோவாதவாறு வாழும் இரக்கம் நிறைந்த பண்பாட்டையே நாகரிகம் என்று குறள் குறிப்பிடும் குறிப்பே தோன்றுகின்றது. தமிழ்நாட்டு நாகரிகத்தில் பிறந்த மக்களுக்குத் தம் தமிழை முதலிடத்தில் இருப்பச் செய்ய வேண்டும் என்ற முதற் கடமை இருக்கின்றது. அதனாலே தமிழும் நாகரிகமும் வருங்காலத்தில் வாழும். இங்கே அவ்விரண்டும் வீழும் என்று ஒருவர் மனமுடைதற்கு இடம் இல்லை.

தமிழ் வளர்ந்து வாழும் நாடே தமிழ்நாடு. தமிழகத்திற்கு என்று தனித்ததொரு நாகரிகம் உண்டு. தமிழ் இலக்கியப் பண்பாட்டோடு வளமும் கண்டது. அதுவே அரசியல் மொழியாக வளர்ந்து வந்து நிலைக்கும். இவ்வாறெல்லாம் உலகம் போற்றத்

தமிழோடு நாகரிகம் பெருமை பெறும். இங்குக் கட்டுரையிலிருந்து எண்ணிப் பார்த்தற்குச் சில கருத்துக்கள் இருக்கின்றன.

1) "தமிழ் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை"

தமிழ் பல்வளம் படைத்தது. அது பல மொழிகளுக்கும் தாய் என்னும் பழம் பெருமை கொண்டது. ஆயினும் அது பொதுமக்களால் வாழ்வது என்பது உண்மை. அரசியல் வழி, மக்கள் வழி, அரசியல் மொழியே மக்கள் மொழி. தமிழ் அரசியல் மொழியானால், அது வருங்காலத்தில் வாழும். இங்குக் கல்லூரிகளிலும் அதுவே கற்பிக்கும் மொழியாகும் காலத்தில், கற்போருக்கு வளரும் அறிவோடு வளரும்.

2) "தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்குள் இடம் பெறுகிற வருண முறையை எதிர்க்கவில்லை"

உரையாசிரியர்கள் முதல் நூலாசிரியருக்கு நிகராகும் எழுத்து வன்மை, படைக்கும் வல்லமை எல்லாம் பெற்றவர்கள். ஆயினும் அம் முதல் நூலாசிரியரைப் பெருமதிப்போடு நோக்கும் நோக்கிலிருந்து வழுவல் அடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. அதனாலே அக்கருத்து எதிர்ப்பில் அவர்கள் ஈடுபட்டு இறங்காது இருந்தார்கள் எனல் வேண்டும்.

3) பகுத்தறிவு இயக்கம் என்றும் தமிழியக்கம் என்றும் நாம் பேசத் தொடங்கினோம். மார்க்சியத்தோடு உறவு கொண்டோம். சமத்துவம், சமதர்மம் ஆகியவை நமக்குத் தேவை. சாதி, மதம் ஆகியவற்றின் ஆதிக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளமுடியும். இத்தகைய உணர்வுகளோடுதான் தமிழர் என நம்மால் தலைநிமிர்ந்து நிற்க முடியுமென நம்பினோம். .. மறைமலையடிகள், .. திரு.வி.க. பெரியார் .. என்று எத்தனையோ பேர் நம்மைப் புதிய மனிதராக்கினர். தமிழர் நாகரிகத்தை மீண்டும் உயிர்ப்பித்தாக வேண்டும் என்ற உணர்வைத் தந்தனர்" *மறைமலை அடிகளார் அருந்தொண்டால், தமிழ் ஓங்கிச் சிறந்திருக்கின்றது. இனி என்றும் அது சிறக்கும் என்ற நம்பிக்கையூட்டுகின்றது.* தமிழ் வழங்கும் இங்கே பேச்சும் எழுத்தும் நல்ல தமிழாக இருக்க அவர் கண்ணுங் கருத்துமாக இருந்து தொண்டு செய்தார்; பண்பாடும் நாகரிகமும் மலிந்த முன்னைச் சங்கநூல்களின் சுவையைத் தமிழ்நாட்டுக்கு உரையோடும் ஆராய்ச்சியோடும் ஊட்டினார்; தனித்தமிழ் இயக்கம் (1916) கண்டார்; வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் குறைத்தோ நீக்கியோ தமிழ்மக்கள் எழுதுதல் வேண்டும் என்றும், பேசல் வேண்டுமென்றும் எதிர்பார்த்தார்; தமிழின் இயற்கைப்படியே அந்த இயற்கை சிறிதும் நலியாமல், அந்நோக்கம் எக்காலத்தும் நிலைக்க, அதனைக் காத்து வளர்க்கும் குறிக்கோளில் வழுவாது நின்று செயலாற்றினார். அம்முறைக்குப் பொருந்தவே அவர் தம் முன்னைத் தமிழ்நூல்களெல்லாம் தனித்தமிழ்த் திருத்தத்தோடு வெளியிட முற்பட்டார். தமிழோடு ஆங்கிலம் வடமொழி எல்லாம் கற்ற அவரது இயக்கம், பிறமொழிப் பகை என்னும் எதிர்மறை நிலையில் அமையவில்லை. இம்முறைகள் எல்லாம் வருங்காலத்தும் தமிழும் தமிழ் நாகரிகமும் வளர்க்கும். அதனாலே அந்நோக்குக்கு அவற்றைப் போற்றுதல் வேண்டும். அவரது தொண்டு முறையினைக் கண்ட தமிழகம், ஓர் உயர்ந்த நாகரிகமுடையது.

அரசியலியக்கங்களில் நிரம்பப் பயின்ற தமிழறிஞர் திரு.வி.க. தாம் சார்ந்திராத கட்சி அரசியலின் எதிர்ப்பிலும், இந்நாட்டில் முன்னர் இருந்த பொருட் பொதுவியத்தைப் பொருட்படுத்தாது இழந்ததால், பின்னாளில் நாகரிகத்தாலும் நாடுநலிந்தது என்று எடுத்துரைத்தார். இத்துறையில் அவருக்கு அறிஞர் சிங்காரவேலர் ஆசிரியர். அதனால்

பொதுவியத்தைக் காந்தியத்தோடு, நடுநிலைப் பண்போடு அவர் இணைத்து ஆராய்ந்து தம் கருத்தறிவித்தார்.

பெரியார் ஈ.வே.ரா.வைக் குறள் கவரவே, அக்குறள் வழிச் சிந்தித்தார். அவருக்குப் பிறப்பினால் ஒருவர் உயர்வோ, தாழ்வோ அளப்பது ஆகாது என்ற எண்ணம் ஏற்பட்டது. அரசியல் சூழலிலும், ஒருவரைக் குறள் பகுத்தறிவிற்கு இயைந்த முறையில் நல்வழிப்படுத்தும் என்றும், உயர்த்தும் என்றும் அவர் உணர்ந்து அளவை நெறியில் உரைத்தார்; உயர்ந்தார்; சென்ற நூற்றாண்டில் இடையில் குறள் மாநாடே நடத்தினார். அறிஞருலகத்தில் அது மலர்ச்சியைத் தோற்றுவித்தது. தமிழக மக்கள் உள்ளத்தில் அவர் ஒரு வழிகாட்டி ஆனார். திரு.வி.க. "தீண்டாமைப் பேயையோட்ட அவர் பட்ட பாட்டை ஆண்டவனே அறிவன்" என்று ஒருமுறை எழுதினார். அந்நாளில் சேரநாட்டுக் கோட்டயம் என்ற மாவட்டத்து வைக்கத்தில் விளங்கும் மாதேவர் கோயிலுக்குள் தாழ்த்தப் பெற்ற தீண்டாதாரும் பிற்படுத்தப்பட்டோரும் நுழைவது அடாதது என்ற தடை இருந்தது. அதனைத் தகர்ப்பதற்கு (மார்ச்சு. 1924) அவர் முதன் முதல் அம்மக்களோடு போராட்டத்தில் இறங்கினார்; அங்குச் சிறைப்பட்டார். திரு.வி.க.நாகரிக வளம் பெருக்கும் அருஞ்செயலாக அதனைக் கண்டார்; 'வைக்கம் வீரர்' என்று ஈ.வெ.ராவைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

4. "இந்திய அரசியலமைப்புச்சட்டம் மக்களுக்கு வழங்குவதாக உறுதியளித்த சோசலிசமும் நாளடைவில் காணாமல் போயிற்று. மதச்சார்பற்ற அரசு என்ற கொள்கை தடம்புரண்டது. குடியாட்சிமுறை உள்ளிருந்தே கடுமையான சீர்குலைவுகளுக்கு உள்ளானது. 1947-ல் இந்தியாவுக்கு வந்து சேர்ந்ததெனச் சில அரசியல்வாதிகள் கொண்டாடுகின்ற அரசியல் விடுதலை, அரைகுறையான விடுதலையாகவும் கூட இல்லை".

அந்நாளில் அரசியலார் ஈ.வே.ரா. 'எத்துணைக் கோடிப் பேர் கொண்டாடினாலும் என் மனச்சான்றுப்படி இந்திய நாட்டுக்கு முழு விடுதலை வரவில்லை. நான் எப்படிக் கொண்டாடுவேன்?" என்று கேட்டவர். அப்பெருவிழாவில் அவரும் கலந்து கொள்ளவில்லை. திரு.வி.க. 'இதுதான் அஞ்சாமை' என்று தமிழ்நாடு வளர்த்த நாகரிகத்தோடு அவரைப் பாராட்டினார். இந்நெறி முறைகளெல்லாம் அஞ்சாது போற்றிப் பாராட்டப் பெறவே இங்குத் தமிழும் நாகரிகமும், வருங்காலத்தும் வாழ்ந்து வளர்ந்தோங்கும் எனலாம்.

இங்கே ஒரு குறிப்பினைக் குறிப்பிடுதல் பொருந்தும். 'குடியாட்சி முறை'யில் குறைசொல்லுதற்கு இடம் ஏற்படவில்லை. குடியரசில் ஒருவருக்குக் கருத்தில் படும் குறைகளைக் களைந்து நீக்கத் தாம் காணும் வழிகளைச் சிந்தித்து விழிப்பாக எடுத்துரைத்தலே வேண்டும். வேறு எவரோ ஆள்கின்றார்கள் என்றும், அதனால் 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்றும் ஒருவர் தம் பொறுப்பினைப் பிறர் மேல் சுமத்துதற்குக் குடியரசில் இடம் என்பது இல்லை. குடியரசில் வேண்டுவது இது. மக்களே ஆள்கின்றவர்கள் ஆதலால், வெற்றியோ தோல்வியோ மக்களதே ஆகும் என்று சொல்லுதல் கூடும். குடியரசைப் பெற்றாலும், அதற்குரியதொரு மனப்போக்கை மக்கள் பெறுதல் வேண்டும்.

5. தமிழகத்தில் அந்நியர் குடியேறுவதை, தொழில் செய்வதைத் தன்கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும்.

தமிழகம் தன் எல்லைக்குட்பட்ட மையஅரசு அலுவலகங்களில் தமிழ்தான் நிர்வாக மொழி என்று செய்திருக்க முடியும். தமிழகத்தின் ஆளுநர், இந்தியஅரசுப் பணியாளர் முதலியவர்களைத் தமிழராகவோ நியமனம் செய்திருக்க முடியும்".

6. ''தமிழ் செம்மொழி என்பதைத் திராவிட மக்கள் என்று நாம் நம்புகிற கன்னடரோ தெலுங்கரோ ஒப்புக்கொள்ளவில்லை. மலையாளம் முதலிய திராவிட மொழிகளுக்குத் தமிழ்தான் தாய் என்பதையோ மூத்த சகோதரி என்பதையோ இவர்கள் ஏற்கவில்லை'' ''மாநிலங்கள் பிரிந்த போது தமிழகம் தன் எல்லைப் பகுதிகளை விட்டுக் கொடுத்திருக்க வேண்டாம் ... தமிழ்நாடு எனத் தனியே உருவான காலத்திலேயே குறைந்த அளவுக்கேனும் தலைமைச் செயலகத்தில் இருந்த மலையாளிகள், தெலுங்கரைக் கேரளத்திற்கோ, ஆந்திராவுக்கோ அனுப்பி இருக்க வேண்டும்''

இக்காலத்தில் பொதுவாகத் தமிழைப் பேசுபவனே தமிழன். தமிழன் பெரிதும் தமிழிலே எண்ணுகின்றான் என்றெல்லாம் ஒரு நடைமுறைப் பொருள் கொள்ளவேண்டும் சூழ்நிலை இருக்கின்றது. 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பது ஒரு பொதுக்கருத்து. இங்கு ஒருவன் நாகரிகமும் நாட்டு நாகரிகமாக முடிவதற்கு இடம் ஏற்படும். ''யாதும்ஊரே யாவரும் கேளிர்'' என்பது இங்குக் காலங்காலமாக வளர்ந்து பண்பட்ட பண்பாட்டுக்கும் நாகரிகத்துக்கும் சான்றாகப் பழந்தமிழகம் கண்ட உண்மை. இந்த உண்மையைச் சிதைப்பது நாகரிகத்துக்குப் பெருங்களங்கமாம். தமிழகம் ஒரு தீவாக வேண்டா. ஏற்படும் சிலவகைப் பிளவினால், செய்யத்தகாதது செய்தார் தமிழர் என்னும் அல்நாகரிகப் பழி தமிழரைச் சாருதற்கு இடம் ஏற்படும். தமிழர்க்குக் கருத்து வேறுபாட்டுப் பொறுமை இழப்பால் எழுந்த ஒரு பகை, நாகரிக வாழ்வைக் கெடுக்கும் பகை ஆதல் வேண்டா. இது பல மொழியினர் வாழும் நாடு.

மாநில மொழியிலேயே ஆட்சி நடந்தால், குடியாட்சி நிலைத்து இருத்தற்கியலும். அதனாலே அண்ணலார் காந்தியார் மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் அமைவது நல்லது என்றார். மொழி வழி நிறைவேறும். இல்லையேல் ஆணையே நிறைவேறும். அப்போது குடியாட்சியோ வல்லாட்சியாகும். நாகரிகக் குலைவேற்படும். இந்த மொழிவழி அமைப்பால் மொழி, நாகரிக வளர்ச்சி எல்லாம் ஆக்கம் பெறும். சாதி என்றும் சமயம் என்றும் மக்களிடையே எழும், மாறுபட்டு வேறுபடும் வேறுபாடுகள் எல்லாம் மக்கள் குருதியில் கலந்து இல்லாததோடு மூளையிலும் பதிந்து நிலைத்து நில்லாது மாறும் இயல்பைக் கொண்டவை. அவ்வாறெல்லாம் மாறும் நிலையில் இல்லாத வேறுபாடு, ஒருவர் தாய்மொழிக்கு உண்டு. எண்ணங்களுக்கு வடிவத்தைத் தரும் அத்தாய்மொழியோ மூளையில் தொடர்பினைக் கொண்டது. அதனாலேயே மற்ற மொழியினரும் தம்மைக் குறித்தே எண்ணலாயினர். அவ்வாறே தமிழரும் மற்ற மொழியினருக்கும் முன்னர் இருந்தே தம் குடி, இரும்பென்னும் நாகரிகம் மலர்ந்த காலத்து மூத்தது என்றும், தம் மொழி முன் தோற்றங்கொண்டது என்றும் எண்ணத்தில் பதித்துப் பழகிவிட்டனர். இதனைத் தடுத்து நிறுத்த முற்பட்டால், தமிழும் நாகரிகமும் நல்வளர்ச்சியில் குன்றும். அதனால் இங்கிருக்கும் மற்ற மொழியினரைப் பிரிக்காது அணைத்துக் கொள்ளும் பரந்த நோக்கப்பார்வைக்கு இடமளித்தலே வேண்டும் என்பது விளங்கும்.

7) ''தமிழர் நெறி, தமிழர் அறம், தமிழர் வாழ்வியல், அரசியல்வாதிக்கு, அந்நியர்க்கு நம்மை, தேசத்தை, மரபை விட்டுக் கொடுக்க முடியாது'' இங்கே மரபென்பது மாறுவது என்பதும், அம்மாறுதல் இன்றேல், வளர்ச்சி இராது என்பதும் நினைவிற்குக் கொண்டு வர வேண்டும் செய்திகளாகும்.

8) ''குறைந்த அளவு அடுத்த பத்தாண்டுகளில் தமிழியல் கல்வி இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்கள் உலக அளவில் பல்வேறு நாடுகளிலுள்ள தலைசிறந்த ஆய்வு நிறுவனங்கள் ஆகியவற்றில் மேற்கொள்வதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்''

இங்கு நினைவிற்குக் கொண்டு வரவேண்டும் செய்திகள் சில இருக்கின்றன. இந்தியாவில் கேரளப் பல்கலைக்கழகத்தில் உஸ்மானியா பல்கலைக்கழகத்திலும் புதுச்சேரியிலும் திருப்பதியிலும் தமிழைக் கற்கும் ஏற்பாடுகள் உண்டு. வெளிநாட்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில், சென்ற நூற்றாண்டில் தொடங்கப் பெற்ற தமிழ்த்துறை இருந்து வருகின்றது. அந்நாளில் சிங்களத்தின் நெருக்கால், திரிக்கோணமலையில் தமிழர் வேறு பல்கலைக்கழகம் அமைக்க முற்பட்ட செய்தி ஒன்று உண்டு.

தமிழ்ப்பல்கலைக்கழகம் என்னும் சிறப்பினைப் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பிறநாடுகளில் தமிழ் வளர்ச்சியினைக் கண்டு, அங்கெல்லாம் அத்தகையதொரு வளர்ச்சியில் ஈடுபட்டுத் தம்மால் ஆன தொண்டினைச் செய்தற்கு அப்பல்கலைக்கழகத்து இணைவேந்தர் கருதித் திட்டம் வகுக்க முற்பட்டார். அப்போது அங்கு இருந்த தமிழ்ப்பேராசிரியர், இந்தியத் துரைத்தனத்தின் ஒப்பந்தத்தோடு வெளிநாட்டு இந்தியத் தூது நிலையங்களுக்கு எழுதினார். அந்நாடுகளில் திட்டங்களோடு ஆராய்ச்சிகள் எழுந்தன. அப்பல்கலைக்கழகங்கள் தமிழின் பெருமை, நாகரிகம் எல்லாம் வளரப் பாடுபட்டு வருகின்றன.

மலேயா பல்கலைக்கழகம் (சிங்கப்பூர், கோலாலம்பூர்), ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் (போப்பையர்), இலண்டன் பல்கலைக்கழகம், பாரீசு பல்கலைக்கழகம், லெனின் கிராடில், சார்லஸ் பல்கலைக்கழகம், அமெரிக்காவில் சிகாகோ பல்கலைக்கழகம், ஏல், பென்சில்வேனியா, கலிபோர்னியா, விஸ்கான்சின், மிசிகன் முதலிய பல்கலைக்கழகங்களில் எல்லாம் தமிழ் ஆய்வுகள் இருக்கின்றன.

9. "தமிழர் நாகரிகம் என்று இனிப் பேசுதற்கு என்ன இருக்கிறது" தமிழும் இல்லை. நமக்கான நாகரிகமும் இல்லை"

10. "தமிழை நாம் சரிவரக் கற்பதில்லை. தமிழாசிரியர்கள் கற்றுக் கொடுப்பதுமில்லை.

தமிழ் இலக்கியத்தின் ஆழம் நமக்குத் தெரியவில்லை. தமிழகம் நம் வாழ்வில் ஊறவில்லை"

11. "தமிழ்க் கல்வியைச் சரியான நெறியில் கொண்டு செல்ல வேண்டும்".

12. "காலமெல்லாம் இப்படித்தான் தமிழ் கற்கிறோம். இலக்கியம், இலக்கணம் என்று கற்கிறோம்".

நம்பிக்கை வாழ வைக்கும். மாணவர் வாழ்விற்காகக் கற்க வேண்டும்; கற்றபடி நடக்கக் கற்க வேண்டும். பலரோடு பேச, எழுதக் கற்றுக் கொடுப்பதே இலக்கணம். தொல்காப்பியத்தோடு பழம் நூல்களைக் கற்றுத் தமிழின் இயல்பறிந்து கருத்து வெளியிடலாம். தமிழின் நரம்பறிந்து அந்த ஆராய்ச்சி துணை நிற்கும். தொல்காப்பியம் கல்லாது எட்டுத் தொகையோ பத்துப்பாட்டோ விளங்காது என்று அறிதல் வேண்டும். இலக்கணங் கற்க 'எதனால் எதை எவ்வாறு' கற்றல் வேண்டும் என்ற எண்ணம் வேண்டும்.

பழந்தமிழ் அறிதற்கு, இக்காலத் தமிழ் அறிதற்கு, இலக்கணக் கொள்கையின் வரலாறு அறிதற்கு, ஒரு மொழியின் வரலாற்றால் அம் மொழியில் ஏற்படும் மாறுதலை வரலாற்று முறையே உணர்ந்து வகைப்படுத்தற்கு, தமிழமைப்பறிதற்கு என்றெல்லாம் வகை செய்து, அதற்காக, எந்த மாணவர்க்கு எது வேண்டும் என்று கண்டு அதற்கு உரியதொரு வகையில் இலக்கணத்தைக் கற்பிக்க வேண்டும் முறையில் கற்பித்தல் வேண்டும்.

இலக்கியத்தைச் சுவைக்க இலக்கணம் வேண்டும் என்று இலக்கணங் கற்பிக்கலாம். இலக்கணம் இலக்கியத்தை ஆள்வதில்லை; இலக்கியமே இலக்கணத்தை ஆள்கிறது.

இலக்கணம் அதற்குத் துணை செய்கின்றது. ஆயினும் இலக்கியத்தை இலக்கியமாக்குவது இலக்கணம் என்று விளக்கஞ் சொல்லிக் கற்பிக்கலாம். இலக்கணத்தில் 'வழாநிலை என்றும், வழுவமைதி என்றும்' காணும் போது, குறிப்பிட்ட ஒரு போக்குத் தவறு என்று கடிவது தகாது என்றும், இங்கு மொழியின் வளர்ச்சியில் இப்போக்கு இவ்வாறு உள்ளது என்று அறிதலே அறிவாகும் என்று கற்பிக்கலாம். ஆராய்ச்சிப் பெரும் பட்டங்களுக்குப் பிறர் துணை இல்லாது, ஆராய்ச்சியாளர்களே 'ஒற்று' என்பதனைக் குறித்த பிழையோ பிற பிழையோ வாராது செம்மையாகத் திருத்தத்தோடு எழுதும் நிலை வளர்தல் வேண்டும். இலக்கணக் கல்வியோடு வல்லாளர் உரைநடை நூல்களைக் கற்பதே இக்குறை குறைதற்கு வழி ஏற்படும். தமிழ் நாகரிகம் இயற்கை. அது குன்றாது முன்னோக்கியே செல்லும்; பின்னோக்கிச் செல்லாது. எதிர்காலத்துச் சோர்ந்த ஏக்கம் வேண்டா. இக்காலத்து இளைஞர் உலகம் மேற்கண்ட நோக்கிலெல்லாம் செம்மை கண்டு, சாதி இல்லை என்னும் கருத்துத் தெளிவோடு உணர்ந்து உரம் பெற்றால், தமிழ் நாகரிகம் மேன்மையால் எதிர்காலம் பெறும்.

21. தமிழ் நாகரீகம் – கிராமியமே

பேரா. மா. நடராசன்

மனித நாகரிகம் பொதுவானது; தமிழ் நாகரிகம் ஆரிய நாகரிகம், கிரேக்க நாகரிகம் முதலிய நாகரிகங்களின் பொதுத் தன்மைகள் மனித நாகரிகம். மனித நாகரிகத்தின் வளர்நிலைகள் தமிழ் நாகரிகத்தின் தாக்கத்தால் நிகழ்பவை. இது வெறும் படிப்போ, வெற்று கருத்தாக்கமோ அல்ல. உலகிலேயே 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்று தான் அல்லாத பிறருக்காகப் பிறரோடு அன்பொழுக வாழ்தல் என்ற பொதுத்தன்மையை இலக்கியத்தில் பதிவு செய்துள்ள இனம் தமிழினம் தானே! காரணம் 5000 ஆண்டுகளுக்கு மேலான தொன்மை உடையது தமிழ் என்பது உலகஅறிஞர்களின் கருத்து. இந்துத்துவவாதிகளின் 'அந்தணர் வரலாறு ஏற்றுக்கொள்ள முடியாத இட்டுக்கட்டல் என்பதை அவர்களே அறிவர்.

இனக்குழுச் சமுதாயம் அரசாக உருவாகிக் கொண்டிருந்த காலகட்டத்து இலக்கியம் தான் சங்கஇலக்கியம். சங்கஇலக்கியம் செவ்வியல் இலக்கியம். சிவன், விஷ்ணு போன்ற பெருந்தெய்வங்கள் பற்றிய குறிப்பு விளக்கங்கள் சங்கஇலக்கியத்தில் காணக் கிடைக்கவில்லை. தொல்காப்பியம் வெறும் இலக்கண நூல் அல்ல. தமிழனின் வாழ்க்கைக்கு இலக்கணம் கூறும் மகத்தான இலக்கியம் என்று சொல்ல முடியும். "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம்" என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. பொய்யும் வழுவும் இல்லாத தமிழ்ச்சமுதாயம் ஆரியர்களின் வருகையால்தான், அவர்களின் தாக்கத்தால்தான் மாறுகிறது. தமிழ் நாகரிகம் சிதைகிறது. இனக்குழுச் சமுதாயத்தின் வழிபாட்டுக்குச் சேயோன், மாயோன், வேந்தன், வருணன் என்ற சிறுதெய்வ நாகரிகம் பரவுகிறது. வெறியாட்டு, குரவையாட்டு போன்ற பண்பாட்டு நெறிகள் பேசப்படுகின்றன. அவர்கள் இயற்கையோடு இயைந்த, சார்ந்த இயற்கையை மதிக்கின்ற நாகரிக வாழ்க்கை வாழ்ந்தனர். அந்த அடிப்படையில் அவர்களின் பண்பாடு அமைந்திருந்தது. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' நிலைபெற்றது. அது சமத்துவத்தையும் சமதர்மத்தையும் தானே வலியுறுத்தும். சமத்துவமும் சமதர்மமும் பெண்ணை மட்டும் இழிவுபடுத்துமா? படுத்தவே படுத்தாது. அதனால் தானே இன்றும் தமிழர்கள் மத்தியில் பெண் தெய்வ வழிபாடும் குலதெய்வங்களாகப் பெண்தெய்வங்களே வழங்கப்படுவதும் இலக்கணநிகழ்வாக மேற்கொள்ளல் சாத்தியமாயிற்று.

சிந்து சமவெளியிலிருந்து தோன்றிய நாகரிகம் அதன் தொடர்ச்சி அப்படியே வளர்ந்திருந்தால் இன்று தமிழ் நாகரிகம் பூரணம் பெற்றிருக்கும். சிதைவைச் சந்தித்திருக்காது. சங்ககாலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் தமிழ்ச் சமுதாயத்தின் நாகரிகத்தில் அரசு அதிகாரம் போன்ற ஆதிக்க அமைப்பு தோன்றிச் செல்வாக்கு செலுத்தியது. அந்தத் தமிழ் நாகரிகத்திற்கு, தமிழ் அறத்திற்கு ஒவ்வாத விஷக்கடிகளைக் களையத்தான் புத்தமும், சமணமும் புகுந்து வளர்ந்தன. விஷமுறிவு மந்திரங்களாக அவை தம்மை உச்சாடனப்படுத்திக்கொண்டன. அதன்விளைச்சலை இளங்கோவிடமும், சாத்தனாரிடமும், ஐம்பெருங்காப்பியங்- களிடமும் மற்றும் ஐஞ்சிறு காப்பியங்களிடமும் காணமுடிகிறது.

சமண, பௌத்தம் ஆரியத்தின் எதிர்நிலைகள், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலக உறவுநிலை, தமிழனின் நாகரிக நிலை. உலகியல் உறவுநிலை வாழ்வுதான் தமிழர் நாகரிகம். பொதுமைச் சமுதாயத்தின் கண்ணாடிகள் தான் தமிழன் இலக்கியங்கள். அதனால்தான் "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான் என்றும், உண்பதுநாழி; உடுப்பவை இரண்டே; அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்" என்பவையும் அட்சயப்பாத்திரப் படைப்பும், தோன்றி, ஒரு விரிந்த உலகம் காட்டப்படுகின்ற செழுமையைத் தரிசிக்கிறோம். அவற்றின் வழி தானே வள்ளலார். பாரதியார் போன்றவர்கள் நமக்கு ஆதர்சமாகிறார்கள். தியாகம், கொண்ட கொள்கையின் வழிநடத்தல், எல்லாமே சமுதாய மேன்மைக்கே என்ற பொதுநிலையைச் சுட்டத்தானே பெரிய புராண நெறிகளும், சுவைகளும், இயற்கையைப் போற்றிப் பாதுகாத்தால் தானே இறைநிலை என்ற ஒரு மகத்தான பேற்றை அடைய முடியும் என்ற இழையோட்டத்தில் ஆன இலக்கியம் தானே சம்பந்தர் பாடல்கள்; அப்பர் கோட்பாடுகள் சுந்தரர் வாழ்க்கை! வறுமையிறு செம்மை என்பதுதான் சங்கப் புலவரிலிருந்து அப்பூதியடிகள் வரையில் வாழ்க்கை. நம் பண்பாட்டின் அடையாளமாகப் படைக்கப்பட்டவர்கள் தானே அவர்கள்! மோசிகீரனாரும் அவருக்குச் சாமரம் வீசி முரசகட்டிலைப் பெருமைப்படுத்திய அரசனும் தமிழன் அறிவை வணங்கி வழிபட்ட தன் பதிவல்லவா? அறிவை வழிபட எங்கு மேன்மையடைகிறதோ, அல்லது நிலவுகிறதோ அங்கு தானே பொதுமை அறம் பண்பாடாகும் நிலை பேறு ஓங்குகிறது என அர்த்தம்.

வேளாண்மையையும், உழவையும் மையப்படுத்தும் பண்பாடுதான் தமிழன் பண்பாடு. அதனால் தான் "வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணான்" என்று புலவர்கள் கூறினர். மனிதனைச் சார்ந்து வாழுகின்ற பசுக்கள், பறவைகள் போன்ற உயிரினங்களை நேசித்து, வாழ்வுக்கு உத்தரவாதம் தந்து, உதவிசெய்து, உதவிபெற்று ஓர் உன்னதமான வாழ்க்கையை உழவன் மேற்கொண்டிருக்கிறான். அதனால் தான் உழைப்பை மதித்து பசுக்களைக் குளிப்பாட்டி விழாவெடுத்து மகிழ்கிறான், மகிழ்விக்கிறான். சூரியனை வழிபடுதல், இடியை வழிபடுதல், மழையைப் போற்றுதல் போன்ற நடைமுறை இயற்கை வழிபாடு மக்கள் மத்தியில் நிலவிய நாகரிகம் என்பதால் தான் இளங்கோவடிகள் படைத்த கண்ணகி "தெய்வமும் உண்டு கொல் சான்றோரும் உண்டுகொல்" என்று பேசியதைக் காணுகிறோம். இதன் அர்த்தம் தமிழர் நாகரிகத்தின் மேன்மையைக் காட்டுகிறது அல்லவா? இந்த அர்த்தங்களைக் கொண்ட தமிழ் நாகரிகத்தை விட்டு தமிழனும் உலகமும் எப்படி விலகமுடியும்? ஆனால் விலகிக்கொண்டிருக்கிற சூழ்நிலை எப்படி உருவாக்கப்படுகின்றன என்பது தான் நம் வேதனை?

22. என்னவெல்லாம் செய்தால் தமிழ் நாகரீத்தைத் தக்கவைக்க முடியும் ?

இ. ஜே. சுந்தர் (எழில்)

தமிழ் நாகரிகம் எது?

கடந்த மூவாயிரம் ஆண்டுகட்கும் மேற்பட்ட தமிழ்ச் சமூக வாழ்வியல் முட்டி, மோதி, எழுந்து, விழுந்து, தவறிழைத்துப் பாடங் கற்று, வாழ்ந்து பயன் கண்ட பழுத்த வாழ்வியல் முறைகளையே தமிழ் நாகரிகம் எனலாம். தமிழ் நாகரிகம் பல நூற்றாண்டுகள் வளர்ந்த தமிழ் மரத்தில் பழுத்த அருங்கனியாகும்! இதன் சுவையும் பயனும் நமக்கு மட்டுமன்றி உலகுக்கே உரியதாகும். தமிழ்மொழி, தமிழ்ச்சூழல் வழியே பெறப்பட்ட இந்த நாகரிகத்திற்கு, தொடர்ந்து ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல்களை ஆய்வதும், அவை கண்டு அஞ்சாது மனம் சோராது நம் நாகரிகத்தின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையான வழிமுறைகளை அமைத்துத் தருவதும் நம் நிகழ்காலக் கடமையாகும்.

தமிழ்ப் பகைவர் யார்?

நம் நாகரிகத்திற்கு அச்சுறுத்தலாக அறைகூவல் விடுக்கும் தமிழ்ப் பகையாக பார்ப்பனியம், உலகமயமாதல், தனியார்மயமாதல், தாராளமயமாதல் என்பன வெளிப்படையாகத் தெரிந்தாலும் இவற்றை விடப் பெரிய பகை நம் உட்பகையே! உலகமயமாதல், தனியார் மயமாதல், தாராளமயமாதல் - இவை இன்றைய உலகப் பொருளாதார வளர்ச்சியில் தவிர்க்க முடியாதக் கட்டாயக் கசப்புகளாகும். இவற்றை உள்வாங்கியே நம் நாகரிகத்தைக் காக்கும் வழிகளைச் சிந்தித்தாக வேண்டும்.

பார்ப்பனியம் பற்றியும், பார்ப்பனர்கள் பற்றியும் தீவிர மறுபரிசீலனை இன்று தேவைப்படுகிறது. *பார்ப்பனர்கள் தமிழின் பகைவர்களாக அன்றும் இன்றும் செயல்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டைக் கூறி நம் உட்பகையை ஓரங்கட்ட முடியாது.* பார்ப்பனர்கள் எந்த அளவு தமிழ்க் கலாச்சாரத்திற்குத் தீங்கிழைத்தார்களோ அதற்கு இணையாகத் தொண்டும் ஆற்றியுள்ளனர் என்ற வரலாற்று உண்மையை மறைப்பது நீதியன்று. வடமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழை மீட்கவும், தமிழில் சிறந்த படைப்பிலக்கியங்களை உருவாக்கவும். தங்கள் வாழ்நாளையே செலவிட்டு தமிழ் மேன்மையை உயர்த்தவும் பங்களிப்பு வழங்கிய பார்ப்பனர்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளதை நாம் மறந்துவிட முடியாது. பார்ப்பனர்களின் பங்களிப்பை நீக்கிவிட்டுப் பார்த்தால் சங்க இலக்கியம் தொடங்கி இன்று வரை பெரிய வறுமை தெரிவதை மறைக்க முடியாது.

வடமொழி கலாச்சாரம் தமிழ் மண்ணில் வேரூன்றப் பார்ப்பனர்கள் மட்டும் காரணமா? தென்கிழக்கு உலகத்தையே ஒரு குடையின் கீழ் ஆண்ட சோழப் பேரரசர்கள் நினைத்திருந்தால் பார்ப்பனியத்தையும், வடமொழி கலாச்சாரத்தையும் அடியோடு அப்புறப்படுத்தியிருக்கலாம்! ஆனால் சோழர்கள் மட்டுமின்றி, சங்ககாலத்திற்குப் பின் அரசாண்ட தமிழ் வேந்தர்கள் அனைவரும் சமயத்திற்குக் காட்டிய அளவற்ற ஈடுபாட்டை, செலவிட்ட பெருந்தொகையைத் தமிழ் மொழி வளர்ச்சிக்கோ, தமிழ் மதிப்பீடுகளுக்கோ அளிக்கவில்லை என்பது தணிப்பரிதாம் துன்பமாகும்!. ஆரியத்தைத் தூக்கி நிறுத்திய பார்ப்பனரல்லாத முடியுடை மன்னரும், குறுநில வேந்தரும், அதிகாரத்தில் உள்ளோரும், *தமிழ் மறையான திருக்குறளை ஒரு தூணில் கூட செதுக்க முன்வரவில்லையே!.*

கடந்த அரைநூற்றாண்டு காலமாய் பார்ப்பனரல்லாதோர் கையில் ஆட்சியும், அதிகாரமும் இருந்ததால், பார்ப்பனரின் செல்வாக்கு பல மட்டங்களில் வீழ்ச்சியடைந்துள்ளதே தவிர, தமிழ் மொழிப் பயன்பாடும், தமிழ் அறமும் உண்மையான வளர்ச்சி பெற்றுள்ளனவா? பார்ப்பனிய எதிர்ப்பு என்பது அரசியல் காரணங்களுக்காக ஒரு காலத்தில் ஊதிப் பெரிதாக்கப்பட்டது. அஃது அவசியமும் கூட. ஆனால் மாறிவரும் இன்றைய சூழலில் நம் சீரழிவிற்குப் பார்ப்பனியத்தையே காரணம் காட்டுவது நம் கையாலாகாத்தனமன்றோ?

தமிழ் உணர்வோடு, தமிழ் நாகரிகத்தை உயர்த்திப் பிடிக்க பல பார்ப்பனர்கள் முன்வரத் தயங்குவதற்கு இந்த பார்ப்பன இனவெறுப்பை முன்னிறுத்தும் திராவிட அரசியலே காரணம். இனவெறுப்புக் கொள்கை தமிழ் நாகரிகத்திற்கும், உலக நாகரிகத்திற்கும் உகந்ததன்று! இதனால் தமிழ் அறிவுலகிற்கும், தமிழ் மண்ணிற்கும் பின்னடைவே நேரும். பார்ப்பனரின் செயல்பாடுகளை எச்சரிக்கையுணர்வுடன் கண்காணிக்க வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, ஆரியத்தை மறுத்துப் பெரியாரியத்தையும் மார்க்சியத்தையும் ஏற்க முன்வரும் பார்ப்பன அறிவு சீவிகளின் வரவை ஊக்கப்படுத்த வேண்டும். தமிழை ஆரியம் சிதைத்த அன்று. அதற்குப் பதிலடியாக ஆரியத்தை நாம் தமிழ் வயப்படுத்துவதே அறிவார்ந்த தீர்வாகும். *நம் ஆற்றலையும், நேரத்தையும் ஆரிய எதிர்ப்பில் மட்டுமே வீணடித்து ஆக்கப்பூர்வமாகச் செய்யவேண்டியதை மறந்து வரும் சூழலில் பார்ப்பனர்களைத் தமிழ் வயப்படுத்தும் வழிகளைச் சிந்திக்க வேண்டும்.*

இன்னொரு புறம் இந்துத்துவ அல்லது மேற்கத்திய மதிப்பீடுகளை முன்நிறுத்தி தமிழை அறவே புறக்கணித்து வாழும் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் நகர்ப்புறங்களில் மலிந்து வருகின்றனர். பார்ப்பனியத்தைக் கடைப்பிடிக்கும் இத்தகைய பர்ப்பனரல்லாதோர் தமிழ்ப் பகைவர்களாக மாறி வருகின்றனர். 'மம்மி' 'டாடி' கலாச்சாரத்தை வீடுகளில் வளர்த்து வரும் இவர்களின் பெருக்கம் தமிழுக்குப் பார்ப்பனியத்தை விட மிகுந்த கேடுபயக்கும். தமிழ்ப் பார்ப்பனர்கள் வெளியே ஆங்கிலம் கலந்த தமிழ் பேசினாலும் வீடுகளில் தமிழையே பயன்படுத்துகின்றனர். 'மம்மி' 'டாடி' என்று பெற்றோரை அழைக்காது, அம்மா, அப்பா என்றே அழகு தமிழில் அழைக்கின்ற பார்ப்பன குழந்தைகளே மிகுதி. இவர்கள் பயன்படுத்தும் உறவுச் சொற்கள் (அகம், அம்மான்சேய், அகத்துக்காரர்) தூய தமிழ்ச் சொற்களாகவே உள்ளன. இதற்கு மாறாக, வெளியில் தமிழ் நெஞ்சங்களாய் காட்டிக் கொண்டு, தமிழால் பிழைப்பும் நடத்திக் கொண்டு வீட்டில் தெலுங்கையும், கன்னடத்தையும் மறவாமல் போற்றிப் பாதுகாப்போருக்கு இங்கு பார்ப்பனர்களைப் போல எதிர்ப்பில்லை! தமிழ் தமிழ் என்று பேசியே ஆட்சிக்கு வந்த திராவிட இயக்கங்கள், தமிழகத்தில் தமிழே படிக்காமல் பல்கலைக்கழக உயர்கல்வி வரை படிக்கும் அவலச் சூழலை இத்தனை நாள் வளர்த்ததற்குப் பார்ப்பனியமா காரணம்? அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதியா காரணம்?

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று அரசு கட்டட உச்சியில் நியான் விளக்குகளை எறியவிட்டு, தமிழ்நாட்டின் தமிழ்த் தெருக்களில் ஆங்கிலப் பெயர் பலகைகளையே முகம் காட்ட உறுதுணை செய்து தமிழ் வீதிகளை அயலகமாக அந்நியப்படுத்தியதற்கு எந்த 'இயத்தைக் காரணம் காட்ட முடியும்? தம் சிறாரை ஆங்கிலப் பள்ளிகளில் 'டை' கட்டி அழகு பார்க்கும் தமிழ்ப் பெற்றோர்கள், ஆங்கிலமே அறிவின் சின்னம் என மயங்கிக் கிடக்கும் பேதமையை வளர்த்து வருவது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமா? *தமிழ் மொழி பேச வெட்கப்படுகிறான் படித்த தமிழன். தமிழ்ப் படித்த தமிழ்ப் பேராசிரியனே தமிழில் கையெழுத்திட கூசுகிறான்! தமிழ்ப்*

பெயர்களைக் கேவலமாக நினைத்து வடமொழியிலும் ஆங்கிலத்திலும் பெயர் வைக்கிறான் பச்சைத் தமிழன். தமிழ் அடையாளத்தை, தமிழ் வாழ்வியலை அழித்தொழிக்க முயலும் இத்தகையோரே தமிழ் நாகரிகத்திற்கு உட்பகையாக விளங்குகின்றனர்.

தமிழ் நாகரிகத்தின் எதிர்காலம்?

460 கோடி ஆண்டுகள் பழமையான உலகில் மனித இனம் தோன்றி 30 இலட்சம் ஆண்டுகளே ஆகின்றன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் தோன்றிய மனித இனம் (இன்றைய மானிடவியல் கருத்து) உலகெங்கும் சிதறி பல்வேறு திசைகளில் பல்வேறு இனமாகக் கிளைத்து பல்வேறு மொழிகள் தோன்றியுள்ளன. மற்ற மொழிகள் மேல் ஆதிக்கம் செலுத்திய ‘தேவமொழிகள்’ உட்பட உலகில் தோன்றிய மொழிகள் பலவும் அழிந்துவிட்டன. நீண்ட நெடுங்காலமாய் இன்னும் அழியாமல் இருக்கும் அதிசயம் தமிழ் மட்டுமே! தமிழையும், அது சுமந்து வரும் நாகரிகத்தையும் பாதுகாக்க வேண்டியது உலக நலனுக்கே உகந்ததாகும்! பல்வேறு இடர்ப்பாடுகளை வென்று காலக்கடலில் எதிர்நீச்சலிட்டு வந்துள்ள தமிழ் மிகுந்த ‘அழிவு எதிர்ப்புச்சக்தி’ கொண்ட ஆற்றல் மிகு மொழியாகும். இதுவரை தப்பிப் பிழைத்த தமிழ் இனிவரும் காலத்திற்கும் இயைந்து கொடுத்து தன்னை நிலைநிறுத்தும் வல்லமை உடையது. எனினும் நம் அசட்டையால் நம் மொழியை காலம் என்னும் பேருருவன் விழுங்கிவிடும் ஆபத்து என்றும் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது. அடுத்து வரும் நூற்றாண்டுகளில் தமிழ் மொழியும் அதன்வழி தமிழ் நாகரிகமும் உயிரோட்டமாய் உலவுவதை உறுதிப்படுத்த நாம் செய்ய வேண்டிய பணிகள் மிகுதி. அவை கீழ் வருமாறு:

1. அடிமை மோகம், தாழ்வு மனப்பான்மை –
அடியோடு அகற்றுக!

தம் தாய்மொழி மேல் தாழ்வு மனப்பான்மை கொள்ளும் நோய் பழங்குடி மக்களிடையே கூட இல்லை. ஆனால் தமிழன் நாகரிகமான இடங்களில் தமிழில் பேசினால் நிர்வாணப் படுத்தப்பட்டது போலக் கூசுகிறான். நமக்குப் பின்னால் தோன்றிய மொழிகளையும், நம்மிடமிருந்து பிரிந்த மொழிகளையும், இலக்கண, இலக்கிய வளம் குறைந்த மொழிகளையும் பேசும் இனத்தவர் தம் மொழியோடு தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு பெருமையாகச் செயல்படுவதை வெளிநாடு சென்றுவந்த நம்மவர்கள் கூட உணரவில்லையே! எழுத்து இல்லாத ஆங்கிலம் உள்ளிட்ட பல ஐரோப்பிய மொழிகளையும், மலாய் மொழியையும் விட தமிழ் எந்த விதத்தில் குறைந்தது என்று இந்த முட்டாள்களுக்குப் புரிவதில்லை! நம் மொழியின் சிறப்பை நம்மவர்க்கே சொல்லிக் கொடுக்க வேண்டிய இழிநிலைக்கு முடிவுகட்ட *தமிழில் பேசுவதும், தமிழில் கற்பதும், தமிழ் இதழ்கள், நூல்கள் ஆகியவற்றைப் படிப்பதும், தமிழில் கையெழுத்திடுவதும் உயர் நாகரிகமாகக் கருதப்பட வேண்டும். கல்வி நிலையங்கள், அலுவலகங்கள், வங்கிகள், அங்காடிகள், வழிபாட்டிடங்கள் முதலான மக்கள் கூடும் அனைத்திடங்களிலும் தமிழ் அறியாத பிற மொழியினர் மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.* மற்றபடி தமிழே எங்கும் இயல்பாகவும், முன்னுரிமையுடனும் பயன்படுத்தப் படவேண்டும். உலகெங்கும் இப்படித்தான் மண்ணின் மொழி பயன்பாட்டில் இருக்கிறது! தமிழகம் மட்டும் ஏன் விதிவிலக்காக வேண்டும்? தமிழனைப் பீடித்திருக்கும் இந்த அடிமை மோகத்தை விரட்டும் மருந்து இதை நடைமுறைப்படுத்தும் தண்டனைக்குரிய சட்டங்களே!.

2. தமிழ் வழிக் கல்வியை எல்லா மட்டங்களிலும் சட்டமாக்குக.

கற்றறியும் கல்வி மொழியே கலாச்சாரத்தைத் தீர்மானிக்கிறது! ஆங்கிலம் வழி கல்வி கற்ற தமிழர்களே தமிழ் நாகரிகத்திற்கு அந்நியமாகிப் போகிறார்கள். தமிழ் இதழ்கள் படிக்க முடியாமல், தமிழ் இலக்கியங்களை நுகர முடியாமல், தமிழர் வரலாறும் பண்பாடும் உணர முடியாமல், ஒரு பெருங்கூட்டம் 'திமிங்கலர்'களாக மாறியதற்குக் காரணம் அண்மைக் காலத்தில் தமிழகமெங்கும் முளைத்துத் திளைத்த ஆங்கிலப் பள்ளிகளின் தாக்கமே! கல்வியின் அனைத்து மட்டங்களிலும் தமிழே பாடமொழியாக விளங்க, தடங்கல் செய்ய முடியாச் சட்டங்கள் இயற்றவேண்டும். ஆங்கில மோகம் உண்டு, ஆனால் ஆங்கில அறிவில்லை என்ற இன்றைய நிலைமாற உலகத் தொடர்பிற்கு ஆங்கிலமும், இந்தியத் தொடர்பிற்கு இந்தியும் கூடவே கற்றுத்தரலாம். தமிழைக் கசடறக் கற்று விட்டு வேறு பல மொழிகளையும் தமிழன் கற்பது அவனுக்கு வலிமை சேர்க்கும்! தமிழ்க் கல்வி கற்ற ஈழத் தமிழரும், தாய்மொழி வழி கல்வி பயின்ற சீனரும், பிற மங்கோலிய இனத்தவரும் தம் பண்பாட்டை இழக்காமல் உலகநாடுகளில் உயர்கல்வியும், வேலைவாய்ப்பும், வணிக வெற்றியும் பெற்றுச் சிறப்பது நம் கவனத்திற்குரியதாகும்.

3. தனி மனிதப் பண்புகளைப் பாடமாக்குக

தமிழரை மலையாளிகள் பாண்டி (மூடன்) என்றும், தெலுங்கர் அரவாடலு (உதவாக்கரை) என்றும், மார்வாடிகள் தீவானாதேசு (பைத்தியக்கார தேசம்) என்று எள்ளுவது நம் சிந்தனைக்குரியது! மலேசியாவின் பெரிய வன்முறை 'தாதா' குழுக்கள் தமிழர்களால் ஆனவை என்பது நமக்குப் பெருமையன்று. தமிழன் குடிகாரன், திரைப்படத் தொலைக்காட்சி மோகம் பிடித்து அலைபவன், தலைமை வழிபாட்டுப் பித்தன், ஒற்றுமையில்லாதவன், சாதிவெறி பிடித்தவன், மூடநம்பிக்கைகளில் மூழ்கித் திளைப்பவன், ஊழல் நேயன், நேரஉணர்வு அற்றவன், பொதுத் தூய்மை அறியாதவன், குடிமைப் பண்புகளுக்குப் புறம்பானவன் முதலான குற்றச்சாட்டுகள் நம் சமூகத்தைத் தலைகுனிய வைக்கின்றன. தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தொடக்கநிலைக் கல்வியிலிருந்து மானிடப் பண்புகளும், உயர்பழக்கவழக்கங்களும் கட்டாயப் பாடங்களாக்கப்பட்டு, கடும் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும். இதன் விளைவாக திருக்குறளும், நம் வாழ்வியல் இலக்கியங்களும் வற்புறுத்தும் வழியில் மாந்தநேயனாய், குடிமைப் பண்பாளனாய் தமிழன் வாழ்ந்து காட்டும் சூழலை வரவழைக்க வேண்டும். தமிழ் நாகரிக வெளிப்பாடு தமிழன் வாழ்வில் தெரியவேண்டும். இதுவே நம்மை அழிக்க முடியா அரணாகும். உயர் வாழ்வியல் நோக்குகளும், மானிடப்பண்புகளும், ஒற்றுமையுணர்வும் உள்ள இனத்தை யாரும் வெளியிலிருந்து வீழ்த்த முடியாது என்பதற்கு அயலவர் யார்க்கும் இதுவரை அடிபணியா சப்பானும், பிரிட்டனும் சாட்சி!.

4. தமிழும் தமிழரும் வல்லமை பெறுக

உலகின் மூத்த குடிமகன், உலக நாகரிகத்தின் முன்னோடியானவன், உயர்தனிச் செம்மொழிக்கு உரிமையாளன், கட்டடக்கலை, சிற்பம், மருத்துவம், இசை, வேளாண்மை முதலானவற்றில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சாதனை நிகழ்த்தியவன் ஆகிய பழம்பெருமைகளால் மட்டும் இன்றைய உலகில் நம் நாகரிகத்தைக் காப்பாற்ற முடியாது. இன்று தமிழன் யார் என்பதே கேள்வி! நம் பொருளாதாரமும், செயல்திறனும், கல்விநிலையும், இன்றைய நம் மொழி ஆற்றலும் உலகினர் பார்வையில் எவ்வாறு உள்ளன என்பதே நம் நாகரிகத்தை நிலைநிறுத்தும். தமிழர் ஆட்சி செய்யும் தமிழ் நாட்டின் பொருளாதாரத்தில் தமிழரின் பங்கைவிட மற்றவர்களின் பங்களிப்பே மிகுதி.

வெளிநாடுகளில் தமிழன் உழைக்கும் எடுபிடியாகவும், கணினி கூலியாகவுமே பெரும்பாலும் உலா வருகிறான். தமிழ் நாட்டவரின் தனிநபர் வருவாய் ஆண்டுக்கு ரூ.6205/- என்ற அளவில் உள்ளது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பெருங்கூட்டம் இன்னும் நிமிரவில்லை. எழுத்தறிவு பெறாத தமிழக மக்கள் எண்ணிக்கை ஏறத்தாழ ஒன்றரைக் கோடிக்கு மேலாக உள்ளது. (26.53%) 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்று புகழ்பாடும் நம்மை விட 9 இந்திய மாநிலங்கள் மிகுந்த எழுத்தறிவு பெற்று மிளிர்கின்றன. தமிழில் அனைத்துக் கல்வியையும் வழங்குமளவுக்கு அறிவுநூல்களை நாம் உருவாக்கவில்லை.

பிழையற்ற மொழிப் பயன்பாடு பற்றி இங்கு கவலைப்படுவோர் குறைவே. தமிழக ஆங்கில ஏடுகளில் இலக்கணப்-பிழை நேர்ந்தால் அலறித் துடிப்போர், தமிழ் நாளேடுகளில் அன்றாடம் பத்திக்குப் பத்திக் காணப்படும் இலக்கணப் பிழைகளைப் பொருட்படுத்துவதில்லை. மொழிப் பயன்பாடு மாறி வரும் சூழலில் புது இலக்கண நூல்கள் எழுதப்பட வேண்டும். நன்னூலார் காலத்திற்குப் பின் தமிழில் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி அனைத்துத் துறைத் தமிழ் பயன்பாட்டாளர்களும் ஒப்பும் வண்ணம் புது இலக்கண நெறி உருவாக வேண்டும். இல்லையேல் தமிழிலிருந்து புதுமொழிகள் மீண்டும் பிரியும் ஆபத்து நேரக்கூடும். தமிழின் அனைத்துத் தகவல்களையும் தெற்றென அறிய தமிழ்க் களஞ்சியமும், உலக அறிவைத் தமிழன் உடனடியாகப் பெற முழுமையான அறிவுக் களஞ்சியமும் குறைவின்றி முற்றாக நூல் வடிவிலும், இணையத்திலும் வெளிவர வேண்டும். அனைத்து அறிவும் தமிழ் வழி பெறுதற்கு ஆவன செய்தால்தான் தமிழ் வழிக் கல்வி வெற்றி பெறும். அறிவாலும், பொருளாதாரத்தாலும் வல்லமை பெறாத சமூகத்தின் நாகரிகம் எதிர்காலமற்றதாகி விடும். எனவே நாம் இவ்விரு வல்லமையைப் பெற்றே தீரவேண்டும்.

தாராளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதல் முதலான தவிர்க்க முடியாச் சூழல்களில் நம்மை விட மிகுதியாக சிக்குண்ட இஸ்ரேலிய யூதர்களும், அரேபியரும், சப்பானியரும் தம் நாகரிகத்தின் தனித்தன்மை இழக்காமல், எவ்வாறு பாதுகாத்துக் கொள்கின்றனர் என்ற நுட்பத்தை நாமும் அறிந்து நம் வசப்படுத்த வேண்டும்.

5. தமிழ் பற்றி உலகம் அறியச் செய்க

தமிழை விடக் குறைவாகப் பேசப்படும் வியட்நாமி, தாய் (தாய்லாந்து), எபிரேய (இஸ்ரேல்), போலீஷ் (போலந்து), டச்சு (ஹாலந்து) மொழிகளைப் பற்றி அறிந்திருக்கும் உலக மாந்தர் பலரும் தமிழ் என்று ஒரு மொழி இருப்பதையே அறியார். அப்படி அறிந்த பலரும், தமிழ் மொழி ஸ்ரீலங்காவில் ஈழத்தமிழரால் பேசப்படும் மொழி என்றே எண்ணுகின்றனர். இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் இதுவும் ஒன்று என்ற அளவுக்கு, தமிழ் பற்றி அறிந்திருப்பவர் சிலருண்டு. உலக நாடுகளில் தமிழ் பற்றிய அறிவு இப்படி இருப்பது கூட வியப்பில்லை; வட இந்திய மாநிலங்கள் பலவற்றில் வாழும் பாமர மக்களிடம் தமிழகத்தில் பேசப்படும் மொழி எது என்று கேட்டால் 'மதராசி மொழி' என்றே பதிலளிக்கிறார்கள். அப்படித் தமிழ் பற்றி அறிந்த படித்த வடஇந்தியரிடம் திருவள்ளுவர் யார் என்று கேட்டால் விழிக்கிறார்கள்! இதுவே வெளியில் தமிழ் பற்றிய உண்மை நிலை. 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை' என்று நூற்றாண்டுகளுக்கு முன் பாரதி பாடியதையே இன்னும் திரும்பச் சொல்ல வேண்டியுள்ளது. ஆற்றல் இல்லாத இனத்தின் மொழிக்கு எப்படி விளம்பரம் இருக்கும்? தம் விடுதலைப் போராட்டச் செயல்பாடுகளால் உலகின் கவனத்தைக் கவரும்

ஈழத்தமிழர்களின் ஆற்றலால் தானே உலகஅரங்கில் முதன்முறையாகத் தமிழ் ஓரளவு அறிமுகமாகி வருகிறது. தமிழனுக்கு ஒரு தனிநாடு உருவாகும் போதுதான் உலக அரங்கில் தமிழ் பற்றியும், தமிழ் நாகரிகம் பற்றியும் முற்றாக அறியவரும். தமிழ் நாகரிகத்தின் எதிர்காலம் உலகநாடுகள் நம்மை அங்கீகரித்துப் பாராட்டுவதில்தான் இருக்கிறது.

6. எதிர்காலம் : அயலகத் தமிழர் கையில்!

தமிழ் நாட்டில் மட்டுமே தமிழ் பேசும் மக்கள் இல்லை. ஆறுகண்டங்களில் பரவியுள்ள உலகத் தமிழர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 8 கோடி! ஆஸ்திரேலியா கண்டத்தின் மக்கள் தொகையைப் போல நாம் நான்கு மடங்கு எண்ணிக்கையுடையவர்கள். தமிழகத்துத் தமிழர் இதில் 5.5 கோடியினர் மட்டுமே. பிற இந்திய மாநிலங்களில் உள்ள 1.10 கோடி தமிழர் நீங்கலாக எஞ்சியுள்ள 1.40 கோடி தமிழர்கள் பலரும் உலகின் 40க்கு மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்றனர். அவர்களில் பலரும் இந்தியர்கள் அல்லர். இதில் பெரும்பான்மையினர் ஸ்ரீலங்கா, மலேசியா, தென்ஆப்பிரிக்கத் தமிழர்கள். தமிழ் நாகரிகத்தைப் போற்றிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக எதனையும் செய்ய சித்தமாயிருப்பவர்களில் இவர்களில் பலருண்டு. *தமிழன் என்பதில் பெருமையும், தமிழ் நாகரிகத்தில் ஆழ்ந்த பற்றும் கொண்ட இவர்களின் பங்களிப்பு தமிழின் எதிர்காலத்திற்கு மிகவும் நம்பிக்கை தருவதாகும்.* ஒருசமயம் தமிழ் நாகரிகம் அது தோன்றிய மண்ணில் பாதிப்புக்கு உட்பட்டாலும், அதைக் கட்டிக்காத்து அடுத்த தலைமுறையினரிடம் சேர்க்கும் அயலகத் தமிழர்களின் மொழியுணர்வும், இனப்பற்றும், வல்லமையும் தமிழுக்கு நல்லதோர் எதிர்காலத்தை வழங்கியே தீரும்.

23. உலக நாகரீகத்தை முதலில் காப்பாற்றுங்கள் – பிறகு தமிழ் நாகரீகம் பற்றிப் பார்க்கலாம்

பேரா. க. பூரணச்சந்தரன்

1. தமிழ் நாகரிகத்தின் எதிர்காலம் பற்றி மிகவும் கவலைப்பட்டு ஞானி எழுதியிருக்கிறார். பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்கள் கொண்ட அக்கட்டுரையில் பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அவற்றைப் பகுத்துப் பார்த்தால்,

1. உலக இந்திய நாகரிகத்திற்குத் தமிழகத்தின் பங்கு ஏற்றுக்கொள்ளப்படாத நிலை.
2. இந்தியாவில் தேசிய நலனுக்கு உகந்த கூட்டாட்சிகள் அமையாத நிலை – தமிழ்த் தேசியம் உருவாகாத நிலை.
3. ஆங்கிலத்தின் ஆதிக்கம் / அதன் பின்னணியிலுள்ள உலகமயமாக்கல்
4. செம்மொழிப் பிரச்சினை
5. ஆதிக்கத்தை எதிர்க்கும் அரசியலும் அதனோடு இணைந்த தமிழ் மேம்பாடும் என்ற தலைப்புகளில் அடங்கக் காணலாம்.

தங்கப்பாவின் கட்டுரையில் தமிழனுக்கு இனவுணர்வில்லையே என்ற கவலை காணப்படுகிறது. அவரது கட்டுரையில் ஒருசில நம்மால் ஏற்கஇயலாத புரிதல்கள் இருக்கின்றன. உதாரணமாக தமிழ்ப் பகைவர்களின் கையிலிருந்து கேள்களின்

கைகளுக்கு ஆட்சி மாறியிருக்கிறது என்ற அவதானிப்பு. தமிழ்ப் பகைவர், கேளிர் என்பதை மிகவும் சுருக்கிப் பார்க்கிறார். இக்கேள்களின் ஆட்சியில்தான் முன்னர் தமிழை வீழ்த்தி ஆங்கிலம் மேன்மைபெற வழி வகுக்கப்பட்டது என்பதையும், இன்று உலகமயமாக்கல் தமிழகத்தில் விரிவுபெறப் பாதைகள் திறந்து விடப்படுகின்றன என்பதையும் மறந்து எழுதுகின்றார். அழிக்கும் கொள்ளிகளில் எந்தக் கொள்ளி பெரியது என்ற ஆராய்ச்சி தேவையில்லை.

2. என்னைப் பொறுத்தவரை இத்தனைக் கேள்விகள் கூடத் தேவையில்லை. அடிப்படைப் பிரச்சனைகள் மூன்றுதான்.

1. தமிழனின் இனவுணர்வின்மையும் தனது நாகரிகம் பற்றி அறியாமையும்
2. இன்றைய தமிழ்க் கல்வித்துறை, இலக்கியத் துறைகளின் போக்கு
3. அமெரிக்காவின் ஆதிக்கப்போக்கும், அதற்குக்கருவியாக இருக்கின்ற உலகமயமாக்கமும் அதன் விளைவுகளும்

தமிழனின் இனவுணர்வின்மை வரலாற்றுப் புகழ்பெற்றது. 'தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்று பாடினார் நாமக்கல்லார். அவர் குறிப்பிடும் தமிழனின் தனிக்குணம், என்றைக்குமே அவனுக்கு இனவுணர்வு கிடையாது என்பதுதான் என்று நினைக்கிறேன். தங்கப்பா சொல்வது போல இயல்பாகக் காணப்பட வேண்டிய இனப்பற்று என்பது இன்றைக்குத் தமிழர்களிடம் இல்லை. இயல்பாக வரவேண்டியதை எப்படிக் கற்றுக்கொடுப்பது? ஏன் அவர்களிடம் இயல்பாகவே தமிழின் மீது அக்கறை இல்லை?

தமிழ்நாடு ஏறத்தாழ கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்க முதலாக அந்நியக் கலாச்சாரத்தின் ஆட்சிக்குட்பட்டு அதன் ஆற்றல்கள் மங்கி விட்டன. தெலுங்கும் மராட்டியும் கன்னடமும் சமஸ்கிருதமும் அதன் ஆட்சிமொழிகளாகி அதை மயக்கிவிட்டன. இனவுணர்வின்மையின் அடிப்படைக் காரணம் இதுதான். ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளாக அடிமையாக இருக்கும் ஓரினம் எப்படி இனவுணர்வோடு இருக்கமுடியும்? முதலில் துருக்கர் ஆட்சி, பிறகு விஜயநகர ஆட்சி, பிறகு நாயக்கர் (கன்னடநாயக்கர்கள், தெலுங்கு நாயக்கர்கள்) ஆட்சி, ஒருசில பகுதிகளில் மராட்டியர் ஆட்சி, பிறகு டச்சுக்கார, போர்ச்சுகீசிய, பிரெஞ்சுக்கார ஐரோப்பியர் ஆட்சி, பிறகு ஆங்கிலேயர் ஆட்சி என எழுநூறு ஆண்டுகளாக அடிமையாக இருந்தவன் தமிழன். பக்கத்திலுள்ள கேரளமோ கன்னடநாடோ ஆந்திரமோ இவ்வளவு காலம் அடிமைப்பட்டிருந்ததில்லை. அவை ஆதிக்கம் செலுத்தும் நாடுகளாகவே பல காலம் இருந்தன. 1947இல் விடுதலை பெற்ற பிறகாவது தமிழ் இன அக்கறை ஏற்பட்டிருக்க வேண்டும். அது ஏற்படாதவாறு 'தேசிய' நலனில் அக்கறை காட்டிய காங்கிரஸ் பார்த்துக் கொண்டது. அதற்குப் பிறகு வந்த திராவிடக்கட்சிகள் சொந்த நலத்தையும், சொத்தையும் பெருக்குவதற்குக் காட்டிய அக்கறையில் நூற்றில் ஒரு பங்கு கூடத் தமிழரைப் பற்றியோ தமிழைப் பற்றியோ காட்டியதில்லை. இப்போது சொல்லவே தேவையில்லை. சொந்த நலத்தைப் பெருக்கிக் கொள்வதற்குத்தான் பன்னாட்டுக் குழுமங்களுக்குப் பாவாடை விரிக்கிறார்கள். இந்த நிலையில் இன்று இருக்கும் தமிழுணர்வு என்பதே எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இதைப் பற்றிக் கவலைப்படுவது மிகை என்றும் தோன்றுகிறது.

வரலாறு என்பது ஆதிக்கத்திலுள்ளவர்கள் புனையும் கட்டுக்கதை என்பார்கள். விடுதலை பெற்ற பிறகு இன்று வரை பள்ளிகளில் நடத்தப்படும் வரலாறு என்பது உலக நாகரிகத்திற்கோ இந்தியப் பண்பாட்டிற்கோ தமிழனின் கலாச்சாரப் பங்களிப்பை உணர்த்துவதாக அமையவில்லை. வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கிறது அது.

3. இருந்தாலும் தமிழுக்கும் ஒரு தனிக்குணம் இருக்கிறது. *எவ்வளவு மோதல்கள், அழிவுக்காரணிகள் வந்தாலும் அவற்றையெல்லாம் தாண்டி தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் தன்மை. இந்தத் தன்மையால் தான் தமிழ் இன்னும் பிழைத்திருக்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் முயற்சியால் அல்ல.* தமிழனுக்குப் பொதுநலனில் என்றுமே அக்கறை கிடையாது. பல நூற்றாண்டு அடிமைத்தனத்தின் காரணமாக அவனுக்கு எப்போதும் மாற்று நாகரிகம், மாற்றுமொழி, மாற்றார் மேல் ஒரு வாய்பிளந்த தாழ்வுணர்ச்சி. அந்தத் தாழ்வுணர்ச்சியின் காரணமாக அன்றுமுதல் இன்றுவரை பிறருக்கு வாழ வழியமைத்துக் கொடுத்தும், தன்னையும் தன் இனத்தையும் தாழ்த்திக் கொண்டும் இருக்கிறான். ஆகவே (தங்கப்பா சொல்வதுபோல) ஒரு கன்னடனின், அல்லது இந்திக்காரனின் இனவுணர்வு அவனுக்கு எங்கே வரப்போகிறது? ஆனால் இதனால் தமிழ் அழிந்துவிடப் போவதில்லை. அதன் 'தக்க வைத்துக் கொள்ளும் சக்தி' அதைக் காப்பாற்றும். அல்லது இப்படிப்பட்ட இனவுணர்வற்ற மக்களின் மொழி அவர்களுடைய சிந்தனையின்மையால் அழிந்து போகுமானால் அதை எப்படித்தான் காப்பாற்றுவது? போகட்டுமே! உலகில் எத்தனையோ நாகரிகங்கள் இருந்து காலப்போக்கில் அழிந்து போயிருக்கின்றன. *ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களிடையே வெற்று உலகாயதப் போக்குச் சார்ந்த கேளிக்கை மனப்பான்மையும், வெற்றுப் பிழைப்பு வாதமும் தோன்றிவிடும் போது அந்த நாகரிகம் அழிந்துதான் தீரும்.* இன்று தமிழர்களிடையே இத்தகைய மனப்பான்மைதான் காணப்படுகிறது.

4. தமிழர்களின் இனவுணர்வின்மைக்குக் காரணமாக நாம் அடுத்த பிரச்சினையாகிய தமிழ் இலக்கிய உலகு, கல்வித்துறை இரண்டிலும் காணப்படும் நடுத்தரத் தன்மையைப் பற்றி விவாதிக்கலாம். இந்த நடுத்தரத் தன்மை நம்மை மிகவும் அச்சுறுத்துகின்ற ஒன்று. *எல்லாநிலைகளிலும் ஆழமான அறிவற்றவர்களும், பிழைப்புவாதிகளுமே புகுந்து உயர்தரத்தினை எதிர்க்கவும், மோசமான தரத்திலுள்ள (இலக்கியம் என்ற மகுடம் சூட்டி அவர்களால் பாராட்டப்படுகின்ற) விடயங்களைப் புகுத்தவும் செய்கிறார்கள். அவர்களுடைய பாசிசம் நம்மைப்பேசவிடாமல் ஆக்கிவிடுகின்றது.* உதாரணமாக நான்நான்கைந்தாண்டுகளுக்கு முன் தமிழ் ஆராய்ச்சித் துறையின் மோசமான நிலை பற்றிக் கட்டுரை படித்த போது (அது தமிழ் நேயத்தில் வெளிவந்தது) அதற்குக் கிடைத்த எதிர்வினைகள் அச்சமூட்டுவனவாக இருந்தன. பிறமொழிகளில் செயல்படுத்தும் நிறுவனங்கள் நன்கு செயல்படுகின்றன. சான்றாக அலியாஸ் ஃப்ராங்காய் நிறுவனம் வகுத்துள்ள ஃபிரெஞ்சினைத்தான் கற்பிக்க, பேச முடியும். அதன் தரத்தினை நிர்ணயப்படுத்தி இருக்கிறார்கள் அவர்கள். ஆனால் தமிழைத் தரப்படுத்த எந்த நிறுவனம் இருக்கிறது? என்னவிதமான தமிழ் தொலைக்காட்சிகளில் ('கேள்' களின் தொலைக்காட்சிகள் உட்பட) பயன்படுத்தப்படுகிறது? ஏன் இப்படித் தமிழைக் கடித்துத் துப்புகிறார்கள்? (இந்தி மொழியையோ உருதுவையோ பயன்படுத்தும் தொலைக்காட்சிகளில் இப்படியில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இந்தி நான் அறிந்த மொழி என்பதால் இதனை அனுபவபூர்வமாகச் சொல்ல முடியும்). தமிழைத் தரப்படுத்துவதற்காக ஏற்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவை கற்பிக்கும் நிறுவனங்கள் ஆகிவிட்டன.

தூயதமிழ்வாதிகளும் அவர்களால் இயன்ற அளவு தமிழைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொலைநோக்கற்று வெறும் வார்த்தை அளவிலேயே நின்று

சொல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். சொற்களை விடக் கருத்து முக்கியம் என்பதையும், மொழியின் அமைப்பு முக்கியம் என்பதையும் அவர்களுக்கு யார் உணர்த்துவது? வணிகக்கல்வி நிறுவனங்கள் மோசமான வணிகநிறுவனங்கள் ஆகிவிட்டன. ஆகவே தமிழை ஒழுங்காகக் கற்பிக்கும் ஆசிரியர்களும், ஆர்வத்துடன் கற்கும் மாணவர்களும் பெரும்பாலும் இன்று இல்லை. முன்பெல்லாம் இருந்ததை விட இன்று பி.லிட். எம்.ஏ (தமிழ்) படிக்கும் மாணவர்கள் (தொலைக்காட்சி, அஞ்சல்வழிக் கல்வி உட்பட) மிக அதிகம். ஆனால் எல்லாரும் எப்படியாவது ஒரு 'ஓலை' வாங்கிவிட்டால் 'வேலை' கிடைத்து விடும் என்ற நோக்கில் வருகிறார்களே அன்றி ஆர்வத்தோடும் பற்றோடும் தமிழ் கற்பதற்கு அல்ல. அதனால் பி.எச்.டி படித்தவனுக்குக் கூட பிழையின்றித் தமிழ் எழுதத் தெரியாது என்று சொல்லும் நிலை இன்றைக்கு. அடுத்த படியாக இன்னொரு பிரச்சினையையும் இங்கு ஆராயலாம். கடந்த ஐம்பதாண்டுகளாக இன்று வரை தமிழ் ஆசிரியர்களாக இருப்பவர்கள் ஏதேனும் ஒருநிலையில் பார்ப்பனர்களை எதிர்கொள்ள வேண்டி வந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நான் யோசித்துப் பார்ப்பதுண்டு: பார்ப்பனர்களுக்கு ஏன் தமிழின் பேரில் இவ்வளவு பகைமையுணர்ச்சி? (ஒருசில 'நல்ல' பார்ப்பனர்களை – தமிழுக்கு உண்மையிலேயே பாடுபட்டுள்ளவர்களை இங்குக் குறிப்பிடவில்லை). வேறு பல காரணங்கள் இருந்தாலும், ஒரு முக்கியக் காரணம் அவர்களுடைய பிழைப்பு வாதம் என்று தோன்றுகிறது. 'பிழைப்புக்காக நான் எல்.கே.ஜி. முதலாகவே ஆங்கிலமோ, பிரெஞ்சோ, என்ன மொழியாவது படித்து அமெரிக்காவுக்குப் போவேன், நீ ஏன் அதை எதிர்க்கிறாய்' என்று கேட்கிறது. முன்பு சமஸ்கிருதம் படித்தால் பிழைப்பு, அப்போது சமஸ்கிருதம் தேவமொழி. இப்போது ஆங்கிலம் படித்தால் பிழைப்பு. ஏனென்றால் அது பன்னாட்டு நிறுவனங்களின் 'உலக' மொழி. 'அதை படிப்பதை விட்டுத் தமிழ் தமிழ் என்று பேசி என்ன லாபம்? முதலில் வயிற்றுப் பிழைப்பைப் பார். பிறகுதான் கலாச்சாரம். மண்ணாங்கட்டி எல்லாம்'. இன்னொரு காரணம் ஆதிக்கம். முன்பு சமஸ்கிருதம் என்ற பேரைச் சொல்லி, கடவுளின் பேரைச் சொல்லி ஆதிக்கம் செய்ய முடிந்தது. இப்போது அது முடியவில்லை. ஆகவே ஆதிக்கத்திற்கு உகந்த ஆங்கிலத்தைக் கையிலெடுத்துக் கொண்டார்கள். மேலும் முட்டாள்கள் இருக்கும் வரைதானே ஆதிக்கம் செய்யமுடியும். இவ்வளவு நூற்றாண்டுகளாகத் தமிழர் அடிமைப்பட்டுக் கிடந்த போது பார்ப்பனர்களின் நிலை என்ன? யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுக்குக் குடைப்பிடித்து வாழ்த்துப் பாடி தங்களை உயர்த்திக் கொண்டது ஒன்றுதான். *இப்படித் துதிபாடியே பிழைப்பு நடத்திப் பிறர் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த கூட்டத்தை 'இப்போது உன் ஆதிக்கத்தை விட்டுவிடு' என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளுமா?* இன்றைக்கு அதன் பிழைப்புக்கு ஏற்றமாதிரியாகப் பன்னாட்டுக் குழுமங்கள் இருக்கின்றன. 'இங்கு இட ஒதுக்கீட்டை நீ அமுல்படுத்தினால் என்ன? நாங்கள் அமெரிக்கா போவோம், ஜெர்மனிக்குப் போவோம், ஜப்பானுக்குப் போவோம். அப்படிப் போவதற்கு வாய்ப்பான அகில இந்திய மேலாண்மை நிறுவனங்கள், இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்றவற்றில் நீ இட ஒதுக்கீடு கொண்டு வந்தால் எதிர்ப்போம். சாதாரண பஞ்சாயத்துப் பள்ளியில் படிப்பவனுக்கு நீ இட ஒதுக்கீடு தந்தால் எங்களுக்குக் கவலையில்லை. அதில் படிப்பவன் எவனும் எங்களுக்குப் போட்டியாக வரப்போவதில்லை. ஆனால் உயர் நிறுவனங்களுக்கு வராதே'. முட்டாள்களாக மக்களை வைத்திருப்பதற்கு என்ன என்ன வழிமுறைகள் உண்டோ அத்தனையையும் கையாளத் தயாராக இருக்கிறார்கள் இன்றைய பார்ப்பன அறிவுஜீவிகள். உதாரணமாக தலித்துகளோடு சேர்ந்து கொண்டு 'நாங்கள் ஒன்றும் தப்பு செய்யவில்லை, எல்லாம் பார்ப்பனர் அல்லாத மேல்சாதிக்-

காரர்கள்தான் உங்களை ஒடுக்குகிறார்கள்' என்பது போன்ற வாதங்களைச் சொல்லித் தங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

5. தமிழ் நாகரிகம் இருக்கட்டும். கொஞ்சம் உலகத்தைப் பற்றியும் கவலைப்பட்டாக வேண்டும். உலகத்தில்தானே தமிழ்நாடு இருக்கிறது? உலகத்தை இன்று மிகவும் அச்சுறுத்துகின்ற விடயங்கள் இரண்டு. ஒன்று சுற்றுச் சூழல் மாசுபாடு. இன்னொன்று மாற்று ஆற்றலுக்கு வழி வகுக்காமல் / வழியற்ற நிலையில் அணுக்கூடங்களைப் பெருக்கிச் செல்வது. அறிவுஜீவிகள் உட்பட எவரும் இவையிரண்டையும் தீவிரமான பிரச்சினைகளாகவே எடுத்துக்கொள்ளவில்லை. இவற்றால் இன்னும் ஐம்பது வருடங்களுக்கேனும் உலகமே பிழைத்திருக்குமா, அல்லது அழிந்து விடுமா என்னும் கேள்விகள் எழுந்துள்ளன. முதலில் உலகத்தைக் காப்பாற்றுங்கள், பிறகு தமிழ் நாகரிகத்தைப் பிறர் ஏற்றுக் கொள்வதைப் பற்றிக் கவலைப்படலாம். *அமெரிக்காவின் ஆதிக்கத்தை, அதற்குச் சார்பான பன்னாட்டுக் குழுமங்களின் ஆதிக்கத்தை, அதற்குச் சார்பான உலகமயமாக்கல் கொள்கையை, அதற்குச் சார்பான பார்ப்பனியத்தை, அதற்குச்சார்பான இன்றைய இந்திய – தமிழக அரசியல்வாதிகளை, அவர்களது சாதி அரசியலை, எதை வேண்டுமானாலும் 'இனாமாக' வழங்கி ஆட்சியைப் பிடிக்கும் அவர்களது பேர அரசியலை - இவற்றையெல்லாம் முதலில் எப்படி எதிர்த்து வீழ்த்துவது என்று யோசியுங்கள். பின்னால் தன்னால் நல்லது கிடைக்கும்.*

24. ஒரு நம்பிக்கை நட்சத்திரத்திற்காக நானும் காத்திருக்கிறேன்

புதிய மாதவி, மும்பை

தமிழ்நேயம் 26 வழங்கிய தமிழ் நாகரிகத்திற்கு என்ன எதிர்காலம்? என்ற கட்டுரையையும் பல்துறை அறிஞர்களின் எதிர்வினைகளையும் வாசித்தேன். எத்துணைச் சிறந்ததாக இருந்தாலும் பழமையைப் பாதுகாக்கத்தான் முடியுமே ஒழிய பழைமையுடன் வாழ்வது என்பது உயிருள்ள எந்த இயக்கத்திற்கும் இயலாத காரியம். நம்மில் பலர் உலகமயமாதலான அமெரிக்கமயமாதலை வன்மையாகக்கண்டிக்கிறோம். பொதுத்துறைகளில் தனியார் முதலீடுகளை எதிர்க்கிறோம். ஆனால் இவை எல்லாமே அவரவர் வாழ்வில் இல்லாமல் வெறும் ஏட்டில் மட்டுமே இருக்கும் அர்த்தமில்லாத எழுத்துக்களாய் மாறிவிட்டதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் அமெரிக்கத் தமிழன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் அல்லது அமெரிக்கக் கனவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதையும் அமெரிக்கக் கனவுகள் திட்டமிடப்பட்டே இல்லங்களில் நீருற்றி வளர்க்கப்படுவதையும் மறுக்கமுடியுமா? உலகமயமாதலை எதிர்க்கலாம், ஆனால் உலகமயமாதலில் இருந்து தப்பிக்க முடியாது என்பதையும் நாம் உணர்ந்தே இருக்கிறோம்.

அமெரிக்க வல்லரசுக்கு இந்திய மண் ஒரு சந்தைக்கடை. அதுவும் தண்ணீரிலிருந்து அணு ஆயுதங்கள் வரை கடைப்பிரப்பி விற்று தன் வல்லரசு நிலையை நிலைநிறுத்திக் கொள்ள கிடைத்திருக்கும் சந்தை. இந்தச் சந்தை வியாபாரத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூறுபோட்டு விற்கப்படுகிறது ஒப்பந்தங்களின் பெயரில் இந்தியத் தேசிய இனங்களின் வாழ்க்கை. இந்த மாற்றத்தை தங்களின் வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்குமான உத்திரவாதமாக எண்ணும் ஒரு தலைமுறை இந்தியாவின் எல்லா தேசிய இனங்களிடமும் வேரூன்றி விட்டதை மாற்றுவதற்கான எந்த நடைமுறை உத்திகளும் நம்மிடம் இல்லை!. இந்திய அரசியலில் இந்திய இறையாண்மையை ஏற்றுக் கொண்டு இவைகளுக்கான தீர்வுகளை எழுதுவதும் பேசுவதும் எந்தளவுக்கு நம்பகத்தன்மை உடையதாக இருக்க முடியும்? என்று எண்ணிப் பாருங்கள்.

தமிழ் மொழி மீது யாருக்கும் பற்றுதல் குறைந்து விடவில்லை. எந்த ஒரு மொழி தன் மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழிகாட்ட முடியவில்லையோ அந்த மொழியின் வழக்கு அதே விகிதத்தில் சரிந்து விடும். இதுதானே மொழியுடன் இணைந்த மனிதர்களின் வரலாறு. தமிழ் மொழிக் கல்வி நம் தமிழர்களுக்கு சுயமரியாதையான வாழ்க்கையைக் கொடுக்கும் என்ற உத்திரவாதமில்லாமல் தமிழ் மொழி நாகரிகத்தைப் பற்றி மட்டுமே பேசுவதும் தமிழ் மொழியில் கல்வி பற்றிப் பேசுவதும் நடைமுறைக்கு ஒத்துவருமா?

அரசு அதிகாரத்தை உடனடி நோக்கமாக இறுதி நோக்கமாகவோ கொள்ளாத தமிழ்த் தேசிய அரசியல்தான் தமிழ் நாகரிகத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும் மேம்படுத்திக் கொள்வதற்குமான அரசியல்' என்று ஒரு கருத்தை முன்வைக்கிறீர்கள்.

சமத்துவநிலை உருவாக வேண்டுமென்றால் அதிகாரம் மறுக்கப்பட்ட மக்கள் அதைக் கைப்பற்றுவதே ஒரேவழி என்றார் டாக்டர் அம்பேத்கர். எவ்வகையான முன்னேற்றத்திற்கும் அரசியல் அதிகாரமே திறவுகோல். தமிழ்நாட்டில் திராவிட அரசியலின் வரலாறு கற்றுக் கொடுத்த மிகமோசமான படிப்பினைக் காரணமாக இப்படி ஒரு கருத்து ஏற்பட்டிருக்கலாம்

என்று எண்ணத் தோன்றுகிறது. 'பெரியாரை விட்டு வெளியேறி அரசதிகாரப் போட்டியில் பங்கேற்க முடிவு செய்த போதே தங்களிடம் எஞ்சியிருந்த நல்லம்சங்களையும் தொலைத்து விட்டார்கள். அதிகாரத்தை விரட்டிப் பிடிக்கிறவனுக்குத் தத்துவம் ஒரு பொருட்டல்ல, தத்துவமின்மையே தத்துவமாகக் கொண்டுவிட்ட கூக்குரல்காரர்கள்' என்று கவிதா சரண் சொல்லியிருப்பதும் ஈண்டு நினைவு கூறத்தக்கது. (க.ச. இதழ் மார்ச் - ஜுன் 2006). தமிழ் நாகரிகத்தைக் காப்பாற்ற எந்தத் தீர்வையும் அரசியல், அரசு அதிகாரம் கைவரப் பெறாமல் மக்கள் மன்றத்தில் கொண்டு வருவது சாத்தியமா? தமிழ்த் தேசிய அரசியலில், தமிழர் நாகரிகத்தின் அடையாளங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை என்ன? இன்னும் எத்தனைக் காலத்திற்கு தமிழ்ச்சமுதாயத்தில் சாதிகள் இல்லை என்று ஒரு கவர்ச்சியான விளம்பரத்தைச் சொல்லிக்கொண்டிருக்க முடியும்? ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையைப் பற்றித் தெளிவான கருத்தை முன்வைக்காத எந்த அரசியலையும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனி ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை எப்போதும் ஒதுக்கப்பட்ட சேரிகளிலேயே தொடரும் என்றால் அவர்களுக்குத் தமிழ்த் தேசியமும் ஒன்றுதான், தேசியமில்லாத இந்தியத்தேசியமும் ஒன்றுதான். கவர்ச்சிகரமான பேச்சுகளிலும், எழுத்துகளிலும் ஒரு தலைமுறையின் வரலாறு திசைத்திருப்பப்பட்டு விட்டது. ஒரு தலைமுறையின் கனவுகள் தோற்றுப் போய்விட்டன. ஒரு தலைமுறையின் உழைப்பு வீணாகி விட்டது. நம்பகத்தன்மை என்பது எல்லா அரசியல், இயக்க வாழ்விலும் அர்த்தமிழந்து விட்டது. இச்சூழலில்தான் இவைகளுக்கு எல்லாம் தீர்வு சொல்வதுடன் தானே அதுவாக வாழ்ந்து காட்டும் ஒரு தலைமையின் தேவை இன்றைக்கு மிகவும் தேவை. அப்படி ஒரு சூழல் .. இருண்ட மேகங்கள் எப்போது வேண்டுமானாலும் மழை பொழியலாம் என்ற நம்பிக்கையுடன் ஒரு நம்பிக்கை நட்சத்திரத்திற்காக நானும் தமிழ்த் தேசியத்திற்காக காத்திருக்கிறேன் ...

இன்று கல்வி என்பது வேளாண்மையையும், உடல் உழைப்பையும் கேவலமாக எண்ணக் கூடிய ஒரு பண்பாட்டை மாணவர்கள் மத்தியில் விதைக்கின்றது. இதை நாம் ஏற்க முடியாது. - மு. குமரவேல்

தமிழ் கற்றால் அமெரிக்காவுக்குப் போக முடியாதென்று ஆங்கிலத்தை அரிச்சுவடியாகக் கற்பிக்க வகை செய்தது, புறநானூற்றுப் பெருமை பேசிக் கழித்த தமிழ் அதிகாரம் - ஜனகப்பிரியா

அந்தணரின் தொழில்களை பிறர் செய்யக்கூடாது என்ற தன்னல ஆதிக்கத்தை தொல்காப்பியம் ஏற்கவில்லை. - நாராயணசாமி

தலித்துகளின் எதிர்ப்புணர்வு ஆரியத்திற்கு எதிரானது மட்டுமல்ல, தமிழ் நாகரிகத்திற்கும் எதிரானது. இந்த எதிர்ப்புணர்வு மட்டும் தான் தலித்துகளின் நாகரீகமாக இருக்க முடியும். தமிழ், தலித் இரண்டையும் ஒரு அர்த்தத்தில் பார்த்தால் தான் தமிழ் நாகரீகம் தலித் நாகரீகமாகக் கருதப்படும்.

- முனைவர். மு. ஜீவா

ஒரு படையெடுப்பு போல பிற மாநிலத்தவர் இங்கு வந்து, இருக்கும் தொழில் அனைத்தும் உவந்து செய்து வளமுடன் வாழ்வதால், தமிழகத்தின் இன்றைய எல்லையே எதிர்காலத்தில் ஆபத்திற்குள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

- கு. முத்துராமலிங்கம்

ஜெயகாந்தனையோ, அசோகமித்திரனையோ, தி. ஜானகிராமனையோ, சிவகாமியையோ, இமையத்தையோ, ஜெயமோகனையோ தோழமை கொண்ட முதல்வர்கள் உண்டா? கம்பனைப் போற்றிய சடையப்ப வள்ளல் இன்று இல்லை. எழுத்தாளர்களைத் தங்களுக்கு பக்கவாத்தியக்காரர்களாக பார்க்க விரும்பும் அரசியல் நாகரீகம் தான் இன்று இருக்கிறது.- சு. வேணுகோபால்

எல்லா நிலைகளிலும் ஆழமான அறிவற்றவர்களும், பிழைப்பு வாதிகளுமே புகுந்து உயர்தரத்தினை எதிர்க்கவும், மோசமான தரத்திலுள்ள (இலக்கியம் என்ற மகுடம் சூட்டி அவர்களால் பாராட்டப்படுகின்ற) விடயங்களைப் புகுத்தவும் செய்கிறார்கள். அவர்களுடைய பாசிசம் நம்மை பேச விடாமல் ஆக்கி விடுகின்றது. - பேரா. க. பூர்ணச்சந்திரன்

ஆரியத்தைத் தூக்கி நிறுத்திய பார்ப்பனரல்லாத முடியுடை மன்னரும், குறுநில வேந்தரும், அதிகாரத்தில் உள்ளோரும், தமிழ் மறையான திருக்குறளை ஒரு தூணில் கூட செதுக்க முன்வரவில்லையே! - இ. ஜெ. சுந்தர் (எழில்)

ஆசிரியரும் வெளியிடுபவரும்
கி. பழனிச்சாமி (ஞானி)
24, வி.ஆர்.வி. நகர், ஞானாம்பிகை ஆலை அஞ்சல்,
கோயம்புத்தூர் - 641 021.
தொலைபேசி : 0422 - 2648119
முன் அட்டை ஓவியம் : பொன்ரகுநாதன்

அச்சாக்கம் : மயூரா அச்சகம், கோவை - 9